437

# KRISHNADEVA RAYA

BY
T. K. PAVALAR

ALLINAYAGAM CO.
ntadripet, MADRAS.

உ

வேலுமயிலுந் துணை

# கிருஷ்ணதேவ ராயர்

சதாவதானம்

தெ. கிருஷ்ணசாமிப் பாவலர்

எழுதியது

ஸ்ரீ வள்ளிநாயகம் கம்பெனி,

சிந்தாதிரிப்பேட்டை,

சென்னை.

PRINTED BY
P. R. RAMA IYAR AND CO.
MADRAS.

# முன்னுரை

கிருஷ்ணதேவராயர் என்பவர் இந்துதேச சரித்திரத்தில் மிகவும் புகழ் நிறைந்தவர். இவர் மஹா மண்டலேஸ்வரராய்த் தென்னிந்தியா முழுவதையும் மற்றும் வெளி நாடுகளையும் தமது ஆளுகைக் குட்படுத்தி அரசாண்ட தெலுங்கு மன்னர்களுள் மிகவும் கீர்த்திவாய்ந்தவர். இவ்வரிய வீரம் நிறைந்த மன்னருடைய சரிதம் இதுவரையில் தமிழில் வரவில்லை. யான் இதற்குமுன்னர் பலவாய ஆங்கில நூல்களின் ஆதரவைக்கொண்டு செஞ்சி மன்னனாகிய தேசிங்குராஜன், ஹைதர் அலி, சிவாஜி முதலான இந்திய வீரர்களின் சரிதங்களை வெளியிட்டபோது, அத்தகைய இந்திய வீரர்களின் உண்மைச்சரிதங்களை மேன்மேலும் எழுதும்படி என்னைத் தூண்டினோர் பலர். அக்கால், யான் மேலும் எந்த வீரனது சரிதத்தை எழுதுவது என்று யோசித்திருக்கும் தருணத்தில், என் நன்மையைக்கோரியவரும், நண்பர்களிடத்து மிக்க நண்புடையவரும், தமிழை வளர்க்கும் தண்ணருளாளரும் ஆகிய தமிழர் ஒருவர், 'கிருஷ்ணதேவராயர் சரிதத்தை எழுதுக' என்று எனக்கு ஆஞ்ஞையிட்டனர். அவர்தம் ஆஞ்ஞையின்படி இதனை யான் சென்றவருஷமே எழுதத்தொடங்கினேன் எனினும், இந்த அரசனைப்பற்றிய ஆதாரங்கள் பல அப்போது எனக்குக் கிடைக்காமற்போனதால், அவர் கட்டளையின்படிச் சென்ற வருஷத்திலேயே இதை முடித்து வெளியிட அசக்தனாயினேன். பலவாய சந்தேகங்களுக்கு இருப்பிடமாகிய இந்த மன்னனுடைய சரிதத்தைக் கிடைத்த பல

ஆதரவுகளைக்கொண்டு, இப்போது ஒருவாறு எழுதிமுடித்தேன். இந்தநூலை எழுதுங்காலத்தில், எனக்குப் போாதரவாக இருந்தநூல்கள், தெலுங்கில் வெளிவந்துள்ள கிருஷ்ணராயவிஜயம், ஸீவல்துரை யவர்களியற்றிய மறக்கப்பட்ட ராஜ்யம், ஸ்ரீமன்-ஜி. ஹரிசர்வோத்தமராவ் ஆங்கிலத்தில் எழுதிய கிருஷ்ணதேவராயர், ஸ்ரீமன்-பங்களூர். சூர்யநாராயணராவ் அவர்கள் இயற்றிய விஜயநகர ராஜ்யம், பிரஹ்மஸ்ரீ-S. கிருஷ்ணசாமி ஐயங்கார் இயற்றிய விஜயநகரசாஸ்திர ஆதாரங்கள் என்பன. இவற்றுடன் அந்நிய நாட்டு யாத்திரைக்காராகிய நூனிஸ், பார்போஸா, பெயிஸ், வார்த்திமன் முதலானோரது ஆதாரங்களும் சிலா சாஸனங்களும் பெரிதும் துணையாய் இருந்தன. இப்பதிப்புள் ஏதேனும் தவறுண்டாயின், அதை அறிவாளர் எனக்குத் தெரிவிப்பரேல், அத்தவறுகளை மறுபதிப்பில் திருத்திக்கொள்வதுடன் அன்னார்க்கு நன்றிபாராட்டவும் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரையில் யான் எழுதியநூல்களைத் தங்கள் பாடசாலைகளில் உப பாடங்களாகவைத்து, என்னைக் கௌரவம் செய்த உபாத்தியாயர்களுக்கு என் நன்றியைச் செலுத்துவதுடன், மேலும் அவர்கள் இந்தநூலையும் பெருமைப் படுத்துமாறு பெரிதும் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

5, உலகப்பமேஸ்திரிவீதி
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.

தே. கிருஷ்ணசாமிப்பாவலன்.

# கிருஷ்ணதேவ ராயர்

## 1—அதிகாரம்

### விஜய நகரத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியும்

தென்னிந்தியாவைப் பதின்மூன்றும் நூற்றுண்டில் பல சிற்றரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்களுள் பலமுள்ளவன், மற்றைய சிற்றரசர்களைத் தன்கீழ்ப்படுத்தி வந்தனன். அக்காலத்தில் தேகபலமும் துணைவன்மையும் உடைய பலரும் ஆட்சிபுரிய ஆவல் உள்ளவராயினர். அதனால், தேசத்தில் அமைதி என்பது இல்லையாயிற்று. எங்குக் காணினும் சண்டை சச்சரவுகளே விசேஷமாயின. இத்தகைய நிலைமையில், மஹமதியர்களும் நகரங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற பசி அதிகரித்தவராய், 1293-ம் வருஷத்தில் முதன்முதலாகத் தக்ஷிணபீட பூமியில் அடி எடுத்து வைத்தனர். அந்த வருஷத்தில் டில்லிபாக்ஷாவின் மைத்துனனுன அல்லாஉதீன் கில்ஜி என்பவன், நாலாயிரம் குதிரைப் படையுடனும், இரண்டாயிரம் காலாட்படையுடனும், யாதவர்களின் தலைநகரமாகிய தேவகிரிக்குவந்து அதை எதிர்த்தனன். அந்தப்போரில் மகமதியர் வெற்றி அடைந்தனர். அதனுல் அவர்கள், அத்தேவகிரியின் அரசனைக் கீழ்ப்படுத்தி, அவனைக் கப்பம் கட்டுமாறு கட்டளையிட்டு, அளவற்ற கொள்ளைப் பொருளுடனும், இந்துமன்னன் தந்த பலவாய வெகுமானங்க

ளுடனும், டில்லிக்கு மீண்டுபோயினர். தெற்குப் பக்கமாக அப்போது திறக்கப்பட்ட அவ்வழி இன்னும் மூடுபட வில்லை. அச்சம்பவம் நிகழ்ந்த சில காலங்களுக்குப் பின், அல்லாஉதீன் டில்லி சிம்மாஸனம் ஏறினன். அவன் டில்லிபாக்ஷா ஆனவுடன், தென்னிந்தியாவைக் கொள்ளை யடிக்குமாறு பலமுறை தன்படைகளை ஏவினன். 1308-ம் வருஷத்தில் அவனுடைய தளகர்த்தனை மாலிக்காபர் என்பவன், தேவகிரியை எதிர்த்துக் கொள்ளை அடித்தான். மேலும் அத்தளகர்த்தன் 1309-ம் வருஷம் வாரங்கல் என் னும் இடத்தை அடைந்து, அந்நகரத்தரசனைக் கீழ்ப்படுத் திக்கொண்டான். மறுவருடம் அவன், ஹோய்சாலர்க ளுடைய நகரமாகிய துவார சமுத்திரத்தை வசமாக்கிக் கொண்டு, ஹோய்சாலர் மன்னனாகிய மூன்றும் வீரவல் லாளனைச் சிறை வைத்தனன். அவன் நான்காவதுமுறை யாக 1312-ம் வருடம் தக்ஷிணத்தை நாடிவந்து, யாதவ வம்ஸத்துக் கடைசிமன்னனாகிய சங்கரன் என்பவனைக் கொன்றனன். அதன்பிறகு தேவகிரி என்னும் பட்ட ணம் மஹமதியரது முழுஆளுகைக்கு உள்ளாய்விட்டது. அவ்விடத்தில் டில்லிபாக்ஷா ஒரு மகமதியமன்னனை நிய மனம் செய்ய, அவன் டில்லிபாக்ஷாவின் ஆணையின்படி அவ்வூரை ஆண்டுவந்தனன்.

கில்ஜி வம்ஸத்தவரை 1320-ம் வருஷத்தில் டோக்லாக் வம்சத்தவர் வெற்றிகொண்டனர். அதனால் அந்த டோக் லாக் வம்சத்து முதல் அரசன், வாரங்கலை எதிர்த்துத் தன் வசமாக்கி, அதை டில்லி ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண் டனன். இங்ஙனமாகத் தென்னிந்தியாவில் தேவகிரி யாத வர்கள், வாரங்கல் காகதீயர், துவாரசமுத்திரம் ஹோய் சாலர் என்னும் மூன்று வம்ஸத்தவர் கைவசமிருந்த ஆட்சி, மகமதியர் வசமாயது.

1334-ம் வருஷத்தில், மகமத் என்பவன், காஜி டாக்லாக் என்னும் தன் தந்தைக்குப்பின் டில்லிபாதுஷா வாயினன். அந்தப் புதிய சுல்தான், தனது ஜன சம்மதமில்லாத ஆட்சியினுலும், மத்தியஸ்த சபை ஆட்சியினுலும், தனது மாகாண சிற்றரசர்களின் துவேஷத்தை அதிகரிக்கச் செய்துகொண்டான். அதனுல் அந்தச் சிற்றரசர்கள் அவனுக்கு அடங்காமல், அவனை எதிர்க்குமாறு கலகத்தை உண்டுபண்ணினர். அதனுல் கலகம் மேன்மேலும் அதிகரித்தது. உடனே ஒவ்வொரு மாகாணத்துச் சிற்றரசனும் தானே எவர்க்கும் அடங்காத தலைவனுய் விளங்கினன். டில்லிமன்னன், வங்காளம், முல்டான், கூர்ஜரம் என்னும் நாடுகளையும் இழந்தான். வாரங்கல் என்னும் இடத்திலோ, அவ்விடத்திலிருந்த இந்தியர் மஹமதிய சிற்றரசனை ஓட்டிவிட்டு, மீட்டும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தலாயினர். அப்போது, அஃதாவது 1347-ம் வருஷம் ஹாசன் கங்கு என்னும் ஒரு ஆப்கானிய அடிமை தக்ஷிணதேசத்திற்குத் தானே அரசன் என வெளிவந்தனன். இங்ஙனம் எங்குப் பார்த்தாலும் அமைதி என்பதில்லாத நிலைமையில்,—டில்லி ராஜ்யம் பலவாருகச் சிதறுண்ட காலத்தில்—துங்கபத்திர நதிக்கு வடகரையில் உள்ள ஆனகுண்டா என்னும் சிறு ராஜ்யமானது, விஜய நகரம் என்னும் பெரிய ராஜ்யமாக ஓங்கியது.

வாரங்கல் என்னும் நகரம் 1321-ம் வருஷத்தில் மகமதியர் அதீனமானபோது, அவர்கள் அதன் அரசனைக் கைதியாக்கிவிட்டனர். அப்போது ஹக்கா என்றும் புக்கா என்றும் பெயருடையவர்களான அம்மன்னனின் சகோதரர் இருவரும், தங்கள் கஜானு நிர்வாக வேலையைவிட்டு, உடனே பார்ப்பவர்கள் கண்ணெதிர்ப்படாமல் ஓட்டம் பிடித்தனர். அங்ஙனம் சென்ற அவ்விருவரும் ஆனகுண்

டாவை அடைந்து, அந்த ஊரை ஆண்டுவந்த தலைவனிடம் உத்யோகத்தில் அமர்ந்தனர். அவர்கள் நாளுக்குநாள் தங்கள் திறமையை மேலும் மேலும் காட்டிவந்ததால், அந்தத்தலைவன் அவர்கள் இருவரையும் முறையே தனக்கு மந்திரியாகவும், பொக்கிஷதாரியாகவும் ஏற்றுக்கொண்டனன். பிறகு, ஏறக்குறைய 1330-ம் வருஷத்தில் மஹமத் டோக்லாக் என்பவன் ஆனகொண்டாவை எதிர்த்தனன். அந்தப்போரில் அந்த ஊரின் அரசன் கொல்லப்பட்டான். அதனால் ஹக்கா, புக்கா என்னும் இருவரும் சிறையாளராக டில்லிக்குக் கொண்டுபோகப்பட்டனர். ஆனகுண்டாவில், மகமத் டோக்லாக் ஒரு மகமதிய கவர்னரை ஏற்பாடுசெய்து, தன் ஊருக்குத் திரும்பினான். சிலநாட்களுக்குப்பின் அந்த மஹமத் என்பவன், அதிக தூரத்தில் இருக்கும் அந்த ஆனகுண்டாவைப் பகைவர் கைப்பற்றாத விதம் பாதுகாப்பது அரிதென உணர்ந்து, அதை டில்லியில் சிறையாக இருந்த ஹக்கா என்பானிடம் ஒப்புவித்து, மஹமதிய கவர்னரை வரவழைத்துக்கொண்டான். சிறையினின்றும் வெளிவந்த ஹக்கா என்போன் டில்லியை விட்டு ஆனகுண்டா என்னும் நகரை அடைந்து, மைசூரைச் சார்ந்த சிருங்கேரிமடத்தின் அதிபதியாய் விளங்கிய ஸ்ரீவித்யாரண்ய சுவாமிகள் உதவியால், விஜயநகரம் என்னும் நகரத்தினை நூதனமாக அமைத்து, ஹரிஹரன் என்னும் புதிய பெயருடன் அதனை ஆட்சி செய்யத் தொடங்கினன்.

இந்த ஹரிஹரன் சங்கம வம்ஸத்தைச் சேர்ந்தவன். சங்கம வம்ஸத்தவர், யது வம்ஸத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களுக்கும் தேவகிரியை ஆண்டுவந்த யாதவர்களுக்கும் நெருங்கிய பந்துத்துவம் உண்டு. துவார சமுத்ரத்தை யாண்டுவந்த ஹோய்சாலர்களும், சங்கம வம்ஸத்தா

ருடன் கொள்வினை கொடுவினை உடையவர்களாக விளங்கினர். இந்தச் சங்கமவம்ஸத்து அரசர்கள், அரசர்கள் என்னும் பட்டப்பெயரைப் புனைந்துகொள்ள நெடுநாள் அஞ்சினர். அவர்கள் அப்போது சாதாரண தலைவர்களைப் போல் உடையார், மஹா மண்டலேஸ்வரர் என்னும் பட்டங்களைப் புனைந்தே ராஜ்யபாரம் செய்துவந்தனர். ஹரிஹரன் 1353-ம் வருஷத்தில் ஆவிதுறந்தான். அவனுக்குப் பின் அவ்வருஷத்திலேயே அவனுடைய இளைய சகோதரனாகிய புக்கா என்பவன் பட்டத்திற்கு வந்தனன்.

புக்கா என்பவனுக்கு ஆறு மைந்தர்கள் இருந்தனர். அவர்களுள் மூத்தவனாகிய விருபண்ணன் என்போனைப் புக்கா என்னும் அரசன், பேனுகொண்டா என்னும் பதிக்குச் சிற்றரசனாக்கினன்; தனது இரண்டாம் புதல்வனாகிய மல்லிநாதன் என்போனை மைசூருக்குக் கிழக்காகவுள்ள ராஜ்யத்திற்குத் தலைவனாக்கினன்; மூன்ருவது குமாரனை உதயகிரிக்கு அரசனாகச் செய்தனன். இந்தப்பிள்ளைகள் ஆறுபேரிலும் மிகவும் தைர்யமும் போர்த்திறமையும் உடையவன் கம்பண்ணன் என்னும் நான்காவது புதல்வனாவன். புக்கா, விஜயநகரத்து அதிபதியாய் விளங்கிய போது, அவன் தன் மைந்தனும் அந்தக் கம்பண்ணன் என்போனை ஒரு சிறுபடையுடன் அப்போது மதுரையை ஆண்டுவந்த மஹமதிய சிற்றரசனுடன் போர்செய்து வருமாறு ஏவினன். கம்பண்ணன் மதுரைக்குச்சென்று, மகமதிய மன்னனைக் கண்டோர் வியக்குமாறு போர்செய்து வெற்றிகொண்டு, தமிழ்நாட்டின் தனித்தலைமை மன்னனாக ஆட்சிபுரிந்தனன்.

1376-ம் வருஷத்தில் புக்கா என்பவன் இறந்துபோயினன். அப்போது அவனுடைய மைந்தருள் ஒருவனான இரண்டாம் ஹரிஹரன் என்பான் பட்டம் எய்தினன்.

இந்த ஹரிஹரன் என்பவனே முதன்முதலாக ராஜா என்னும் பட்டத்தைப் புனைந்துகொண்டவன். இவன், யாதவ மன்னனாகிய ராமதேவனின் பேத்தியாகிய மல்லதேவி என்பவளை மணம் செய்துகொண்டான். இவன் மிக்க மதப்பற்றுள்ளவன். இவன், தென்னிந்தியாவின் கண்ணுள்ள திருப்பதிகள்தோறும் யாத்திரைசெய்து, அவ்வத் திருக்கோயிலிலும் பலவாய தானங்களைச் செய்தான். அக்காலத்தில் இவனுடைய ஆட்சி தெற்கே கும்பகோணம் வரையிலும் விஸ்தரித்திருந்தது. இவன் பம்பதேவி என்னும் மற்றொரு மாதையும் மணம் செய்துகொண்டு மிகவும் அமைதியுடன் ஆட்சிபுரிந்து வந்தனன். இவனுக்கு, மல்லதேவியின் வயிற்றில், விரூபாக்ஷன், தேவராயன் என்னும் இரண்டு பிள்ளைகளும், பம்பதேவியின் வயிற்றில் இரண்டாம் புக்கா என்போனும் பிறந்தார்கள். தேவராயன், தன்னுடைய தந்தை உயிருடன் இருக்கும்போது, உதயகிரியின் கவர்னராக இருந்து, அந்த ஊரை ஆண்டுவந்தனன். இரண்டாம் புக்கா என்பவனோ, மூலவேயி மாகாணத்தின் ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டனன். விரூபாக்ஷன், அந்த விஜயநகர ராஜ்யத்தின் தென்கோடிக்கண்உள்ள ராஜ்யங்களைச் சிறப்புடன் ஆட்சிசெய்து, 'தொண்டை, சோழ, பாண்டியநாடுகளின் தலைவன்' எனும் புகழ்தற்கரிய பட்டத்தையும் பெற்றனன்.

1404-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 31உ இரண்டாம் ஹரிஹரன் வானுடைடைந்தான். அவனுக்குப்பின் இரண்டாம் புக்கா என்பவன் அரசனாயினன். அவனை அவனது சகோதரனாகிய விரூபாக்ஷன் என்பான் எதிர்த்து, ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டனன். விரூபாக்ஷன் தான் கைப்பற்றிய ராஜ்யத்தைச் சிறிதுகாலம் ஆண்டுவருவதற்குள், அவனால் அபஜயமடைந்த இரண்டாம் புக்கா, அதிகமான

துணைவன்மையுடன் அவனை எதிர்த்து, மீட்டும் விஜயநகர ராஜ்யத்தின் அதிபதியாக விளங்கினன். அவன் அந்த ராஜ்யபாரத்தை அதிகநாள் சுமக்கவில்லை. அவன் சிம்மாஸனமேறிய ஒருவருஷத்திற்குள், அஃதாவது 1406-ம் வருஷம் நவம்பர்மீ அவனுடைய சகோதரன் தேவராயன் என்போன், அந்த அரசுக்குரியவன் ஆயினன். தேவராயன் பட்டத்திற்கு வந்ததும், அவன் தக்ஷிண தேசத்துச் சுல்த்தானுடன் போர்செய்யத் தலைப்பட்டான். அந்தப்போரில் அவன் தோல்வியடைந்து, கடைசியாக மஹமதிய மன்னனிடம் எவரும் அருவருக்கத்தக்க நிபந்தனை அடங்கிய உடன்படிக்கை செய்துகொண்டான். அந்த நிபந்தனையை நிறைவேற்ற, அவன் தன்மகளை அந்த மஹமதிய மன்னனுக்கு மணம்செய்தும் கொடுத்தனன். என்றாலும், தேவராயன் தனக்கு நேர்ந்த அந்தப் பேரவமானத்தை எண்ணி எண்ணி மனநோகாமல் இருக்கவில்லை. அவன் இப்படியே சிலகாலம் பெரிதும் வருந்தி, அந்த அவமானத்தைப் போக்கிக்கொள்ள ஏற்றசமயத்தை எதிர்பார்த்திருந்தான். அதனால் அவன், தன் ஆளுகை முடிவாகும் வருஷத்தில், அதிக தைர்யம் உடையவனாய்ப் படைகளை அணிவகுத்துச் சென்று பிஜபூரென்னும் தேசத்தை எதிர்த்தனன். அப்போது மகமதியரும் அதிக வன்மையுடன் போர்செய்தனர். அந்தப்போரில் தேவராயன் வெற்றி அடைந்தனன்; மகமதியர் அதிக நஷ்டம் அடைந்தனர்.


தேவராயன் இறந்த 1417-ம் வருஷத்தில், அவனுடைய மகன் விஜயராயன் என்பான் ராஜ்யாதிபதி ஆயினன். அவன் அந்த ராஜ்யத்தை இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆளவில்லை. அவனுக்குப்பின், அவனுடைய மகன் இரண்டாம் தேவராயன் என்பவன் பட்டத்தமர்ந்தனன்.

தேவராயன் பட்டத்திற்கு வந்த 1420-ம் வருஷம், ஒரு விசேஷ வருஷம் என்றே குறிப்பிடவேண்டும். அவன் மற்றைய தன் முன்னோர்களைப்போல், சாதாரண தன்மையை வகித்தவன் அல்லன். பெரிய சக்கரவர்த்தி யெனவும், அஞ்சா நெஞ்சமும் அருங்குணமும் அமைந்தவனெனவும் புகழப்பட்டவன். இவன் தன்னுடைய புயவன்மையால் பல மன்னரையும் வெற்றிகொண்டு, தனது ராஜ்யத்தை வெகுதூரம் விஸ்தரிக்கச்செய்தனன். அனேகமாக இவன் தென்னிந்தியா முழுவதையும் தன் ஆளுகைக் குட்படுத்திக் கொண்டான். இவனுக்கு, இலங்கை, பெகு, புலிகட், கொல்லம் முதலான இடங்களையாண்ட மன்னர்கள் கப்பமும் கட்டிவந்தனர். இவன் தன் ஆளுகையில் தனது விஜயநகர ராஜ்யத்தை மிகவும் புகழ்ச்சிக்குரித்தானதாகச்செய்து, 1446-ம் வருஷத்தில், விண்ணுலகடைந்தான்.

இரண்டாம் தேவராயன் விண்ணுலகடைந்தபின், அவனுடைய மகன், மல்லிகார்ச்சுனன் என்பான் சக்கரவர்த்தியாயினன். இவன் தன் தந்தையைப்போல் அவ்வளவு சிறந்த போர்வீரன் அல்லனாயினும், இவன், தன்னை எதிர்த்த ஒரிசா அரசனையும், கல்பர்கா என்னும் இடத்தை ஆண்ட மகமதியனையும் வெற்றிகொண்டு, தன் முன்னோர்கள் அரும்பாடுபட்டு ஏற்படுத்திய ராஜ்யத்தைப் பகைவர் வசமாகாவண்ணம் பாதுகாத்தனன். 1467-ம் வருஷத்தில் இவன் ஆயுள் முடிவாக, இவனுக்குப்பின், இவனுடைய சகோதரன் விரூபாக்ஷன் என்பான் அரசனாயினன். மல்லிகார்ச்சுனனிடம் பிரதம மந்திரியாகவும், சேனாதிபதியாகவும் இருந்த சாளுவநரசிம்மன் என்பவனே இந்த இரண்டாம் விரூபாக்ஷனுக்கும் பிரதம மந்திரியாகவும் சேனாதிபதியாகவும் இருந்தனன்.

சாலுவ நரசிம்மன் தன்னுடைய புத்திவன்மையால், ஜனங்களுடைய நன்மதிப்பைப் பெற்றனன். அவன் ஜீவகாருண்யமும், கோடாத நீதிமானுகவும் இருந்ததால், அவனே ஜனங்கள் எல்லோரும் தந்தைபோல் பாராட்டத் தலைப்பட்டனர். அந்த ராஜ்யத்தில் இருந்த பெரிய மனிதர்களும் அவனிடத்தில் அதிக விஸ்வாசம் உடையவராய் இருந்தனர். இரண்டாம் விரூபாக்ஷனும் இவனைப் பெரிதும் மதித்துவந்தனன். இங்ஙனமாய நிலைமையில், விரூபாக்ஷனுக்கும், அவனுடைய மூத்த குமாரனுக்கும் மிகவும் பகையேற்பட்டது. அந்தப்பகை காரணமாக, அவனுடைய மூத்தமகன், அவனைக்கொன்று சிம்மாஸன மேறினன். தீமைவிதைத்தால் தீமையே விளையும் என்ற மூதுரைக்கு இலக்காக அத்தந்தையைக் கொன்ற பாதகனை அவனுடையதம்பி கொலைசெய்து, பட்டத்தைக் கைப்பற்றினன். இங்ஙனம் பட்டத்துக்கு வந்த மன்னனே பிரவுடதேவராயன் என்பவன். இவனது முழுப்பெயர் தேவராய மஹாராய விரூபாக்ஷராய பிரவுட தேவராய மஹாராயன் என்பதாகும். அஃதாவது, விரூபாக்ஷனின் புதல்வனும், தேவராயனின் பேரனுமாகிய பிரவுட தேவராயன் என்பது பொருளாகும். இவன் பட்டத்திற்கு வந்ததும், எல்லோரையும் கொடுமையாக நடத்தினன். ஜனங்கள் அனைவரும் இவன் பெயரைக்கேட்ட அளவிலேயே அச்சங்கொள்ளத் தலைப்பட்டனர். நரைத்திருந்த பெரியோர் அனைவரும் அவனை வெறுத்தனர். அப்போது ஜனங்களிடத்துச் செல்வாக்குடைய சாலுவநரசிம்மன், அந்நகரத்துப் பெரியோரையும் ஜனங்களையும் பக்கபலமாகக் கொண்டு, அந்த பிரவுட தேவராயனைச் சிம்மாதனத்தினின்றும் நீக்கி ராஜ்யத்தை அபகரித்துக்கொண்டு தானே சக்கரவர்த்தியாயினன்.

## சாலுவ வம்சாவளி




# 2—அதிகாரம்

### சாளுவ துளுவ வம்சங்கள்

---

முன் அத்தியாயத்திற் கூறியபடி, சங்கம வம்சத்தவரைப் புறக்கணித்த சாலுவ நரசிம்மன் என்பான், சாலுவ வம்சத்தைச் சேர்ந்தவனாவன். சாலுவர் சந்திரவம்சத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களும் சங்கம வம்சத்தவரைப்போல், யதுகுலத்தில் உற்பவித்தோர் எனப்படுவதால், அவர்களுக்கும் சங்கமருக்கும் நெருங்கிய உறவு உண்டென்பதில் ஐயமே இல்லை. சாலுவர் முதன் முத

லாகப் பதின்மூன்ரும் நூற்ருண்டில்தான் சரித்திரசம்பந் தப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுள் ஒரு பிரிவினர், பதினுன்காம் நூற்ருண்டின் மத்தியகாலத்தில், கீழ்க்கரைக்கண்ணுள்ள சில பட்டினங்களை, விஜயநகராத் தாசனின் தலைமைக்குள்ளானவர்களாய் இருந்து அரசு புரிந்துவந்தனர். ஆகவே, முதன் முதலாக ராஜ்யாபகாரம் செய்த சாலுவ நரசிம்மன் என்பான், அந்தப் பிரிவின ரைச் சேர்ந்தவன் என்றே நாம் சொல்லவேண்டும்.

இந்தச் சிறுபிரிவினர், சரித்திரத்தில் அதிகமாய் விவ கரிக்கப்பட வில்லையாயினும், அப்பிரிவில்வந்த சாலுவ மங்கு என்பான் ஒருவனைமாத்திரம் திறமையுடையவன் எனச் சரித்திரங்கள் புகழ்ந்துரைக்கின்றன. இந்தச் சாலுவ மங்கு என்பான், ஜயமுனிபாரதம் புகழ்ந்துகூறும் வங்கி தேவன் பௌத்திரனும் குண்டனுடைய புத்திரனுமாகிய மங்கு என்பனே. இவன் சம்பாராயனுடைய தளகர்த்தனுய்த் தென்னுட்டை யாண்டுவந்த சுல்தானுடன் மிக்க வீரந் தோன்ற போர்புரிந்து, அவனை வென்று, "சம்பாராயன் அரசைஸ்தாபித்தவன்" என்னும் பட்டத்தையும் பெற்ற னன். இவனே அக்காலத்தில் மதுரையை ஆண்ட மகமதிய சுல்தானைக் கொன்றவன். சம்பாராயன் என்பான் சாலுவ வம்சத்தாரது பெரும் பிரிவிற் சேர்ந்தவன். அவன், சாலுவ மங்குவின் துணைகொண்டே கல்பர்காவின் சுல் தானையும் மற்றைய மகமதிய மன்னர்களையும் வெற்றி கொண்டு, எவரும் மதிக்கும் பெருங் கீர்த்தி யடைந்தனன்.

சாலுவவம்சச் சிறு பிரிவில் தோன்றிய அந்தச் சாலுவ நரசிம்மன் பட்டத்திற்குவந்ததும், தன் பிரஜைகளிடத்தில் அத்தியந்த விஸ்வாசமுடன், அவர்களைத் தன்னுயிர்போல் பாவித்து, அவர்களுக்காவனவற்றை அவ்வப்போது தவருமல் செய்து வந்தனன். அதனுல், அந்த ராஜ்யத்

துள்ளார் அனைவரும் அவனை முன்னிலும் பன்மடங் கதிக மாகப்பாராட்டத் தொடங்கினர். அவன் பட்டத்திற்கு வந்தகாலத்தில்,நியாயவரம்பு மீறித்தன் நாட்டுஜனங்களின் நிலங்களை அபகரித்துக்கொண்ட சில கனவான்களைத்தண் டித்து, அவரவர்களுடைய நிலங்களை மீட்டுத்தந்தனன். மேலும் அவன், அவரவர் உத்தியோக முறைமைக்கேற்ப வந்தனுபசாரங்கள் செய்யவேண்டிய திருத்தங்களையும் பிறவற்றையும் செய்து, ராஜ்யத்தைப் பலப்படுத்தினன். இங்ஙனம் இவன் செய்து வந்ததால், உதயகிரி, கொண்ட வேடு, ரேச்சூர் என்னும் மூன்று பெரிய கோட்டைகள் தவிர, இவன் முன்னோர்கள் இழந்த மற்றைய ஊர்கள் எல்லாம் இவன் வசமாயின.

சாலுவநரசிம்மனுக்கு இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்தன. அவைபிறந்த சிலவருடங்களுக்குப்பின், அவன் தனக்கு இறுதிநாள் வந்து விட்டது தெரிந்து தன் இளங் குமரர் இருவரையும், தன்னுடைய நம்பிக்கையுள்ள தனது பிரதானியாகிய நரசநாய்க்கன் என்பவனிடம் ஒப்ப டைத்து, அவர்களைப் பாதுகாக்கும் படியாகவேண்டி, உயிர் விட்டனன். நரசநாய்க்கன், அப்பிள்ளைகளுள் மூத்த வன் சிறுவனாயிருந்ததால், அவனைப்பெயரளவில் ராஜ்யாதி பதியாகச் செய்து, மற்றைய ராஜ்யகார்யங்களை எல்லாம் தானேநடத்திவந்தனன். இங்ஙனம் நடைபெற்று வரு கையில், அவனுடைய பகைவனாகிய திம்மர்சன் என்பவன், அந்தக்குழந்தை மன்னனைக் கொன்று, அக்கொலையைச் செய்தவன் நரசநாய்க்கன்றான் என்னும் பொய்க் கதை யைக்கட்டிவிட்டனன். என்றாலும் ஜனங்கள் அனைவரும் நரசநாய்க்கனுடைய பெருந்தன்மையையும், உயர்குணத் தையும் மிகவுந் தெரிந்தவராய் இருந்ததால், அவர்கள் அப்பொய்க்கதையை நம்பவில்லை. அதன் பிறகு, நரச

நாய்க்கன் சாலுவநரசிம்மனது இரண்டாங் குமாரனுகிய தர்மராயன் என்போனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைத்தனன். இந்தத்தர்மராயன் என்பவனே, சரித்திரக் காரர்களால் தர்மராயன் என்றும் இம்மடி நர சிம்மன் என்றும் சொல்லப்படுவோன்.

இம்மடி நரசிம்மனும், தனது தமையன்போல் பெய ரளவில் அரசனுக இருந்தானேயொழிய அவனுக்கு ராஜ் யத்தில் எவ்வித அதிகாரமும் கிடையாது. எல்லா அதிகார மும்நரசநாய்க்கனிடமே இருந்தன. அப்போது, சுற்றுப் பக்கங்களில் உள்ள மன்னர் பலரும், அதுதான் ராஜ்யத் தைக் கைப்பற்றிக் கொள்வதற்கேற்ற சமயமாகும் என்று எண்ணி, மன்னனை எதிர்க்கத்தொடங்கினர். அதுகண்ட நரசநாய்க்கன், தன் புத்திசாதுர்யத்தால் அம்மன்னர்களை எல்லாம் வென்று, அவர்களைக் கீழ்ப்படியச்செய்து, ராஜ் யத்தைச் சமாதான நிலைமைக்குக் கொண்டுவந்தான். இங் ஙனம் அவன் அம்மன்னர்களுடன் போர்செய்து வெற்றி கொண்டகாலையில், அவனுடைய பெயர் எங்கும் பரவத் தொடங்கியது. அவனை எல்லோரும் மஹாவீரன் எனக் கொண்டாடினர். அந்த ராஜ்யத்தில் அவனுக்குத்தான் சர்வாதிகாரமும் இருந்தன. அந்த மந்திரி நரசநாய்க்க னுடையபுகழ் எங்கும் பரவவே, அவனுடைய பிரதானிக ளுள் சிலர் "குழந்தை மன்னனைக் கொன்று, தாமே எங்கள் அரசனுய் வரவேண்டும்." என்றுவேண்டி, அவன் மனதைப் பலவாறு கலைத்தனர். முற்றத்துறந்த முனி வரும் ஓர்கால் ஆசைவயப்படுவார் என்றால், சாதாரண மனிதன் ஆசைக்கு அடிமையாவதைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? தன் பிரதானிகள் கூறிய மாற்றத்தைக் கேட்ட நரசநாய்க்கன் தன் இயற்கையின் மாறியவனுய், ஆசையென்னும் பேய்வாய்ப்பட்டுக் கொண்டமரெட்டி

என்பவனை அழைத்துக் குழந்தை மன்னனைக் கொன்றுவரு மாறு கட்டளையிட்டனன். செட்டியும் மந்திரி சொல்லிய படியே அந்தக் கொடிய செயலில் தலையிட்டுக் குழந்தை யைக் கொன்றான். பின் நரசநாய்க்கன் ஏறக்குறைய 1501 அல்லது 1502-ம் வருஷத்தில் தானே விஜயநகரத் தரசனாய்த் துளுவவம்சத்தை நிலைநாட்டினன்.

## துளுவ வம்சாவளி

சந்திரன்
|
புத்தன்
|
புரூருவன்
|
ஆயு
|
யயாதி
|
யது — தூர்வசு (துளுவன்)
|
தேவகி = திம்மன் அல்லது முதல் திருமலைதேவராயன்.
|
ஈஸ்வரன் = பக்கம்மாள்
|
நரசன் (நரசிம்மன்) — முதல் திருமலைதேவன்

நரசன் (நரசிம்மன்):
- திப்பம்மாள் மகன் புஜபல ராயன்
- நாகம்மாள் மகன் கிருஷ்ண தேவராயன்
- உபாம்பிகை மகன் அச்சுத ராயன்

இங்ஙனம், விஜயநகர ராஜ்யந்தோன்றி வளர்ச்சி அடைவதற்குள், அதனை இருவர் அபகரித்துக் கொண்டனர். அங்ஙனம் அபகரிக்கப்பட்டதும், அந்த ராஜ்யம் மேலும் உன்னத நிலைமைக்கு வரப் பெரிய காரணமாய் இருந்தது. ஆகவே, அதனை இரண்டாவதாக அபகரித்துக் கொண்ட நரசநாய்க்கனைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். அந்த நரசநாய்க்கன் என்பான் துளுவ வம்சத்தைச் சேர்ந்தவன். துளுவர்கள், யதுவின் இளைய சகோதரனும் தூர்வசுவின் பாரம்பரையில் வந்தவர்களாவர். அந்த வம்சத்தில் உதித்து, முதன் முதலாகச் சரித்திரசம்பந்தப் பட்டவன் திம்மன் என்பவனாகும். இவன் விஜயநகர ராஜ்யத்திற்குட்பட்ட பெரிய போர்த்திறமமைந்த மன்னனாக விளங்கியவன். இந்தத் திம்மன் என்பவன் தேவகி என்பவளை மணந்து, ஈஸ்வரன் என்பவனைப் பெற்றான். இந்த ஈஸ்வரன் என்பவன் சாலுவ நரசிம்மனுக்கு முதல் பிரதானியாக விளங்கியவனே. ஈஸ்வரன் பக்கம்மாள் என்பவளை மணந்து, துளுவவம்ச ஸ்தாபகனாகிய நரசனைப் பெற்றெடுத்தான். நரசநாய்க்கன் என்பவன் புஜபல பராக்ரமம் மிக்கவன். அவன் குண்டலேஸ்வர மன்னனைக் கீழ்ப்படுத்தி வித்யாபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டனன். அன்றியும் அவன் நிறைவெள்ளம் ஓடும் காவேரியாற்றைக் கடந்து சென்று சீரங்கப் பட்டணத்து மன்னனாகிய ஹவனேந்திரன் என்பானைப் போரில் கைதியாக்கிக்கொண்டு, அந்தப் பட்டணத்தைத் தனதாளுகையின் கீழ்க்கொண்டு வந்ததுடன், சேரசோழ பாண்டியர்களையும் வெற்றிகொண்டு, மதுராபுரி மஹாராஜன் என்னும் பட்டத்தையும் அடைந்தனன். மேலும் அவன் கங்கைக்கரைக்கண்ணுள்ள ஊர்கள் முதல் லங்கைவரையிலும் உள்ள ஊர்களையும், கீழ்க்கரை நாடுதொட்டு மேற்குமலைப் பிரதேசம்வரையில் உள்ள ஊர்

களையும் தன் ஆளுகைக்குட்படுத்தி, ஆங்காங்குத் தன் அதிகாரத்தைச் செலுத்திவந்தனன்.

அத்தகைய வீரன், 1503-ம் வருஷம் காலன் அதிகாரத்துக்குள்ளாய், விண்ணுடைந்தனன். அவனுக்குப் பின் அவனுடைய மூத்தமகன், புஜபலராவ் என்னும் பெயருடைய வீரநரசிம்மன் என்பான் பட்டத்திற்கு வந்தான். இந்த வீரநரசிம்மன் என்பவன் திப்பம்மாள் வயிற்றிற் பிறந்தவன். இவன் அந்த ராஜ்யத்தைச் சிறிது காலமே ஆட்சிபுரிந்தான். அதற்குள், அஃதாவது 1509-ம் வருஷம், அவனும் தென்னுடுபோய்ச் சேர்ந்தான். அவனுக்குப்பின், திருமகளும் நிலமகளும் தாண்டவம் செய் தோளாண்மைமிக்க நமது கதாநாயகனும் கிருஷ்ணதேவ ராயன் என்னும் அவன் சகோதரன் பட்டத்திற்குவந்தான்.

## 3—அதிகாரம்

### கிருஷ்ணதேவராயன் இளமை

நமது கதாநாயகன், கி. பி. 1484-ம் வருஷம் நரசிம்மனது இரண்டாமனைவியாகிய நாகம்மாள் வயிற்றிற்பிறந்தவன். கதைகள், நாகம்மாளை நரசிம்மனது வைப்பாட்டி என்று சொல்கின்றன. ஆனல், அதுவிஷயத்தை வற்புறுத்த இதுவரை தக்க ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. நரசிம்மன், தனது இரண்டாம் குமாரனிடத்தில் அதிக பிரியம் உடையவனாய் இருந்தான் என்பதும், கிருஷ்ணராயனும் தனது தந்தையிடத்து மிக்க பக்தியுடையவனாய் இருந்தனன் என்பதும், சாசனங்களுள் கிருஷ்ணராயன் தன் தந்தையை "செல்லப்பர்" என்றும் "தன்பிள்ளையைக்கட்டி அணைக்கத் தலைவணங்கும்—மரியாதைக்

குரிய—தந்தை" என்றும் அழைத்தல் காணப்படுத லானும் விளங்கும்.

நாம், நமது கதாநாயகனது உண்மைச் சரிதத்தை ஆராயப் புகுவதற்குமுன், கதைகள் அவனுக்கும் அவன் தந்தைக்கும் உள்ள சம்பந்தந்தைப்பற்றி என்ன சொல்கின்றன என்பதை ஆராய்வோம். "வீரநரசிம்மனது தாயும், நரசிம்மனது முதன்மனைவியுமாகிய திப்பம்மாள் என்பாள், தன்புருஷன் தனது சககளத்தி மகனிடத்து வைத்துள்ள மிக்க விஸ்வாசத்தைக்கண்டு, பொறாமை கொண்டனள். அதனால் அவள், எங்கே தனது புருஷன் தன் பிள்ளையைவிட்டுத் தனது மாற்றாள் பிள்ளைக்குப் பட்டங்கட்டி விடப்போகிறானோ என்று பயந்து, கிருஷ்ண ராயனை ரகசியமாகக் கொல்லப் பலவாய வழிகளைத்தேடினள். இதுவிஷயத்தை, விவேக மிக்க சாலுவ திம்மன் என்னும் மந்திரி உணர்ந்து, கிருஷ்ணராயனை அகால மரணத்திற் குள்ளாகாதபடிக்காத்தனன்" என்று ஒருகதை சொல்கிறது.

மற்றொருகதை சொல்வது:—நரசிம்மராயன் தனது மரணத்தருவாயில், தன் இரண்டாங் குமாரனுக்கே பட்டங் கட்டவேண்டும் என்ற எண்ணமுடையவனாய், தனக்குப்பின் பட்டத்தை முறைமையில் அடைய எங்கே தனது மூத்தமகன் முயற்சிசெய்வானோ என்று பயந்து, ஓர் தந்திரோபாயம் செய்தனன். அந்த உபாயத்தின்படி அவன் தனது இரண்டு பிள்ளைகளையும் தன்முன் அழைத்து, எவன் தனதுவிரலில் இருக்கும் மோதிரத்தைக் கழற்றிக்கொள்கிறானோ, அவனே ராஜ்யத்திற்கு உரியவனாவன் எனக் கூறினன். வீரநரசிம்மன் அதைக்கேட்டு, தனது தந்தையின் விரலாழியைக் கழற்றவேண்டிய முயற்சிகள் செய்தும், அவனால் அம்மோதிரத்தைக் கழற்ற முடியவில்லை. பிறகு

கிருஷ்ணராயன் தனது தந்தையின் விரலைத் துண்டித்து, அம்மோதிரத்தை எடுத்துக்கொண்டனன். அதனால் நரசிம்மன் தனது இரண்டாம் புதல்வனையே ராஜ்யாதிபதியாக்கினன்—என்பதே.

மேற்கூறிய இரண்டு கதைகளும் சரித்திரத்தில் எவ்வாற்றானும் சம்பந்தப்படாவாயினும், நரசிம்மன் கிருஷ்ணதேவராயனிடத்து வைத்திருந்த விஸ்வாசத்தின் பெருக்கையும், அவன் நியாயமுறையில் வீரநரசிம்மனுக்குத் தரவேண்டிய ராஜ்யத்தைக் கிருஷ்ணராயனுக்குத் தந்தவிஷயத்தையும் வலியுறுத்துவனவாகும்.

அங்ஙனமே தெலுங்கு கிருஷ்ணராயவிஜயமும் கிருஷ்ணராயன் தன் தந்தை உயிருடன் இருக்கும்போதே சக்கரவர்த்தியாக விளங்கினன் என்று சொல்கிறது. இவ்விஷயமனைத்தும் சரித்திரப்போக்கில் உண்மையெனக் கொள்வதற்கே இல்லை.

வீரநரசிம்மன் பட்டத்திற்கு வந்ததும், தன் தாயைப்போல் பொறாமைக்குணம் மிக்கவனாய், தனது சகோதரனைக் கொல்வதற்கு ஏற்ற சூழ்ச்சிகளைத் தேடினன். அவனுக்கு ஐந்துவயதுள்ள புதல்வன் ஒருவன் இருந்தான். அவனைத் தனக்குப்பின் பட்டத்திற் குரியவனாகச்செய்ய வேண்டும் என்பது வீரநரசிம்மனுடைய எண்ணம். கிருஷ்ணராயனைக் கொலை செய்துவிட்டால், தனக்குப்பின் விவாதமின்றியே தன் மகன் பட்டத்திற்கு வருவான் என்று நினைத்து, அவன் தனது திறமைமிக்க மந்திரி சாளுவ திம்மனை அழைத்து, கிருஷ்ணராயனைக்கொன்று, கொன்றதற்கோர் அறிகுறி கொண்டுவரும்படிக் கட்டளையிட்டனன். மந்திரி சாளுவதிம்மன், நன்னெறி திறம்பாதவனாய், ராஜ்ய முன்னேற்றத்தில் தன் முழுக்கருத்தையும் செலுத்தியவனாயுமிருந்தால், வீரநரசிம்மன் சொல்லுக்

கிசைந்தவன்போல், அக்கொடுந் தொழிற்குச் சம்மதித்து, கிருஷ்ணராயனைத் தன் இல்லத்து மறைத்து ஒரு வெள்ளாட்டின் கண்ணைப் பிடுங்கிவந்து, வீரநரசிம்மனுக்குக் காட்டிக் கிருஷ்ணராயனைக் கொன்றதாகச் சொல்லினன். வீரநரசிம்மன் வெள்ளாட்டின் கண்ணைக்கண்ட அளவிலேயே, கிருஷ்ணராயன் இறந்தான் என்று மகிழ்வெய்தி, சந்தோஷமாக உயிர்விட்டனன்.

வீரநரசிம்மன் இறந்ததும், அவன் குமாரனைப்பார்க்கிலும் கிருஷ்ணராயன் புத்திசாதுர்யமும் புயவன்மையும், உடையவனாய் விளங்கியதால், அவனையே சாலுவதிம்மன் அரசனாக்கினன். கிருஷ்ணராயன் சிம்மாசனமேறியதும், உடனே தனது சிற்றப்பனையும் மூன்று சகோதரர்களையும் சிறையில் அடைத்தனன். அவன் பட்டத்திற்கு வந்தபோது சிறுவனாக இருந்ததால் அவனுக்கு ராஜீய வியவகாரங்களைக் கற்றுக்கொள்ள ஏறக்குறைய ஒன்றரை வருஷம் பிடித்தது. அவன் வயதிலும் திறமையிலும் மிக்க தனது மந்திரி சாலுவதிம்மனிடத்தில், ராஜநீதிகளைப் பல காலம் பயின்றான். அப்பயிற்சிகொண்டு, அவன் மற்றைய மன்னர்களைப் பார்க்கிலும் அரசநீதியில் மிகவும் கைவந்தவனாய், மன்னுயிர் ஓம்புவதில், தன்னுயிரையும் திரணமாக மதித்தான். மேலும் அவன், ராஜ்யமுறைமை முற்றும் கற்றுத் தேர்ந்தபின்னர் தனது உத்யோகஸ்தரைத் தனது ராணுவத்தின் முழுத்தொகையையும், அதற்குச் செலவாகும் தொகையையும் கணக்கெடுக்குமாறு கட்டளையிட்டனன். தன் கைவசமிருந்த கோட்டைகள், ஊர்கள் முதலியவற்றில் வரும் வருமானப்பட்டியையும், தனது பொக்கிஷத்தில் உள்ள திரவிய அளவையும், ஆபரணங்களின் பட்டியையும் உடனே எழுதுமாறு ஆஞ்ஞையிட்டனன். உடனே மந்திரிகள் முதலானோர், அப்படியே அவன்

கேட்டபடி ராஜாங்க வரவுசெலவுகளைத் தயார் செய்து வந்து காட்டினர் கிருஷ்ணதேவராயன். அவர்கள் தயார் செய்த கணக்கை நம்பவில்லையாயினும், அதனைக் கருவியாகக்கொண்டு, எல்லாவற்றையும் ஒழுங்குசெய்தனன்.

கிருஷ்ணதேவன் ஆளுகை முழுவதிலும், அவனுக்குச் சாளுவதிம்மன் மந்திரியாக இருந்ததுமாத்திரம் அல்லாமல், அவனுக்கு ஆசிரியனாகவும், ராஜாங்கத்தை நடத்த ஓர் வழிகாட்டியாகவும் விளங்கினன். அதனுற்ருன், கிருஷ்ண தேவராயனுடைய ஆளுகை மிகவும் சீரும் சிறப்பும் பொருந்தியதாய், மற்றையமன்னர் அனைவரையும் அடி பணியச் செய்திருந்தது. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில், நமது சரித்திரத்தை நிறுத்தி அத்தகைய மேன்மைவாய்ந்த மந்திரியின் வரலாற்றைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

ராபர்ட் சிவல் என்னும் சரித்திரக்காரர், சாளுவதிம்மன், சாளுவவம்சத்தைச் சேர்ந்தவன் என்று அபிப்பிராயப்படுகிருர். லீவிஸ்ரைஸ் என்னும் மற்ருெரு பிரபல சரித்திரக்காரரும் அத்தகைய கொள்கையையே வற்புறுத்துகிருர். அவ்விருவருடைய போதாதாரத்தை உண்மையெனக் கொள்வோமாயின், நாம் சாளுவதிம்மனை க்ஷத்திரியன் என்றே கொள்ளவேண்டும்.

கிருஷ்ணதேவராயனது மங்களகிரி சாஸனத்தில், நதீந்தில அப்பன் என்பான் சாளுவதிம்மனது சகோதரியின் புதல்வனும் மருகனுமாவன் என எழுதப்பட்டுள்ளது. இந்த நதீந்தில அப்பனுக்கு, மதயகரி மல்லண்ண என்னும் தெலுங்குகவி, தாம் இயற்றிய 'ராஜசேகர சரித்திரம்' என்னும் நூலை உரிமையாக்கியுள்ளனர். மதயகரி மல்லண்ண என்னும் கவிசிரேஷ்டர் கிருஷ்ணராயனது சமஸ்தானவித்வான்கள் எண்மருள் ஒருவர் ஆவர். அவர், முற்கூறிய தமது நூலுள் நதீந்தில அப்பனை நியோகி

பிராமணன் என்று சொல்லியுள்ளனர். இவர்கூற்று உண்மையாயின், சாளுவதிம்மனும் நியோகி பிராமணவம்ஸத்தில் உற்பவித்தவன் என்றே சொல்லல்வேண்டும். இதனை வற்புறுத்த, சிம்மாசல சாஸனம் சாளுவதிம்மனை "துவிஜர்களுள் சிரேஷ்டன்" என்று கூறுகிறது. துவிஜன் என்னும்சொல், மற்றைய உபவீதம்தரித்த ஜாதியரைக் குறிக்குமேனும், சிறப்பாகப் பிராமண வம்சத்தவரையே குறிக்கும் ஆதலால், அந்தச் சாஸனம் பிராமணனையே துவிஜன் எனக் கூறுகிறது என்று கொள்வது இழுக்காகாது. இவ்வாதாரங்களேயன்றி, நூனிஸ் என்னும் பிரபல சரித்திரக்காரரும், இக்கொள்கையை வற்புறுத்தி யுள்ளார். அவர், சாளுவதிம்மனும் அவன் பிள்ளைகளும் தன்னை எதிர்த்துப் போர்செய்ய வந்தகாலத்தில் அவர்களைக் கைதிகளாக்கி, விஜயநகரத்து ராஜநீதி பிராமணர்களைக் கொல்லலாகாதெனக் கூறியுள்ளதால், அந்நீதிக்கடங்கி, ராயன் அவர்களைக் கொல்லாது, கண்ணைக்குத்திக் கடுஞ்சிறையில் வைத்ததாக எழுதியுள்ளார். இதனுல் நாம் சிறிதும் ஐயம் இன்றிச் சாளுவ திம்மனைப் பிராமண வம்ஸத்தில் உற்பவித்தவன் என்றே கொள்ளவேண்டும்.

கிருஷ்ணராயனது மங்களகிரிசாஸனம், சாளுவதிம்மனைக் கௌந்தின்யகுலத்தில் உதித்த ரசன் என்பவனின் புதல்வனும், வேமனின் பௌத்திரனுமாவன் என்றும், அவன்மனைவி லக்ஷ்மி என்பாளும் அந்தக்குலத்தையே சேர்ந்தவள் என்றும் சொல்கிறது. கதைகள், திம்மன் தனது சிறுவயதில் மாடுமேய்ப்பவனுக இருந்ததாகவும், அதன்பின் அவன் குத்தி, சந்திரகிரி, ரேனுகொண்டா முதலான இடங்களையாண்ட மன்னருடன் பழகி அவர்கள் தயவால் உயர்பதவியை அடைந்ததாகவும் சொல்கின்றன. ஆனுல், அவ்விஷயங்களை உண்மையெனக்

கொள்வதற்கேற்ற மற்றைய ஆதாரங்கள் ஒன்றுமில்லை ஆதலால், பொதுவில் திம்மன் மிக்க புத்திகூர்மை யுடையவனாக இருந்ததால், விஜயநகரத்தரசர்களின் நன் மதிப்பைப் பெற்றனன் என்றே கொள்ளவேண்டும்.

அவன் முதன் முதலாக, துளுவவம்சஸ்தாபகனாகிய நரசராயனது ஆளுகையில், விஜயநகரராஜ்ய உத்யோகத் தில் அமர்ந்து, உடனே பிரதமமந்திரி உத்யோகத்தில் உயர்த்தப்பட்டான். நரசராயன், திம்மனிடத்து அள வில்லாத நம்பிக்கை வைத்திருந்தான். அதனாற்றான் அவன் தனது மரணத்தருவாயில், கிருஷ்ணராயனைத் திம்ம னிடம் ஒப்புவித்தான். கிருஷ்ணராயன் இளமையி லிருந்து திம்மனிடம் வளர்ந்ததால், அவன் சகல வித்தை களையும் பூரணமாகத் திம்மனிடம் கற்றுத்தேர்ந்த ஞான முடையவனாய், அகிலம் புகழும் அதிபதியாயினன். அவன் திம்மனிடத்து வைத்துள்ள அன்பின் பெருக்கிற்கு அளவே இல்லை. அதனாற்றான் அவன் திம்மனை "அப்பாஜி" (தந்தையவர்கள்) என்று அழைப்பது. திம்மன் நரசராய னிடத்தும், கிருஷ்ணராயனிடத்தும் பிரதான மந்திரியாக விளங்கியிருந்தபோதிலும், அவன் கிருஷ்ணராயன் ஆளுகை யில் மிக்க செல்வாக்குடையவனாகவும், மரியாதைக்குரிய னாகவும் விளங்கினன். கிருஷ்ணராயன், திம்மனை "சாலு வாதிபரே" என்று அழைப்பது வழக்கமென்றும், மற் றைய உத்யோகஸ்தர் அனைவரும் திம்மனைக் கண்டவிடத் துச் சலாம் செய்வார்கள் என்றும் பெயிஸ் என்னும் சரித்திரக்காரர் சொல்கிறார்.

# 4— அதிகாரம்

## கிருஷ்ணராயன் போரும் வெற்றியும்

---

கிருஷ்ணராயன் முதன்முதலாக உம்மத்தூர் மன்னனாகிய கங்கராஜனைப் போரில் வென்றனன். உம்மத்தூர் என்பது மைசூர் ராஜதானியில் உள்ளது. அதன் முக்கியமான ராணுவஸ்தலம் கொயம்பத்தூர் ஜில்லாவில் உள்ள கொல்லேகாலம் என்னும் ஊருக்கு வடகிழக்கே ஒன்பது மைல் தூரத்தில் உள்ள காவேரி வீழ்ச்சிக்கண்ணிருக்கும் சிவனசமுத்திரம் என்னும் தீவில் இருந்தது. சாஸன ஆராய்ச்சிக்காரர், உம்மத்தூர் தலைவர்கள் விஜயநகர ராஜ்யத்தின் உத்தியோகஸ்தர் என்று சொல்கின்றனர். ஆனால், கி. பி. 1491-ம் வருஷத்துச் சாஸனமொன்று, உம்மத்தூர் தலைவனாகிய இம்மடிராய உடையாரின் புதல்வனாகிய நஞ்சராய உடையார் என்பவன், அரசபதவியில் இருந்தான் என்று சொல்லுகிறது. இதனால் 1491-ம் வருஷத்திலிருந்து அந்த உம்மத்தூர் தலைவர்கள் தாங்களே விஜயநகர ராஜ்யத்திற்குக் கீழ்ப்படாத தனித்தலைமை மன்னர்களாக விளங்கினர் என்பது தெரிகிறது. இதே விஷயத்தை, நஞ்சராயன் புதல்வனது 1499–1500-ம் வருஷத்து, சர்க்கார் பெரியபாளையத்துச் சாஸனமும் வற்புறுத்துகிறது. அந்தச்சாஸனம், "மஹா மண்டலேஸ்வர வீரநஞ்சராய உடையார் தனதுராஜ்யத்தை மிகவும் ஸ்திரப்படுத்தினன்." என்று சொல்வதிலிருந்து, உம்மத்தூர் தலைவர்கள், விஜயநகர ராஜ்யம் இருமுறை அபகரிக்கப்பட்டபோது உண்டான கலவரகாலத்தில் தாமே தலைமைவகிக்க முற்பட்டனர் என்பது துணிபாகும்.

இந்த சுயேச்சாதிபத்தியம் நீண்டநாள் நிலைபெறவில்லை. 1511-ம் வருஷத்தில், உம்மத்தூர் மன்னன் பகி

ரங்கமாகப் பேனுகொண்டாவை, தனக்குச் சொந்தமான தென்றுகூறிக் கைப்பற்றிக் கொண்டனன். அதனுல் உடனே போர்மூண்டது. உம்மத்தூர் அரசனின் அஞ் சாச் செய்கையைக்கேட்ட கிருஷ்ணதேவராயன் உடனே ஐயாயிரம் காலாட்படைகளையும், இரண்டாயிரம் குதிரைப் படைகளையும் சேர்த்துக்கொண்டுபோய்ப் போரிட்டுக் கலகத்தை அடக்கினன். தெலுங்கு கிருஷ்ணராயவிஜயம், இந்தப்போரைச் சங்குலநாய்க்கன் என்னும் பெயருடைய வீரன் ஒருவன் சேனுவீரனுக இருந்து நடத்தினன் என்று சொல்கிறது. அந்தச் சங்குலநாய்க்கன், உம்மத்தூர் அர சர்களது முக்கிய ராணுவஸ்தலமாகிய சிவனசமுத் திரத்தை முதலில் கைப்பற்றிக்கொண்டு, அம்மன்னனைக் கீழ்ப்படியும்படிச்செய்து, அவனுடைய ஊர்களனைத்தை யும் விஜயநகர ராஜ்யத்தோடு சேர்த்தனன். கிருஷ்ண தேவராயன், உம்மத்தூரைப் போரில் வசமாக்கியபோது, உடனே தன்பெயர் முத்திரிக்கப்பட்ட நாணயங்களைச் செய்து ஜனங்களுள் வழங்கச்செய்தனன் என்றும் அந்தத் தெலுங்குநூல் சொல்கிறது.

உம்மத்தூர் தலைவனை அடக்கியபின்னர், கிருஷ்ண தேவராயன் ஒரிசாநகரின் மன்னராகும் கஜபதி அரசரு டன் பெரும் போர்செய்யத் தொடங்கினன். அப்போர் நீண்டகாலம் நடைபெற்றது. கஜபதி மன்னர்கள், விஜய நகரத் தாசர்களுக்கு ஜன்மப்பகைவர்களாக இருந்துவந்த னர். அயல்நாட்டு யாத்திரைக்காரர்கள், இந்த இருராஜ் யத்திற்கும் உள்ள கடும்பகைமையைப்பற்றி, தமது குறிப் புப்புத்தகங்களுள், ஆங்காங்கு அடிக்கடி எழுதியுள்ளனர்.

உதாரணமாக, பார்போசா என்னும் யாத்திரைக் காரர் சொல்வதாவது :—"ஒரிசா நகரத்தரசன் அடிக்கடி நரசிங்கனுடன் போர்செய்து வந்தனன். அதனுல் அவன்,

நாசிங்கனுடைய ஊர்கள் சிலவற்றைக் கைப்பற்றிக்கொண்டான். நாசிங்கனும், ஒரிசா மன்னனுடைய ஊர்கள் சில வற்றை வசமாக்கிக்கொண்டனன். இங்ஙனம் இருதிறத் தாருக்கும் நாடுபிடிக்கும் வேட்கை யுண்டாய்விடவே, அவர்கள் இருவருக்கும் விடாப்போர் மூண்டது.” ஒரு சிறு சந்தர்ப்பம் வாய்க்கினும், உடனே ஒரிசாமன்னன் பகைவர் ஊர்களை எதிர்த்து முற்றுகையிட்டுவிடுவான். இவ்விதமாகவே, முதல் விஜயநகரவம்ச மன்னனுகும் மல்லிகார்ச்சுனனுடன், கஜபதி மன்னனும், குல்பர்கா நகரின் சுல்தானும்சேர்ந்து போர்செய்த விஷயம் நாம் முன் அதிகாரத்திலேயே கூறியுள்ளோம். மல்லிகார்ச்சுனனது பின் வந்தாரது நிலையற்ற பலவீனமான ஆட்சியில், விஜயநகா ராஜ்யத்திற் குட்பட்டதும் கீழ்க்கரைக்கண் ணுள்ளதுமான உதயகிரி, கொண்டவேடு முதலான ஊர்களை ஒரிசாமன்னன் கைவச மாக்கிக்கொண்டனன். விஜயநகாம் இரு முறை அபகரிக்கப்பட்ட காலமே இந்த ஒரிசாமன்னனும் மிகவும் வன்மையுற்றவனாய்த் தன் ராஜ்யத்தைப் பலப் படுத்திக்கொள்ளக் காரணமாயது.

அக்காலத்து அவ்விரண்டு ராஜ்யங்களுக்கும் எத்தகைய சம்பந்தம் இருந்ததென்பது முற்கூறியவற்ருல் நன்குபுலனுகும் ஆதலால், அத்தகைய ஜன்மப்பகைவனுகிய கஜபதிமன்னனைக் கிருஷ்ணராயன் வாளாவிட மனந் துணிவானே? அவன் தனது குலப்பகைவனை எப்படி யேனும் வென்று, தன் முன்னேர்கள் இழந்த ஊர்களை எல்லாம் வசப்படுத்திக் கொள்ளப் பெரிதும் ஆவலுடையவனுயினன்.

கிருஷ்ணராயன் சிம்மாஸன மேறியவுடன், பிரதாபருத்ர கஜபதி என்பான், பிஜபூர், ஆமத்நகர், கோல்கொண்டா நகர் சுல்தான்களுடன் ரகசிய ஏற்பாடுகள்செய்து,

கிருஷ்ணதேவ ராயனுடன் போர் செய்ய முற்பட்டனன். அதனுல் அவன் முற்கூறிய சுல்தான்களுடன் சேர்ந்து, கிருஷ்ணராயனைப் பல இடங்களிலும் முன்சென்று எதிர்க் கப்பெரிய சேனையையும் சேகரிக்கத்தொடங்கினன். இவ் விஷயத்தை, ஒரிசாவுக்குச் சென்றிருந்த கிருஷ்ணராயனது தூதுவன் அறிந்து, உடனேவந்து தனது மன்னனுக் குரைத்தனன். ஆனுல், இதுசம்பந்தமாக நூனிஸ்துரை சொல்வதாவது:—"ஒருநாள் கிருஷ்ணராயன் தன் முன் னோர்கள் எழுதிவைத்துச்சென்ற குறிப்புப் புஸ்தகங்களைப் பார்வையிட்டு வந்தபோது, சாலுவ நரசிம்மன், 'எனக்குப் பின் வருபவர் எப்படியும் உதயகிரி, முட்கல், ரேய்ச்சூர் என்னும் ராணுவ ஸ்தலங்களைக் கைப்பற்றுவதே எனது பெரிய ஆவல் பூர்த்தியானதன் அறிகுறியாகும்' என்று எழுதியுள்ள குறிப்பு அவன் பார்வைக்குவந்தது. அதை அவன் பன்முறை படித்துத் தன் முன்னவன் ஆவலை நிறைவேற்றத் துணிந்து, அதற்காகப் பெரிய ராணுவ மொன்றைச் சேகரிக்கலானுன்" என்பதே.

கிருஷ்ணராயன் தனது பகைவனின் ரகசிய ஏற் பாட்டை அறிந்தவுடன் முப்பத்து நாலாயிரம் காலாட் படைகளையும், எண்ணூறு யானைப் படையையும் சேகரித்துக்கொண்டு, நெல்லூர் ராஜதானியில் உள்ள உதயகிரி என்னும் ராணுவஸ்தலத்தை எதிர்க்கச் சென் ருன். தலைநாளில் இருந்து, உதயகிரி, விஜயநகரத்தரச னின் அதீனத்தில் இருந்து வந்தது. இரண்டாம் சங்கமன் 1356-7ல் எழுதிய பிட்ரகுண்டா சாஸனத்தில், முதல்கம் பன் என்பான் முதன்முதல் உதயகிரிமன்னனுயினன் என் றும், அவனுக்குப்பின் இரண்டாம் சங்கமன் பட்டத்திற்கு வந்தான் என்றும் விளங்குகிறது.

முதல்புக்காவின் ஆளுகையில், அவனுடைய மைந்த

ஞகிய பாஸ்கரன் என்பான், மாகாண சிற்றரசனுக விளங்கினன். 1393-4ம் வருஷத்தில் முதல் தேவராயன் என்பான் உதயகிரிமன்னன் ஆயினன். அவன் அதன் பின்னர், விஜயநகரமன்னனுனபோது, தனதுமகன் ராமசந்திரனே உதயகிரிக்குச் சிற்றரசனுக்கினன். ஆகவே, அந்த உதயகிரி ராணுவஸ்தலம் ஆதிமுதல் விஜயநகரத்தரசரின் அதீனமாய், அவர்களுக்கு அது ஒருபெரிய மகிமைபொருந்திய ஊராக விளங்கியது.

இரண்டாம் தேவராயனுக்குப் பிறகு முதல் விஜயநகர ராஜ்யவம்சத்தார் க்ஷீணமானது முன்னமே நாம் கூறியுள்ள விஷயமாகும். அவர்கள் க்ஷீணநிலைமைக்கு வந்தபோது, முற்கூறியபடி ஒரிசாநகரத்துக் கஜபதி மன்னர்கள் உதயகிரியையும், மற்றைய முக்கியமான கோட்டைகளையும் கைப்பற்றிக் கொண்டனர். "அந்த உதயகிரியில் உள்ள மலைக்கோட்டையானது இயற்கையான பலமுள்ள அரண்கள் சூழவிளங்கும் ஒருபலமுள்ள கோட்டையாகும். அதைக் கைப்பற்ற எண்ணங்கொள்வோர், முதலில் அந்த நகர்க்குள் உள்ளாரைப் பலகாலம் பட்டினி கிடக்குமாறு வைத்தாலன்றி அவர்கள் எண்ணம் முற்றுப்பெருது. கீழ்க்கரைக்கண்ணுள்ள ஊர்களுள் பகைவரஞ்சும் முஸ்தீப்புகள் நிறைய அமைந்த ராணுவஸ்தலம் அந்த உதயகிரியேயாம்" என, அதனே அக்காலத்தில் நேரில் கண்ட அலெக்ஸான்டர்ரீ என்னும் துரையவர்கள் சொல்கிருர்.

மேலும் அவர், "அந்தக்கோட்டை இப்போது ஒருவாறு சிதறுண்டிருப்பினும், பகைவரினின்றும் காத்துக்கொள்ளுமாறு இயற்கை அமைப்புடையதாய், மிகவும் கைதேர்ந்த வேலையாட்களால் வேலைப்பாடமையக் கட்டப்பட்டது" என்றும் சொல்கிருர். அத்தகைய பலம் அமைந்த மலைக்கோட்டையை ஒருவன் கைப்பற்றவேண்டு

மானல், அவனுக்கு நெடுநாள் முற்றுகையிட்டுக் கைப்பற்றக்கூடிய வன்மை யிருந்தே தீரவேண்டும். பிரதாப ருத்திரன் இந்தக்கோட்டையைக் காத்தற்காக ஆங்குத் தனது சிற்றப்பன் திருமலை காந்தராயன் என்னும் திருமலைராகவ ராயன் தலைமையின்கீழ்ப் பத்தாயிரம் காலாட்படைகளையும் நான்காயிரம் குதிரைப்படைகளையும் விட்டிருந்தனன்.

கிருஷ்ணராயன் அத்தகைய கோட்டையைக் கைப்பற்ற, ஒன்றரைவருஷகாலம் முற்றுகை யிட்டான். அந்த ஒன்றரை வருஷத்துள், அவன் அந்தக் குன்றுகளுள் பலவழிகளை ஏற்படுத்தி, சிகரத்தைச்சேர ஞாலேணிகள் பலவற்றையும் கட்டி முடித்தனன். கடைசியாக, அவன் அவ்விடத்தை வசமாக்கிக்கொண்டு, அதிலிருந்த திருமலை ராகவனைக் கைதியாக்கினன். கிருஷ்ணராயனது 1516-17 ம் வருஷத்திய திருவண்ணாமலை சிலா சாஸனத்தில் கிருஷ்ணராயன் உதயகிரியை வசமாக்கிக் கொண்டதோடு, ரௌத்தார்ய மஹாபத்திரன் என்பானையும் சிறைகொண்டனன்." என்று எழுதப் பெற்றுள்ளது. இதனால், நாம் முற்கூறிய திருமலை ராகவனுக்கே, ரௌத்தார்ய மஹாபத்திரன் என்னும் பெயரிருக்கலாம் என்று யூகிக்கவேண்டும். ஆனால் நூனிஸ்துரை, உதயகிரியில் கைதியாக்கியது பிரதாபருத்திரனுடைய மாமனை என்று சொல்கிறார். எங்ஙனமாயினும், கிருஷ்ணராயன் உதயகிரியைத்தன் வசமாக்கியபோது, அதனைக் காத்திருந்த பிரதாபருத்திரனது நெருங்கிய சுற்றத்தானொருவனையும் கைதியாக்கினன் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

அவன் உதயகிரியைக் கைப்பற்றியபிறகு, உடனே ஓரிசாமன்னனது வசத்தில்உள்ள கொண்டவேடு என்னும் கோட்டையைக் கைப்பற்ற வடக்குநோக்கித் தண்டெடுத்துச் சென்றனன். அவன் அங்ஙனம் போகும் வழியில்,

ஓரே எதிர்ப்பில் அடங்கி, வீணிகொண்டா, பெல்லம் கொண்டா, நாகார்ஜுனிதுர்கம், கிருஷ்ணு ஜில்லாவில் உள்ள தன்கீடா, கிடாவரம், மற்றும் உள்ள மலைக்கோட்டைகள் முதலியவற்றை வசமாக்கிக் கொண்டனன்.” என்று, திருவண்ணுமலை சாஸனம் கூறுகிறது.

கொண்டவீடு என்றும் கொண்டவேடு (மலை வாசஸ் தலம்) என்றும் வழங்கப் பெறும் அந்த மலைக்கோட்டை குண்டூர் ஜில்லாவைச்சேர்ந்த நரசராவ்பேட்டைத் தாலுக்காவில் உள்ளது. இந்தக் கொண்டவேடு என்பது, தென்னிந்தியாவில் பதினுன்காம் நூற்றுண்டின் மத்தியில் காகதீய வம்ஸத்தவருக்குப் பின் பெருஞ் சிறப்புடன் ஆட்சிசெய்த ரெட்டிகள் வம்சத்தாருக்கு ஆதிபீடமாக விளங்கி யிருந்தது. அந்த ரெட்டிகள் ஏறக்குறைய ஒரு நூற்றுண்டுவரையிற்றுன் பலமுடன் அரசுரிமை செய்து வந்தனர். அவர்கள் வசத்தில் இருந்த அந்த மலைக் கோட்டையை ஏறக்குறைய 1436-7ம் வருஷத்தில், விஜய நகரமன்னனுகும் இரண்டாந் தேவராயன் கைப்பற்றிக் கொண்டனன். ஆனுல் அந்தப் போராஞ்சர்மன்னனுக்குப் பின், விஜயநகாத்துண்டான கலகத்தால், ஒரிசாதேசத்துக் கஜபதிகள், அந்த மலைக்கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர். கி-பி-1453-4ம் வருஷத்தில் கணதேவன் என்னும் பெயருடைய சிற்றரசன் ஒருவன் கஜபதி மன்னர்களுக் கடங்கியவனுய், அவ்விடத்தை ஆட்சிபுரிந்து வந்தனன். அதற்குப் பின்னும், அந்தஇடம் கஜபதி மன்னர்களால் நியமிக்கப்பட்ட சிற்றரசர்களின் பார்வையிலேயே இருந்துவந்தது.

அத்தகைய மலைக்கோட்டையைப்பிடிக்க எண்ணிக் கிருஷ்ணராயன் அவ்விடத்தை அனுயாசமாக அடைந்து,

முற்றுகையிட ஆரம்பித்தனன். அதைப் பிரதாபருத்திரன் கேள்விப்பட்டதும், மிகவும் கோபம் கொண்டவனுய், ஆயிரத்து முந்நூறு யானைப்படைகளுடனும், இருபதினுயிரம் குதிரைப்படைகளுடனும் ஐந்துலக்ஷம் காலாட் படைகளுடனும் போருக்கு ஆயத்தமாய்த் தெற்குநோக்கி வருகையில், வழியில் தக்ஷிண சுல்தான்கள் அனுப்பிய சேனைகளையும் உடன் சேர்த்துக்கொண்டு, கிருஷ்ணுநதியின் வடது கரைக்கண் தங்கிப் பகைவனது வருகையை எதிர்பார்த்திருந்தனன். கிருஷ்ணதேவராயன், அவனுடன் வஞ்சகப்போர் செய்யநினைத்து, கொண்டவேட்டில் சில சேனைகளைநிறுத்தி, கிருஷ்ணுநதியைக் கடந்துசென்று, அதன் வடது கரைக்கண் பகைவனது வருகையை எதிர் பார்த்திருந்தான். அப்போது அவ்விடத்தில் பலமான யுத்தம் நடந்தது. அதில் இருதிறத்தாரது சேனைகளும் மிகவும் ரோஷத்துடன் போர் செய்தன. கடைசியாகக் கிருஷ்ண தேவராயன், ஒரிசாமன்னனை முறியடித்துப் பகைவரது உணவுப் பொருள்களையும் பிறவற்றையும் கொள்ளைகொண் டான். அவன் ஆங்குப் பெரியதோர் வெற்றியடைந்த பின், கொண்டவேடு சேர்ந்து, அதனை முற்றுகையிட் டனன். சிலநாட்களுக்குப்பின் அவன் அந்தக் கோட்டையைத்தாக்கி அதனை வசப்படுத்திக்கொண்டு அவ்விடத்தில் இருந்த சிற்றரசர்களாகிய பிரதாபருத்திரன் மகன் வீர பத்திரராயன் என்பவனையும், குமார ஹமித்திரன் மகனுகிய நரஹரிதேவன் என்பவனையும், ரேய்ச்சூர் சுல்தான் மகனுகிய மல்லுகான் என்பவனையும் உத்தண்டகான் என்பவனையும் ஜன்யால கேசவபத்ரன் என்பவனையும், கிருஷ்ணுவின் கண்ணுள்ள பூசபாடு என்னும் ஊரின் மன்னனையும், ஸ்ரீநாதராஜனையும், லக்ஷ்மிபதிராஜனையும், பச்சிமபலசந்திர மஹாபத்திரன் என்பவனையும் மற்றும் பிற சிற்றரசர்

களையும் கைதியாக்கி அவர்களைப் பிறகு மன்னித்து விட்டனன். அந்தப்பெரிய வெற்றிக்குப் பெருந்துணையாய் நின்றவன் கிருஷ்ணதேவராயனது மந்திரியாகிய சாலுவ திம்மன் என்பவனே. அவனே கிருஷ்ணதேவராயனது சேனைகளுக்குத் தலைவனாய், திறமையுடன் போர்த்திறங்காட்டி விஜய நகரத்திற்கே பெருங்கீர்த்தியை நிலைநாட்டினன். கொண்டவேடு கி. பி. 1515-ம் வருஷம் ஜுன்மீ 22உ கிருஷ்ணதேவராயன் சுவாதீனமாயது. அவன் அந்தவருஷத்தில் தன் வெற்றிகாரணமாக, தாணி கோட்டைக்கண் தன்னளவு பொன் நிறுத்து, அந்தப்பொன்னை ஆங்குள்ள பிராமணர்களுக்குத் தானம் செய்தனன்.

கொண்டவேட்டை வசமாக்கிக் கொண்டபின், கிருஷ்ணதேவராயன் தனது மந்திரியும் பிரதானியுமாகிய சாலுவ திம்மனிடம் அதை ஒப்படைத்து, தானே பிரதாப ருத்திரனுடன் போர்செய்ய ஒரிசா நகர்நோக்கிச் சென்றான். அதற்குள் சாலுவதிம்மன், தன் மருமகன் நதீந்திலஅப்பன் என்பவனைக் கொண்டவேட்டைச் சிறிதுகாலம்சிற்றரசனாக இருந்து ஆட்சி செய்யும்படி ஏற்பாடுசெய்து, தானும் கிருஷ்ண தேவராயனுடன் சேர்ந்து ஒரிசா படையெடுப்பிலும் தலைமைவகித்தான். கிருஷ்ணராயன், ஒரிசா நோக்கிச் செல்லும்போது, வன்சினத்துடன் வழியில் உள்ள பல ஊர்களையும் கொள்ளையடித்தான். அவன், கிருஷ்ணா ஜில்லாவில் பெஜவாடா தாலுக்காவில் இருக்கும் கொண்டபள்ளி என்னும் ஊரின்கண்ணுள்ள மலைக்கோட்டையை மூன்று மாதகாலம் முற்றுகை செய்தபின், அதனை வசமாக்கிக் கொண்டனன். அந்தக் கோட்டை அவன் வசமாகும்போது, அதில் பல பெரிய உத்யோகஸ்தர்களும், பகை மன்னனது மனைவியும் மகனும், மற்றும் பல சேனாவீரரும் இருந்தனர். அவர்களைக் கிருஷ்ண

ராயன் கைதிகளாக்கி, விஜயநகரத்திற்கு நடத்திச் செல்லுமாறு உத்தரவு செய்தான்.

கிருஷ்ணராயன் கொண்டபள்ளியை விட்டு, ஓரிசாவை நோக்கிச் சென்றான். அங்ஙனம் செல்பவன் வழியில் சிம்ஹாத்ரி என்றும் சிம்மாசலம் என்றும் பெயர் பெறும் ஊரை அடைந்து, அங்குத் தனது சேனைகளை அணிவகுத்துப் பிரதாப ருத்திரனது வருகையை எதிர் பார்த்திருந்தனன்.

அவன் சிம்மாசலம் சேருவதன்முன், தக்ஷிண சுல்தான்களின் பிரதானிகளுள் ஒருவனான சிதாப்கான் என்னும் ஒரு மகமதிய வீரன் அவனை எதிர்த்தனன். அவனைக் கிருஷ்ணராயன் அலறி ஓடச்செய்து, மேலும் தான் மேற்செல்வதைத் தடைசெய்ய ஒருவரும் இல்லாதபடி அட்டகாசத்துடன் சிம்மாசலம் வந்து சேர்ந்ததும், அவ்விடத்தில் பலமான போர் ஏற்பாடுகளைச் செய்தனன். அவன் ஆறுமாதகாலம் சிம்மாசலத்தில் தங்கியிருந்தும் பிரதாபருத்திரன் அவனை எதிர்க்க வரவேயில்லை. அதனால் கிரஷ்ணராயன் அந்த ஊரைக் கைப்பற்றிக் கொண்டு ஆங்கு ஒரு வெற்றி ஸ்தம்பத்தை நிலைநாட்டினன். அதன் பிறகு பிரதாபருத்திரன் கிருஷ்ணராயனது போர்த் திறமைக்கஞ்சி அவனுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனன். அதனால் அவன் விஜயநகர ராஜ்யத்திற்குக் கப்பம் கட்டும் சிற்றரசனானதுடன், கிருஷ்ணா நதியின் வடக்கின்கண்ணுள்ள ஊர்களையும் மீட்டும் அடையப் பெற்றான். கிருஷ்ணராயன் உடன்படிக்கையின்படி, முன் கொண்டபள்ளி முதலான இடங்களில் கைதிகளாக்கிய எல்லோரையும் விடுதலை செய்து, பிரதாபருத்திரன் மகன் வீரபத்திர கஜபதி என்பவனை மைசூருக்கு மேற்கில் உள்ள மேலைய பென்னூர் என்னும் நாட்டிற்கு அரசனாக்கினன்.

மேற்கூறிய உடன்படிக்கையினால், எலியும் பூனையும் என இருந்த அவ்விரு குடும்பத்தவரும், நெருங்கிய உறவு பாராட்டத் தலைப்பட்டனர். அந்த உடன்படிக்கையான பின், கிருஷ்ணராயன், பிரதாபருத்திரன் மகளை மணம் செய்துகொண்டனன். இந்த விவாக சம்பந்தம், மேலும் அவ் விருதிறத்தாருக்கும் புதிதாக ஏற்பட்ட ஒற்றுமையை வன்மையுறச் செய்தது. கிருஷ்ணராயன், பிரதாபருத்திரன் மகளை மணந்தபிறகு, தனது மூத்த மனைவியையும் உடன் அழைத்துக்கொண்டு சிம்மாசலம் வந்து, அங்குள்ள கோயிலுக்குச் சில ஊர்களைத் தானம் செய்து, லக்ஷ்மி நரசிம்மசாமி கோயிலுக்குப் பல விலை உயர்ந்த நகைகளையும், பிரதாபருத்திரனிடம் கைப்பற்றிய சில ஊர்களையும் தத்தம் செய்தனன்.

கிருஷ்ணராயன் சிம்மாத்திரியை விட்டதும், அப்படியே தென்தேசங்களில்உள்ள கோயில்களைத் தரிசிக்க எண்ணங்கொண்டு, தென்னிந்தியாவில்உள்ள முக்யமான கோயில்கள் எல்லாவற்றையும் தரிசித்து, ஆங்காங்குத்தான் ஒரிசாமன்னனை வெற்றிகொண்டதற் கறிகுறியாக ஊர்களையும் நகைகளையும் தத்தம் செய்தனன். திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்கு அவன் அனேக விலையுயர்ந்த நகைகளையும், ஊர்களையும் இனாமாகக் கொடுத்துப் பலநாள் உற்சவம்கொண்டாடும்படியும் செய்தனன்; திருவண்ணாமலையில் நூறுகால் மண்டபத்தைக் கட்டி முடித்தனன்; காளத்தியில் பெரிய கோபுரத்தைக் கட்டினன். பிறகு அவன், கும்பகோணத்தில் நடைபெறும் மஹாமகம் உற்சவத்தைக்காண, அவ்வூரடைந்து, அங்குப் பிராமணர்களுக்கும் ஏழைகளுக்கும் பலவித தானங்களையும் செய்தனன்.

கிருஷ்ணராயன் ஸ்தலயாத்திரை முடித்து விஜயநகரமடைந்ததும், ஆங்குச் சிலநாள் சாவதானமாக ராஜ்யகார்

யங்களைக் கவனித்திருந்தனன். பிறகு அவன் வடஆற்காடு ஜில்லாவிலுள்ள வேலூர்த்தலைவர்களை எதிர்க்கப் பெரியதோர் சேனையைச் சேகரித்துக் கொண்டான். அந்த வேலூர்த்தலைவர்கள் ஆதியில் விஜயநகரத்தரசனுக்குக் கீழ்ப்பட்டவர்களாய் இருந்தனர். பிறகு அவர்கள் தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக்கொண்டு, எவருக்கும் அடங்காது வாழும் உயர்நிலைமையை அடைந்தனர். ஆகவே, கிருஷ்ணராயன் அந்த வேலூர்த்தலைவர்களையும் அடக்கியாள எண்ணங்கொண்டு, வேலூரைநோக்கி வந்தான். அப்போது அவ்வூரைச் சுற்றியோடும் பாலாறு மிக்க ஆழமுள்ள்தாய்ப் பெருக்குடன் இருந்தது. அதனுல் கிருஷ்ணராயனது சேனைகள் அதனைக் கடந்துசெல்லத் தயங்கின. அக்கால் கிருஷ்ணராயன் பல கால்வாய்களை நூதனமாக வெட்டி, அவற்றின் வழியாக அந்த ஆற்றின் பெருக்கை அகற்றிப் பெருங்கஷ்டத்துடன் அவ்வூரை முற்றுகையிட்டான். பிறகு அவன் திடீரென அங்குள்ள கோட்டையை எதிர்க்குமாறு தனது சேனைகளுக்குக் கட்டளையிட்டான். உடனே சேனைகள் உக்கிரங்கொண்டு அக்கோட்டையைத் தகர்த்தன. அப்போது கோட்டைக்குள் இருந்தவரும் அஞ்சாது எதிரிகளை எதிர்த்தனர். என்றுலும், கிருஷ்ணராயனது சேனைகள் உயிரைத் துரும்பென மதித்துத் தமது மன்னன் வெற்றியொன்றிலேயே குறிப்பாய், வீரத்துடன் போர்செய்ததால், வேலூர்த்தலைவர்கள் 1517-ம் வருஷம் அபஜயமடைந்தனர். உடனே கிருஷ்ணராயன் அவ்வூரைக் கொள்ளையடித்து, அங்கிருந்த அளவுகடந்த பொருள்களை வசமாக்கிக் கொண்டனன். பிறகு அவன் அந்த ஊரையும் அதனைச்சூழ உள்ள மற்றைய நாடுகளையும் தனது சேனுதிபதிகளுக்குப் பங்கிட்டுத் தந்து, விஜயநகரம் வந்து சேர்ந்தான்.

கிருஷ்ணராயன் விஜயநகரம் அடைந்ததும், உடனே அவன் தனது பிரதானியு மந்திரியுமாகிய சாளுவதிம்மனை அழைத்து, "தாம் கொண்டவேட்டுக்குத் தலைவராய் இருப்பதால் தாமே அவ்வூருக்குச்சென்று அங்கிருந்தபடியே நமது கீழ்க்கரைத் தேசங்களில் ஒழுங்கான ஆளுகையை ஏற்பாடு செய்துவரவேண்டும்." என்று கூறி அனுப்பினன். சாளுவதிம்மன் அரசனது கட்டளையின்படி கொண்டவேடுநோக்கிச் சென்றான். அப்போது அவன் வருகையை அறிந்த கோலகொண்டாவின் சுல்தான் மதார்மலூக்கஸ் என்னும் மகமதிய சேனாதிபதியின் தலைமையில் பெருஞ்சேனையை அனுப்பினன். அந்த மதார்மலூக்கஸ் வஞ்சகப்போர்செய்து சாளுவதிம்மனைக் கொல்ல எண்ணங்கொண்டான். சாளுவதிம்மன் நடுவழியில் வரும்போது, உடனே மதார்மலூக்கஸ் தன் சேனைகளை ஏவினன். அஞ்சாநெஞ்சம்படைத்த சாளுவதிம்மன் சிறிதும் தயங்காமல், தன்னுடன் வந்த சிறுசேனைகளைக்கொண்டே எதிரியைச் சின்னாபின்னம் செய்து, பின் கொண்டவேடு அடைந்தான். அவன் கொண்டவேடு சேர்ந்ததும், சிவில் கிரிமினல் வியவகாரங்களும் பிறவும் ஒழுங்குபெற நடக்குமாறு சிலகாலம் அவ்விடத்திலேயே இருந்து நடத்திக்காட்டி ராஜ்யத்தை ஒழுங்கு செய்தபின், தனது இளைய மருமகனான நதீந்திலகோபன் என்பவனைக் கொண்டவேட்டுச் சிற்றரசனாக்கி விஜயநகரம் வந்து சேர்ந்தனன்.

சாளுவதிம்மன், ஒரிசாமன்னனுடன் போரிடச் சென்ற தனதரசனைச்சேர, நதீந்தில அப்பன் என்பவனைச் சிலகாலம் கொண்டவேட்டின் சிற்றரசனாக இருக்கச்செய்தான் என்று முன்னரே நாம் கூறியுள்ளோம். எனினும், இப்போது ஸ்திரமாக ஒருவனை ஏற்படுத்தி, ராஜ்ய காரியங்களை ஒழுங்குபெற நடைபெறச்செய்யவேண்டியிருந்த

தால், அவன் அந்தச் சிற்றாச பதவியைத் தனது இளைய மருமகனுக்குத் தந்து, நதீந்தில அப்பனை, வினுகொண்டா, குத்தி, அமராவதி என்னும் ஊர்களுக்கு அரசனுக்கினன்.

சாலுவதிம்மன் விஜயநகரம் சேர்ந்ததும், கிருஷ்ண ராயன் சிறிதுகாலம் ஒய்வுற்றிருக்க எண்ணங்கொண்டான். அவன்தான் நினைத்தபடிப் பகைவர்கள் எல்லோரையும் தன் கீழ்ப்படியும்படிச் செய்து கொண்டதால் பெரு மகிழ்ச்சிகொண்டு, அத்துணை வெற்றிக்கும் பெருந்துணை யாய் நின்றவர் கடவுளேயாதலால், கடவுள் எழுந்தருளி யுள்ள திவ்ய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லவேண்டும் என்று நினைத்து, உடனே தென்னிந்தியாவின் கண்ணுள்ள திருப்பதிகள் தோறும் யாத்திரைசெய்தனன். ஆங்காங் கும் பெரிய பெரிய தானங்களைச் செய்ததோடு, தன் பெய ரிருக்க மண்டபம், கோபுரம் முதலியனவற்றையும் கட்டி மீட்டும் தன்னகரம் வந்துசேர்ந்தான். கி. பி. 1517 ம் வரு ஷத்திலிருந்து, 1520 ம் வருஷம் வரையிலும் அவன் ராஜ்ய வியவகாரங்களில் சிறிதும் தலையிடவில்லை. இந்த வருஷங் களுட்டான் அவன், தெலுங்கு பாஷைக்கே உயர்வை உண்டு பண்ணுவதான அமுக்தமால்யதை முதலான கிரந் தங்களை எழுதினன். இந்தச் சில வருஷங்களை, அவன் கவி மன்னருடன்கலந்துறவாடியும்,தேவதாபக்தியில்திறமுடன் சிக்கியும், என்றும் பொன்றுப் புகழை நிலைநாட்டினன். இவ்வருஷங்களிற்றான் கிருஷ்ணராயனது சமஸ்தான வித் வான்களும் தெலுங்கு பாஷைக் குயிரைப் போன்றுள்ள அரிய கிரந்தங்கள் பலவற்றையும் செய்து முடித்தனர்.

கிருஷ்ணராயன், வித்வான்களிடத்தில் வைத்த அன் பிற்கு அளவே இல்லை. அந்த அன்பின் பெருக்கிற்கேற்ப அவ்வித்வான்களைப் பெரிதும் பாராட்டி, அவர்கள் பொருள் இல்லையேஎன்று சோர்வுறுதபடி அபரிமிதமான

பொருளை அவ்வப்போது அவர்கள் சேரா முன்னரே வாரி வாரிக் கொடுத்தனன். அவன் வித்வான்கள் சொல்வதற்கு மாருக ஒன்றும் சொல்லான். அவன் புவியாளும் மன்னனுக இருந்தும், கவியாளும் அந்த மன்னர்களிடம் தலைவணங்கி யிருந்தனன். இப்படி அவன் அந்தச் சிலவருஷங்களைச் செலவிட்டு, மீட்டும் ராஜ்ய கார்யங்களில் தன் சிந்தையைச் செலுத்தினன்.

## 5—அதிகாரம்

### பிஜபூர் அடில்ஷாவுடன் போர்.

இப்போது நாம் கிருஷ்ணராயனது சரித்திரத்தில் மிகவும் முக்யமானதொரு சம்பவத்தை வியவகரிக்கப் போகிறேம். கிருஷ்ணராயனது மற்றைய போர்களைவிட அவன் பிஜபூர் சுல்தானுடன் செய்த போர் மிகவும் அஞ்சத் தக்கது. அவன் பிஜபூர் சுல்தானுடன் பெரும்போர் செய்து, வெற்றியடைந்தது மற்றைய அவன் வெற்றிகளிலும் அதி சிரேஷ்டமானது. அந்தப் போரில் அவன், சிறிதும் அச்சமும் கலக்கமும் இன்றிப் போர் செய்ததுடன், அவனுடைய சேனைகளும் மிகவும் ராஜவிஸ்வாசத்துடன் உக்ரமாகச் சண்டை செய்தன. ஆகவே அந்தச் சம்பவத்தை யாம் சொல்வதன் முன், பதினைந்தாம் நூற்றுண்டில் விஜயநகரத் தரசர்களுக்கும், தக்ஷிண மகமதிய அரசர்களுக்கும் இருந்த சம்பந்தத்தைச் சுருக்கமாகக் கூறுகிறேம்.

தக்ஷிண தேசத்து மகமதிய மன்னரை எதிர்த்து வெற்றி கண்டவன் இரண்டாம் தேவராயனுவன். அவன், விஜய நகரத்தை முதலாவதாக ஆண்ட சங்கம வம்ஸத்துக் கடைசி மன்னன் என்பது முன்னரே அறிந்த

விஷயம். அந்த மன்னனுக்குப் பின்வந்த பலமற்ற மன்னர்களின் ஆளுகையில், இந்தியர் ஆங்காங்கு அபஜயமே அடைந்து வந்தனர். விஜயநகரத்தையும், ஒரிசா மன்னனாகிய கஜபதி அரசனும் குல்பர்கா சுல்தானும் ஒன்று சேர்ந்து எதிர்த்தார்கள். அப்போது ஒரிசா மன்னன் விஜயநகரத்திற்குள்ளான, கீழ்க்கரை ராஜ்யங்களை எல்லாம் வசமாக்கிக் கொண்டனன். குல்பர்கா சுல்தானோ, விஜயநகரத்தின் முக்கியமான துறைமுகப் பட்டணங்களை எல்லாம் வசப்படுத்திக்கொண்டு, விஜயநகரத்து வியாபார வருமானத்தையே பாழாக்கினன். விஜயநகரம் அத்தகைய நிலைமையில் இருந்தபோதும், தக்ஷிணதேசம் அதைவிட மிக மிகத் தாழ்வான நிலைமையில் இருந்தது. மாகாண சிற்றரசர்கள், தங்கள் சுல்தானுக்கு விரோதமாக எதிர்க்கத் தலைப்பட்டு விட்டனர். அக்கால் மகமதிய சுல்தான் பெயரளவில் சுல்தான் பதவியில் இருந்தானே யொழிய, அவனிடத்தில் எவ்வித அதிகாரமும் இல்லாமற் போயது. அதனல், அவன் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டிருந்த அந்த மாகாணச் சிற்றரசர்கள் எல்லோரும் தாங்களே தனித் தலைமை வகிக்கத் தலைப்பட்டுவிட்டனர். அங்ஙனம் தனித்தலைமை வகித்தவருள் வன்மை பொருந்தியவன் பிஜபூர் சுல்தானகிய அடில்ஷா என்பவன். அவன், விஜயநகரத்திற்கும் தக்ஷிணத்திற்கும் மத்தியில், முதுகெலும்பு போல் அரணாக நிற்கும், ரேய்ச்சூரின்கண்ணுள்ள கோட்டையைத் தன் வசமாக்கிக் கொண்டனன். கிருஷ்ணராயன் ஒரிசா மன்னனுடன் போர் செய்தபோது, அந்த ஒரிசா மன்னனுக்கு அடில்ஷா சேனைகளையும் பொருளையும் உதவியதற்குக் காரணம், பகைவன் தோல்வியுற்றால், அந்தக் கோட்டையைத் தானே சுவாதீனப் படுத்திக் கொள்ளலாம் என்பதே.

அடில்ஷா, அத்தகைய எண்ணங்கொண்டு, ஒரிசா மன்னனுக் குதவியது அறிந்த கிருஷ்ணராயன், அவனை வாளாவிடுவனே? அன்றியும் அந்தக் கோட்டையோ மிகவும் முக்யமானது. அதனைச் சாளுவ நரசிம்மன், தனது குறிப்புப் புஸ்தகத்தில், தன் பின்வருவோர், எப்படியும் அந்தக் கோட்டையைக் கைப்பற்றவேண்டும் என்று எழுதியுள்ளான். ஆகவே, கிருஷ்ணராயன், அந்தக் கோட்டையையும் கைப்பற்றிக் கொள்ளக் கங்கணம் கட்டிக்கொண்டனன்.

ஆனால், அப்போது விஜயநகரத்திற்கும் பிஜபூருக்கும் சமாதான உடன்படிக்கை யொன்று ஏற்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின்படி, கிருஷ்ணராயன் உடனே போருக்குச் செல்லலாகாது. அதனால் அவன், அந்த உடன்படிக்கையை அழிக்க, தக்க காரணத்தை எதிர்பார்த்தான். அநத உடன்படிக்கையின் நிபந்தனைகளுள் ஒருவர் நாட்டில் இருந்த குற்றவாளிகளுக்கு மற்றொருவர் தமது நாட்டில் இருக்க இடமுந்தாலாகாது என்ற நிபந்தனையும் ஒன்று. அங்ஙனமாக, கிருஷ்ணராயன் தன்னிடம் வேலையாளாக இருந்த சையத்மொர்கார் என்பவனிடம் கோவாவுக்குச் சென்று குதிரை வாங்கி வரும்படிப் பொருள் கொடுத்தனன். அந்த சையத்மொர்கார் என்பவன், கிருஷ்ணராயனது பொருளை அபகரித்துக்கொண்டு, பிஜபூர் போய்ச் சேர்ந்தான். பிஜபூர் சுல்தானோ, உடன்படிக்கைக்கு மாறாக, அந்த மகமதியக் குற்றவாளியை, சாதிப்பற்றினால் அஞ்சல் அளித்து அவனைப் பாதுகாத்து வந்தனன். கிருஷ்ணராயன் அதை அறிந்து, உடனே அந்தக் குற்றவாளியைத் தன்னிடம் ஒப்புவிக்கவேண்டும் என்று பிஜபூர் சுல்தானைக் கேட்டனன். பிஜபூர் சுல்தான், அதற்கு உடன்படாமற் போகவே, அஃதே அவனுடன்

போர் செய்வதற்கேற்ற காரணமாயது. ஆதலால், உடனே கிருஷ்ணராயன் தக்ஷிண தேசத்துச் சிற்றரசர்களுக்கு, தான் பிஜபூர் சுல்தானுடன் போர் செய்யப்போவதாகத் தெரிவித்தனன்.

கிருஷ்ணராயன் தக்ஷிண சிற்றரசர்களுக்குப் போர் நடக்கப் போவதைத் தெரிவித்தவுடன், அவன் உடனே ஏழு லக்ஷத்து மூவாயிரம் காலாட்படைகளையும், முப்பத்திரண்டாயிரத்து அறுநூறு குதிரைப் படைகளையும் ஐந்நூற்றம்பத்தொரு யானைப்படைகளையும், பிறரையும்சேர்த்துக்கொண்டு, ரேய்ச்சூரை எதிர்க்கப் புறப்பட்டனன். அவன் தன் நகரை விட்டுப் புறப்பட்டதும், இடையில் எங்கும் தங்காது, ரேய்ச்சூருக்கு மூன்று மைல் தூரத்தில் உள்ள மல்லியாபாத் என்னும் ஊரில் வந்து முதலாவதாகத் தங்கினன். இவ்விடத்தில், அவனுக்குக் கீழ்ப்பட்ட அரசர்களும், மாகாணத் தலைவர்களும் உதவியாக அனுப்பிய பெருஞ் சேனைகள் வந்து உடன் சேர்ந்து கொண்டன. கிருஷ்ணராயன், அவ்விடத்துத் தன் சேனைகளை அணிவகுத்து, முன் அணியை ரேய்ச்சூரின் பூகோள அமைதியையும் பிறவற்றையும் அறிந்துள்ள மகமதிய வீரன் ஒருவன் தலைமையில் செல்லவிட்டுத் தான் மற்றையசேனைகளுடன் பின்சென்றான்.

ரேய்ச்சூரின் அமைப்பைப்பற்றி நானிஸ் துரை சொல்வது :—" ரேய்ச்சூர், இரண்டு பெரிய நதிகளின் இடையே பெரிய மாஞ்செடிகள் இல்லாத ஓர் விஸ்தார வெளியில் அமைந்துள்ள ஊராகும். ஒவ்வொரு நதிக்கும் ஒன்பது மைல் தூரத்தில் அந்த ஊர் உள்ளது. அவ்விரண்டு நதிகளுள் ஒன்று, அந்த ஊருக்கு வடக்கெல்லையாகவும் மற்றொன்று அந்த ஊருக்குத் தெற்கெல்லையாகவும் உள்ளன. அவ்விரண்டு நதிகளின் முகத்துள்ள பெரிய

இடைவெளியில் பெரிய ஏரிகளும் கிணறுகளும், சிறிய நீரோடைகளும் உள்ளன. அத்தகைய வளப்பம் நிறைந்த இடத்திலேயே ரேய்ச்சூர் அமையப் பெற்றுள்ளது. அத னகத்து ஒரு குன்று ஒன்று அழகாக வளர்ந்தோங்கி யுள்ளது. அந்த ஊருக்கு மூன்று பக்கங்களிலும், சுண் ணும்பால் கட்டப்பெருது வேலைப்பாடுமிக அமைந்த மூன்றுபெரியசுவர்கள் அரணுகச் சூழ்ந்திருந்தன. அச் சுவர்களின் உட்புறத்தில் மண்நிறப்பப்பெற்று, அதன் மேல் பெரியதோர் கோட்டையொன்று கட்டப்பெற்றுள் ளது. அந்தக்கோட்டை ஒருபெரிய கோபுரத்தைப்போல், மிகவும் உயரமும் பலமுமுள்ளதாய் அமைந்து, பகைவருக்கு அச்சமூட்டும் நிலைமையில் இருந்தது. அந்தச்சுவர்களில் நிறையக்கோபுரங்கள் நெருங்க இருந்தன. ஒரு கோபு ரத்துள் இருந்து பேசுவோனதுபேச்சை மற்ருெரு கோபு ரத்திருப்போன் அனுயாசமாகக் கேட்கக்கூடிய வண்ணம் அவ்வளவு நெருக்கமாக அமைந்த அக்கோபுரங்களில் வீரர்கள் ஆயுதமுஸ்தீப்புடன், பகைவர் வருகையை எதிர் நோக்கி யிருப்பது வழக்கம்" என்பதே.

அத்தகைய ஊரைக் கிருஷ்ணராயனது சேனைகள் அடைந்ததும், உடனே அங்குள்ள கோட்டையை முற் றுகை செய்தன. அந்தக் கோட்டையின்கண் அப்போது, நானூறு குதிரைகளும், இருபதுயானைகளும், எண்ணுயிரம் காலாட்படைகளும் இருந்தன. முற்றுகையிடுவோர், கோட்டையின் சுவர்களை நெருங்கியதும், உடனே உள் ளிருந்த மகமதியர் அவர்களைச் சுடத்தலைப்பட்டனர். அச் சுவர்களில் ஒன்றன் சமீபத்திலிருந்த, காமநாய்க்கன் என் பானது தலைமையில் அமைந்த சிறியசேனை பெரிதும் நாச மாயின. பிறகு கிருஷ்ணராயனது சேனைகளும் குண்டு களைப் பிரயோகித்தன. கீழ்ப்பக்கத்தில் மிகவும் மும்மு

மாகச் சண்டை நடந்தது. மற்றைய வடக்குத் தெற்குப் பாகங்கள் சிறுகுன்றுகள்சூழ இருந்தவற்றால், அவ்விடத்து இருதிறத்தாரும் எதிர்த்து நிற்க இயலவில்லை.

இங்ஙனம் முற்றுகை முயற்சி பலப்பட்டுக்கொண்டிருக்கும்போது, ராயனது தூதுவன் ஒடோடியும்வந்து, 'அடில்ஷா கிருஷ்ணாநதியின் வடதுகரைக்கண்வந்து, அவ்விடத்தில் நமது வருகையை எதிர்பார்த்திருக்கிறான்' என ராயனுக்குக் கூறினன். அதைக்கேட்ட கிருஷ்ணராயன், தான் இருந்த இடத்தைவிட்டுப் பெயர மனம் இல்லாமல், தான் பகைவனது வருகையை அவ்விடத்தில் எதிர்பார்த்திருந்தான். அடில்ஷா, கிருஷ்ணராயன் மேற்சென்றுவர மனமில்லாதிருப்பதை அறிந்து, தானே கிருஷ்ணாநதியைக் கடந்துவந்து பகைவரிருக்குமிடத்திற்கு மூன்று மைல்தூரத்தில் தங்கித் தன்சேனைகளையும் அங்கிருக்கச் செய்தனன். அவன் யுத்தமுறைமையில் மிகவும் கைவந்தவனுதலால், உடனே தனது சேனைகளைப் பெரிய அரண்களைத் தோண்டச்செய்து அவற்றில் தன்முன் அணிச்சேனையை நிறுத்திப் போர்புரியக் கட்டளையிட்டனன். அவ்விஷயத்தினைக் கிருஷ்ணராயன் அறிந்து, உடனே தன் சேனைகளை எழுபிரிவாக வகுத்தனன்.

கி. பி. 1520-ம் வருஷம் மேமீ 19உ காலையில், இந்து மன்னனது சேனவெள்ளம், ரேய்ச்சூர் வெளியில், போருக்கு ஆயத்தமாக நின்றது. அப்போது கிருஷ்ணராயன் தனது முதல் இரண்டணிகளை, முற்செல்லுமாறு உத்தரவு செய்தனன். அந்தச் சேனைகளுக்கு, கிருஷ்ணராயனது மாமனுராகிய குமாரவீரையன் என்பவன் தலைமை வகித்தான். குமாரவீரையன் போர்த்திறமை வாய்ந்தவனுதலால், அவன் தனது சேனைகளைப் பகைவர் சேனைகளுடன் கைகலக்கவிட்டு, பகைவரதுமத்திய வகுப்பைச்

சிர்குலையும்படிச் செய்தனன். ஆனல் உடனே சுல்தான், தனது சேனைகளுக்குத் துப்பாக்கிவெடிகளைப் பிரயோகஞ் செய்யுமாறு உத்தரவிட்டனன். உடனே மகமதியர் குண்டுகளை அமோகமாகப் பிரயோகஞ் செய்தனர். இந்திய சேனை அந்தக் குண்டுகளுக்கு அஞ்சாது சிலநேரம் போர் செய்தன எனினும், அளவுகடந்துவரும் அக்னியாஸ்திரத்திற்கு அஞ்சி, மேலும் பகைவரை எதிர்த்துப் போர்செய்வதைவிட்டுப் புறங்காட்டத் தலைப்பட்டன. அதைக் கண்ட மகமதியசேனை, ஓடுபவரை விடாது துறத்திச் சென்று, பலரையும் கொன்று ஆங்காங்குப் பிணக் குவியல் நிறையச் செய்தன. அதனல், விஜயநகரத்துச் சேனைகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் எண்ணுக்கடங்காததாயது.

கிருஷ்ணராயன் தனது செனைகள் பகைவர்களுக்கஞ்சி யோடுவதைக்கண்டு கோபங்கொண்டனன். அவன் ராஜ்யாதிபதியானது முதல், தனது சேனைகள்புறங்காட்டி யோடக் காணவில்லையாதலால், அவனுக்கு அக்காட்சி பேரவமானத்தை உண்டாக்கிவிட்டது. அதனல் அவன், தனது சேனைகளைநோக்கி, "வஞ்சகக்குணம் படைத்தவர்களே! உங்கள் உடலில் இரத்தம் இல்லையா? நீங்கள் மானத்தை விலைக்கு விற்றுவிட்டீர்களா? சற்றேனும் அவமானத்தைப் பாராமல் புறங்காட்டியோடுதல் க்ஷத்ரியவீரருக்கழகாகுமா? நீங்கள் இந்தியர் அல்லவா? உங்கள் வீரம் எங்கேபோயது? பெண்களுக்கும் உங்களுக்கும் என்ன பேதம்?" என்று மீசை துடிக்கப்பேசி மிகுந்துள்ள சேனைகளுக்கு ரோஷம் உண்டாகும் வண்ணம் செய்து, அவர்களைத் தைர்யத்துடன் பகைவரோடு போர்செய்யுமாறு செய்து, தானே அந்தச் சேனைகளை நடத்தினன். அப்போது அவனுடைய சேனைகள், உயிரைத் துரும்பெனமதித்து, உடனே எதிரிகள் படைமீது விழுந்தன. கிருஷ்ணராயனும் அந்தப் போர்க்

களத்தில் கைகலந்து சண்டைசெய்தான். அவன் அங்ங னம் சண்டைசெய்த காலத்தில், அவனுயிர் பிழைத்தது அவனுடைய நல்லகாலம் என்றேசொல்லவேண்டும். கிருஷ் ணராயனது சேனைகள் பலமுடன் மகமதிய சேனையை எதிர்க்கவே, அம்மகமதியசேனையும் வீரத்துடனும் தீரத் துடனும் வெடிகளைம் ஆயுதங்களையும் கொண்டு பலமாகப் போர்செய்தன. அதனால் இந்தியசேனையில் அதிகசேதம் ஏற்பட்டது. என்றாலும் விஜயநகரத்துச்சேனைகள், வெடி முதலானவற்றிற்குப் பயப்படாமல், பகைவரை நெருங்கி விடவே, அந்தப்பகைவர்கள் மேலும் இந்தியசேனைகளின் எதிர்நிற்கப்பயந்து, கதறிக்கொண்டு ஓடத்தலைப்பட்டனர். மகமதிய சேனையில் அப்போதுண்டான நஷ்டத்திற்கு அளவே இல்லை. கிருஷ்ணராயன், பகைவர்சேனை புறங் காட்டி யோடக்கண்டு, அவற்றின் பின் தன் சேனை யைச் செலுத்தினன். அப்போது அச்சங்கொண்டோடிய அம்மகமதிய சைன்யங்கள் பெரிதும் பயங்கொண்டும், போகுமிடம் இன்னதென்றும் தெரியும் உணர்ச்சியற்று, ஆற்றில் வீழ்ந்து மாண்டன. அவர்களுள் பலர் வெள் ளத்தில் பிழைத்துக் கரையேறப் பெரிதும் முயற்சி செய் தனர். என்றாலும் அவர்கள் முயற்சி பலிக்கவில்லை.

பிறகு கிருஷ்ணராயன் அடில்ஷா தங்கியிருந்த கூடா ரத்திற்குச்சென்று, அங்குள்ள சாமான்களைக் கொள்ளை கொண்டு, அவ்விடமே சிலநாட்கள் தங்கியிருந்தான். அப் போது, ஷாவின் தலைமைச்சேனாதிபதியாகிய சலபத் கான் என்பவன் ஐந்நூறு போர்த்துக்கேசிய வீரரைச் சேர்த்துக்கொண்டுவந்து கிருஷ்ணராயனை எதிர்த்தான். கிருஷ்ணராயன், அந்தச்சிறுசேனையை ஓர் பொருளாக மதியாது, அவ்வளவு சிறுசேனைகொண்டே மகமதியரைத் தோற்கடித்தான். என்றாலும் அந்தப் போரில்போர்த்துக்

கேசியர் மிகவும் திறமையுடன் நடந்துகொண்டதால், கிருஷ்ணாாயனது சேனைகளுள் பெரிய நஷ்டம் உண்டாயது. கடைசியாகக் கிருஷ்ணாாயன், தன்னை எதிர்த்தபகைவர்களை முறியடித்து ஓட்டியதுடன் அந்தச்சேனைக்குத் தலைவனாய் வந்த சலபத்கானையும் கைதியாக்கினன்.

கிருஷ்ணாாயன் அதற்குப்பின் போரில் இறந்தவர்களைத் தகனம்செய்து, அவர்களுக்குப் பொதுவில் ஈமக்கடனைமுடித்து, மீட்டும் ரெய்ச்சூரையடைந்து முற்றுகையிட ஆரம்பித்தான். இப்போது அவனுக்குத்துணையாகப் போர்த்துக்கேசிய வீரரும் உடன்வந்து சேர்ந்தனர். அந்தப் போர்த்துக்கேசிய வீரர்களுக்குத் தலைமைவகித்தவன், கிரிஸ்டோவாடிபிகியுர்டோ என்னும் கைதேர்ந்த போர்த்துகேசிய வீரனுவன். கிருஷ்ணாாயன், அந்த அன்னியநாட்டு வீரர்களையும் துணையெனக்கொண்டு, பலமாக ரேய்ச்சூர் மலைக்கோட்டையை முற்றுகை செய்தான். சிலநாட்களுள், கோட்டைக்குள் இருந்த மகமதியர் பகைவர்க்கஞ்சி, சரணடையமுற்பட்டனர். அவர்கள் தலைவன் அவ்வாறு செய்யாவண்ணம் அவர்களுக்குத் தைர்யவசன முரைத்து, இந்திய மன்னனுடன் எதிர்க்க வந்தனன். அப்போது, அந்தத் தலைவனே அந்தப் போர்க்கு முதற்பலியானுன். அதனுல், மகமதிய வீரர்கள் அச்சங்கொண்டு, உடனே கிருஷ்ணாாயனைச் சரணடைந்தனர். உடனே கிருஷ்ணாாயன் அவர்களுக்கு அஞ்சல் அளித்து, அந்தக் கோட்டைக்குள்ளிருந்த ஆயுதங்களையும் உணவுப் பொருள்களையும் வசமாக்கிக் கொண்டு, வெற்றிக் கோலத்துடன் வாத்தியங்கள் கோஷித்துவர, அந்த நகர்க்குள் பிரவேசித்தான். நகரமாந்தர், அனைவரும் அவனை வாழ்த்தி, அவன் வருகையை நல்வரவாக உபசரித்தனர். கிருஷ்ணாாயன் நகரப்பிர

வேசமானபின், அவ்விடத்திற் சிலநாள் தங்கினன். அந்தச் சில நாட்களுள், அவ்விடத்து ராஜ்யகார்யங்கள் நடக்கவேண்டிய முறைமையை ஏற்பாடுசெய்து, தனக்கு வெற்றியை உண்டுபண்ணிய சைன்யங்களுடன், தனது நகரம்போய்ச் சேர்ந்தான்.

கிருஷ்ணராயன், தனதூரை அடைந்தவுடன், உடனே பிஜபூர் சுல்தான் அவனிடம் ஓர் தூதனை அனுப்பினன். வந்ததூதன், கிருஷ்ணராயன் சபைக்கண்வந்து நின்று, "நான்பிஜபூர் சுல்தானுடைய தூதுவன். அவர், தாம் கைக்கொண்ட ரேய்ச்சூர் நகரைமீட்டும் கொடுத்துவிடுவதுடன், முன்தங்களால் ஏற்பட்ட சண்டையால் அவருக்கு ஏற்பட்ட நஷ்டங்களையும் கொடுக்கிறீரா இல்லையா என்பதைக்கேட்டுவருமாறு என்னை அனுப்பினார்" என்று கூறினன். அதனை அங்கிருந்த சபையோர் அனைவரும் அதிசயத்துடன் கேட்டனர். கிருஷ்ணராயன், தூதுவன் வார்த்தையைக் கேட்டதும், அடங்காத சிரிப்புடன், "ஏ தூதனே! நீ உன்னை யனுப்பிய அந்த அடில்ஷாவிடம் சென்று, 'ராயர் நீ கேட்டபடி கொடுக்கச்சித்தமாய் இருக்கிறார். ஆனால் அப்படி நீ கேட்டபடி அவரிடம் நீ பெற எண்ணங் கொண்டால், உடனே அவரது பாதத்தை முத்தம் இடு' என்றுசொல். அவன் என்காலை முத்தமிடுவானாயின், நான் உடனே ரேய்ச்சூரைமாத்திரம் அல்ல; மேலும், சில ஊர்களையும் தருகிறேன்" என்றுரைத்தனன். பிஜபூர் சுல்தான், அத்தகையதாழ்வான கார்யத்திற்குடன்படுவானோ? உடன் படான் என்பது, கிருஷ்ணராயன் அறிந்ததே எனினும், அவனுக்கு அப்போதுண்டாய கோபத்தின் மிகுதியால் அங்ஙனம் கூறிவிட்டனன். தூதுவன் உடனே தலையிரக்கத்துடன், பிஜபூர் சுல்தானிடம் சென்று விஷயத்தை வெளியிட்டனன். சுல்தான் அதைக்கேட்டதும்

கோபங்கொண்டு, போருக்கான ஏற்பாடுகளைப் பலமுடன் செய்ய ஆரம்பித்தான். அதைக் கிருஷ்ணராயன் தனது தூதுவரால் அறிந்து, உடனே போர்க்கோலம் கொண்டெழுந்தான். அவனுடன்சேனைகளும் அட்டகாசத்துடன் புறப்பட்டன். கிருஷ்ணராயன் பாமினிசுல்தான்களுக்குப் பழைமையான ராஜதானியாக இருந்த குல்பர்காவை அடைந்து, அதை எதிர்த்து, அந்த ஊரை நிலமட்டமாக்கினன். அவ்விடத்தில், பழையபாமினிசுல்தான்கள் வம்சத்தில் வந்த ஒருவன் இருக்கக்கண்டு, அவனுக்குச் சுல்தான் பதவியைத்தந்தனன். அதுமுதல் அவனுக்கு "மகமதிய ராஜ்யத்தை ஸ்தாபித்தவன்" என்னும் புதியதோர் பட்டமும் வழங்கலாயது.

கிருஷ்ணராயன் அடில்ஷாவுடன் செய்தபோரைப் பற்றிச்சிறிது ஆராய்வாம். மகமதியர்களுக்கும் இந்தியருக்கும் இருந்த நீண்டபகைமையானது, இந்தப்போரில் இந்தியருக்கு வெற்றியோடு முடிவுபெற்றது. இந்தச் சண்டையில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது இந்தியாது பக்கத்தில் போர்செய்த ராணுவத்தின் பேரளவேயாகும். இவ்வளவுபெரிய ராணுவத்துடன், எவரும் இதுவரை போர்செய்ததேகிடையாது. ஏழுலக்ஷத்துமூவாயிரம் காலாட்படைகளும், முப்பத்திரண்டாயிரத்து அறுநூறு குதிரைப்படைகளும் ஐந்நூற்றம்பத்தொரு யானைப் படைகளும் பிறவும் அந்தப் போரில் கைகலந்து போர் செய்தன என்ருல், லக்ஷத்திருபதினுயிரம் காலாட்படைகளையும், பதினெண்ணுயிரம் குதிரைப்படைகளையும் இருநூற்றைம்பது யானைப்படைகளையும் கொண்டு நிறுத்திப் போர் செய்யவிட்ட பிஜபூர்சுல்தான் வெற்றியடைவதெங்ஙனம்? அங்ஙமாயினும், அவ்வளவு சிறு ராணுவத்தைக்கொண்டு, இந்தியரைச் சிதறி யோடுமாறும் செய்த

அடில்ஷாவை நாம்புகழவேண்டும். என்றாலும், முன்னர் சிறிது பயந்து புறங்காட்டி யோடிய இந்தியசேனைகள் தமது அரசனது தீரவார்த்தைகளைக் கேட்டுத் தமதுயிரைப் பாராட்டாமல் போர்செய்ததாலேயே, அந்த வெற்றி இந்தியருக்குண்டாயது.

## 6--அதிகாரம்

### கிருஷ்ணராயனது மரணம்

பிஜபூர்சுல்தானை வெற்றிகொண்டபின், கிருஷ்ணராயன், தனக்குப்பின் தனதுமகனை ராஜ்யாதிபதியாகச் செய்வதற்கான ஏற்பாடுகளைச்செய்ய முற்பட்டான். அவனுக்கு ஆறுவயதும் நிறம்பப்பெறாதபாலன் ஒருவன் இருந்தனன். அவனையே தனக்குப்பின் அரசனாக்க வேண்டும் என்பது, அவன் எண்ணம். அப்போது அவனுடைய சகோதாரும் சிற்றப்பனும் உயிருடன் சிறையில் இருந்துவந்தனர். அவர்கள் உயிருடன் இருக்கும்வரையில், தனக்குப்பின் தன் மகன் சிம்மாசனமேற முடியாதென்பது தெரிந்த ராயன் தான்உயிருடன் இருக்கும்போதே, தன் மகனுக்கு முடிசூட்டிவிடவேண்டு மெனத்தீர்மானம் செய்தான். அப்போது அவனுக்குப்பின் பட்டத்திற்குவர, பலபேர் ரகசியமாக முயற்சிசெய்து வந்தனர். அதுவரை, விஜயநகர ராஜ்யத்தை முன்னுக்குக் கொண்டுவருவதில் தனது முழுக் கருத்தையும் செலுத்திவந்த சாலுவதிம்மனும், அந்தராஜ்யத்தைக் கைக்கொள்ள முயன்றான். ஆகவே இவற்றையெல்லாம் உணர்ந்த கிருஷ்ணராயன், உடனே, தனது மகனுக்கு நல்ல நாள் ஒன்றில் முடிசூட்டினன். ஏழைகளுக்கு, அவர்கள் வறுமையொழியப் பொருள்களை வாரி

வாரியிறைத்தனன். பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெரிய பெரிய தானங்களைச் செய்தனன். பிறகு அவன் தன் பிள்ளைக்குத்தானே மந்திரியாக இருந்து, தனக்கு மந்திரியாக இருந்த சாலுவதிம்மனைத் தனது மந்திராலோசனைத் தலைவனாகவும் கொண்டு, ராஜ்யகார்யங்களைச் செவ்வனே நடத்திவந்தனன். அந்தமுடி சூட்டிய உற்சவம், அந்தநகரில் ஏறக்குறைய எட்டுமாதம் வரையில் நடைபெற்றது. அந்த உற்சவம் நடைபெற்று வருகையில், அந்தக் குழந்தைமன்னன் நோய்கண்டு, உடனே இறந்துபோயினன். கிருஷ்ணராயன் தனது ஒரேமைந்தன் இறந்ததும் பெரிதும் வியசனமடைந்தான் எனினும் அவன் தன்மகன் வஞ்சகசூழ்ச்சியால் இறந்தனன் என்பது தெரிந்து, அவ்வஞ்சகச்செயலைச்செய்தவர் எவர் என்பதை அறியத் தொடங்கினன். கடைசியாகத்தனது மந்திரி சாலுவதிம்மனே, பிள்ளைக்கு விஷமிட்டு இறக்கச்செய்தான் என்பது தெரிந்து, உடனே அவனையும் அவனுடைய சகோதரர்களையும், பிள்ளைகளையும்சிறையில் அடைத்தனன். பிறகு அவன் உடனே முன்னம் இம்மடி நரசிம்மனைக் கொன்ற கொண்டமரெட்டியின் பிள்ளைகளுள் ஒருவனைத் தனது மந்திரியாகக் கொண்டு தானே ராஜ்யவியவகாரங்களை நடத்திவந்தனன்.

சாலுவதிம்மனின் மூத்தமகன் தனைக் என்னும் பெயருடையவன். அவன் தன் தந்தையுடனும் சகோதரருடனும் பலநாள் சிறையிலிருந்து வருந்திக் கடைசியாகத் தனது தந்தை, சிறியதந்தை சகோதரர்களைக்காக்க எண்ணங்கொண்டு, எப்படியாவது சிறையினின்றும் எவரும் அறியாதபடி ஓடிவிடத்தக்கசமயத்தை எதிர்பார்த்திருந்தனன். கடைசியாக அவன் ஒருநாள், காவலாளர் உறங்கு நேரம் அறிந்து, தனியாகச்சிறையை விட்டோடி, விஜய

நகரத்திற்கருகே யுள்ள ஓர் கோட்டையில் போய்த் தங்கி னன். அந்தக் கோட்டைக்கதிபன், அந்தத் தனேக் என் பவனின் நெருங்கிய உறவினனுவன். அவன் தனேக் தன்னிடம் வந்ததும், அவனுக்கு அஞ்சல் அளித்துக்காத்து வந்தனன். சிலநாட்கள் கழிந்தபின் தனேக் பெரிய சேனை யொன்றைச் சேகரித்துக்கொண்டு விஜயநகர மன்ன னுடன் போர்தொடுத்தனன். அதை உணர்ந்த கிருஷ்ண ராயன் அஜபோய்சா என்பவன் தலைமையில் சில சேனை களை அனுப்பினன். அஜபோய்சா அந்தச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு, உடனே அந்தத் தனேக் என்பவன் இருக்கும் கோட்டையை அடைந்து, போர் செய்தனன். அந்தப் போரில் தனேக் என்பவன் கைதியானுன். அஜ போய்சா, தனேக் என்பவனையும் அவனுக்குத் துணை செய்த அந்தக்கோட்டையின் தலைவனையும் சிறையாக்கி அவர்களை விஜயநகரங்கொண்டுவந்துசேர்த்தான். உடனே கிருஷ்ணராயன் கோபமூண்டு, தனேக் என்பவனையும் அவ னுடைய சகோதரர், தகப்பன், சிறியதகப்பன் முதலா னேரையும் சபையிற் கொண்டுவந்து நிறுத்தி, அவர்களது கண்களைப் பிடுங்கிவிடுமாறு உத்தரவிட்டனன். அவனுக்கு அவர்களைக் கண்டபோது அதிககோபம் உண்டாயதாயி னும், பிராமண வம்ஸத்தவரைக்கொலை செய்தலாகாதென, அவ்வூர் நீதி கூறியதால், அவர்களைக்கொலை செய்யாது, கண்ணைப்பிடுங்கி மாத்திரம் விட்டுவிட்டனன். அதற்குப் பின் சாளுவதிம்மன் விஷயமாக, மேலும் சரித்திரங்கள் ஒன்றும் சொல்லவில்லை. ஆதலால், அவன் தனக்கு வந்த மானக்கேட்டை எண்ணி, அதே ஏக்கத்தால் உயிர் விட் டிருப்பன் என்று நாம் யூகிக்கவேண்டும்.

இங்ஙனம், இந்தியாவின் மத்தியகால சரித்திரத்தில் பெரும் புகழும்பெற்ற ஒரு ராஜதந்திரியின் மரணம், துக்

கம் பாராட்டுவாரின்றியும், மரியாதை கொண்டாடலின்றியும் நேர்ந்தது, பெரிதும் வியசனிக்கத்தக்கதேயாகும். சாளுவதிம்மனைப்போல், ராஜ்ய நிபுணன் அக்காலத்தில் ஒருவனு மிலன். அவனுடைய புத்திவன்மையும், ராஜ்யாதிகார முறைமையுமே, விஜயநகரம் அத்துணைப் பெரியபதவியை அடையக்காரணமாயின. அவனுடைய போர்த்திறமை எவர்க்கும் இல்லையென்னலாம். அவன், கலங்கா நெஞ்சத்துடன் கடும்போர்களில் தலையிட்டுப் பகைவரை வசப் படுத்துவதில் கைதேர்ந்தவனாய் இருந்தனன். அன்றியும் அவன் அந்த ராஜ்யத்தில் மந்திரிபதவியை வகித்தது மாத்திரம் அன்றி, தலைமைச் சேனாதிபதி பதவியையும் ஆசிரியப் பதவியையும் வகித்துத் தனது ராஜ்யத்திற்கு மிக்க புகழை நிலைநாட்டியவன். அவனைப்போல் போர்க்களத்தில் சேனைகளை அணிவகுத்துப் போர்க்குஎழச்செய்யும் வன்மை, வேறு எவர்க்கும் இராது. அரசனுக்குப் பலமுறைகளில் ஏற்பட்ட ஆபத்துக்காலங்களில் எல்லாம், அவனுக்குத் துணையாய் நின்று, அவ்வாபத்தைப் போக்கியவன். ராஜ்யங்களைப் பாகுபடுத்தி, ஆங்காங்கு அதிகாரிகளை ஏற்படுத்தித் தனது மன்னனது செங்கோல் எங்கும் கோணாது நிற்கச்செய்தவனும் இந்தச் சாளுவதிம்மனேயாவன். இந்தகைய மேம்பாடமைந்த இவன், இந்த விஜயநகரம் முன்னுக்கு வருவதில் எவ்வளவு கஷ்டமும் நஷ்டமும் அடைந்து, மிகவும் நம்பிக்கையும் நன்றியறிதலுமுள்ள போர்வீரனாகவும், சேனாதிபதியாகவும், ராஜ்ய தந்திர நிபுணனாகவும், பிரதம மந்திரியாகவும் ஆசிரியனாகவும் இருந்து வந்ததிலிருந்து, இவனை ஓர் வஞ்சகன் என்று கூற எவரும் முற்படாரன்றோ? அங்ஙனமாக, அவனால் எத்துணையோ மேன்மையை அடைந்த கிருஷ்ணராயன், எங்ஙனம் துணிந்து, அவனே தன்மகனைக் கொன்றவன்

என்று சொல்லினன் ? சாளுவதிம்மன் அன்றோ கிருஷ்ண ராயனை அவன் சகோதரன் சூழ்ச்சியால் இறந்துபடா வண்ணம் காத்து, அவனைச் சிம்மாசனாதிபதியாக்கிய வன் ? அவன் அந்த ராஜ்யத்தை அபகரிக்க எண்ணங் கொண்டவனாய் இருந்தால், முன்னரே அனாயாசமாய் அதை அபகரித்திருக்கலாம். அவன் முன்னரே எளிதில் அதனை அபகரிக்கக்கூடிய காலத்தில், அங்ஙனம் செய்யாத தால், இப்போதும் அத்தகைய எண்ணங்கொண்ட வன் அல்லன் என்றே சொல்லுதல் வேண்டும். இனி, கிருஷ்ணராயன் எக்காரணம்கொண்டு அந்தப் பெரிய குற்றத்தை அவன்மீது சுமத்தினன் என்பதை ஆராய் வோம்.

சாதாரணமாக, ஒரு ராஜ்யத்தில் உயர்பதவியை வகிப்பவர்க்குப் பொறாமைக்குணமேலிட்ட பல பகைவர் கள் இருப்பர். அவர்கள் அவ்வுயர் பதவியாளனைக் கெடுக்க ஒவ்வொரு க்ஷணமும் எதிர்பார்த்துக் கடைசி யாகத் தாமே ஒரு குற்றத்தைச் செய்து, அந்தக் குற் றத்தை அவ்வுயர்பதவியாளன் தலைமீது சுமத்தித் தாமே அதற்குச் சாக்ஷியாகவும் நிற்பது வழக்கம். அப்படியே நமது சாளுவ திம்மனது பகைவர்கள், தாமே அந்தக் கார் யத்தைசெய்து, அதனைத் திம்மன் தலைமேல் சுமத்தி யிருப் பர். அதைக் கிருஷ்ணராயன் மெய்யென்று எண்ணி, சாளுவதிம்மனைச் சிறைசெய்து இருக்கலாம். அல்லது, உண்மையாகவே, அவன் தனது கடைசிகாலத்தில் புத்தி மாறுபாட்டத்தால் அங்ஙனம் செய்தனன் என்றும் சொல்ல லாம். ஜனங்களின் மதிப்பையும் செல்வாக்கையும் உடைய விஜயநகரத்து மந்திரிகள், அரசபதவியை விரும்புவது விஜயநகரராஜ்யத்தில் சர்வசாதாரணமாய் இருந்துவந்த தால், திம்மனும் தனது தளர்ந்தவயதில், அத்தகைய

பேராசையின் வயப்பட்டுத் தனது மைந்தரை உயர்பதவிக்குக் கொண்டுவரு நிமித்தம், அத்தீய செய்கையைச் செய்திருப்பன். அஃது எங்ஙனமாயினும் ஆகுக. திம்மன் ஒருவன் இல்லாவிடின் விஜயநகராஜ்யம் அவ்வளவு பெருமையை அடைந்திரா தென்பதுமாத்திரம் எவரும் ஒப்புக்கொள்வதோர் உண்மையாகும்.

சாலுவதிம்மன் விஷயம் இவ்வாருக, முன்னம் போரில் தோல்வியுற்ற அடில்ஷாவின் செய்கையைச் சிறிது கவனிப்போம். அடில்ஷா தான் தோல்வியுற்றதுமுதல், அந்தத் தாழ்வை எப்படியாவது மீட்டும் போர்செய்து வென்று நீக்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன், போருக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தனன். அதனுல் அவன் புதிய காலாட்படைகளையும், யானைப்படைகளையும் அதிகமாகச் சேர்த்துக்கொண்டு, அப்போது விஜயநகரத்தரசன் வசமிருந்த ரேய்ச்சூரைவந்தடைந்தான். அவன் பன்முறை கிருஷ்ணராயனிடம் தோல்வியடைந்தும், அக்காலத்தில் சாலுவதிம்மனது சிறையினுல் அந்த வூர் கலங்கியிருந்த நிலைமை அவனுக்குத் தைர்யத்தை உண்டுபண்ணியதால், சாலுவதிம்மனுதவியில்லாத கிருஷ்ணராயனை எளிதில் வெற்றிகொள்ளலாம் என்று எண்ணி ரேய்ச்சூரையடைந்தவுடன், அங்கு யுத்தமுரசம் கொட்டி நின்றனன். அவன் வருகையினை அறிந்த கிருஷ்ணராயன் சிறிதும் தாமதிக்காமல், தனது பகைவனை எதிர்க்க ராணுவங்களைக் கூட்டிக்கொண்டு தானே ரேய்ச்சூரைநோக்கிச் சென்றுன். அவன் ரேய்ச்சூரை அடைந்ததும், ஓர் தூதனை யழைத்து, "நீ அடில்ஷாவிடம் சென்று, 'முன் நிபந்தனையின்படி நீ நடந்துகொள்வதுடன் பெல்காம் என்னும் ஊரையும் உடனே கொடுத்துவிடவேண்டும்' என்று சொல்" என்று

கூறி அனுப்பினன். தூதுவனும் அவ்விஷயத்தை அடில் ஷாவிடம் சொல்லச் சென்றான். அதற்குள் கிருஷ்ண ராயன், கோவாவில் இருக்கும் போர்த்துக்கேசிய கவர்னரைத் தனக்குத் துணையாக வருமாறும், அங்ஙனம் வந்து வெற்றிகொண்டபின், தான் அடையும் பெல்காம் என்னும் ஊரைக் கொடுத்துவிடுவதாகவும் கூறினன். இங்ஙனம் மன்னன் அடில்ஷாவை அடியுடனே ஒழிக்க பலத்த முயற்சிகள் செய்துகொண்டிருக்கையில், அவன், தன்முன்னோர்களைக்கொன்ற பக்கசூலை யென்னும் வியாதியாற் பிணிப்புண்டான். அந்தப் பக்கசூலை யென்னும்நோய், விஜயநகரத்தரசர்கள் பலரையும் விண்ணுலகுக்கனுப்பி வந்தது. அத்தகைய நோய் தனக்கும் வந்துவிடவே, கிருஷ்ணராயன் தனக்கு இறுதிநாள் சமீபித்து விட்டதென்று எண்ணிவிட்டான். என்றாலும் அரண்மனை வைத்தியர்கள் அந்த நோயை நீக்க அரும்பாடுபட்டனர். அவர்கள் முயற்சி சிறிதும் பயனுறாது போகவே, கிருஷ்ண ராயன் மேலும் கலக்கமடைந்தனன். கடைசியாக அந்த நோய் மேலும் மேலும் விர்த்தியடைந்ததால், 1530-ம் வருஷத்தில் அவன் விண்ணாடு புகுந்தனன்.

## 7—அதிகாரம்

### கிருஷ்ணராயன் குணாதிசயங்கள்

கிருஷ்ணராயனை, பேயி முதலான அயல்நாட்டு யாத்திரைக்காரர்கள் நேராகவே கண்டு, அவனைப் பற்றிப் புகழ்ந்துள்ளனர். அவர்கள் நேரில் கண்டெழுதிய குறிப்பில் உள்ள விஷயத்தை யாம் இங்குச் சுருங்கச் சொல்கிறோம். கிருஷ்ணராயன் முகவசீகரமும் கம்பீரத்தோற்ற

மும், எவரையும் அடக்கியாளும் தன்மையும் நடுத்தரமான உயரமுமுடையவனாய் இருந்தனன். அவனைச் சிறிது கொழுத்துப் பலமுற்ற தேகமுடையவன் என்றே நாம் சொல்லவேண்டும். அவனுடைய முகத்தில் வைசூரிவந்த வடுக்கள் இருந்தன. அவன் எப்போதும் சந்தோஷ சித்த முடையவனாகவே இருந்தான். எனினும், அவனைக்கண்டவர் அஞ்சும் ஒரு தன்மையும் அவனிடத்தில் இருந்தது. எத்தகையகஷ்டமான சமயத்திலும் அவன் சிறிதும் தளராத நெஞ்சம் உடையவனாகவும், துன்பம் என்பதைச் சிறிதும் அறியாதவனாகவும் இருந்தனன். அவனுடைய தேகம், தினந்தோறும் அவன் செய்யும் தேகாப்யாசப் பயிற்சியால் கட்டுப் பெற்றிருந்தது.

கிருஷ்ணராயன், தினந்தோறும் பொழுது விடிவதற்கு முன்னரே எழுந்து, உழக்கு எண்ணெய் உட்கொள்வான். பிறகு களிமண்ணினால் செய்யப்பட்டு மிகவும் நிறையுள்ளதான செங்தோலா என்னும் கருவியைச் சுழற்றிய பின், கர்லா முதலிய வலிதரும் ஆயுதங்களைச் சுழற்றி, கசரத்து செய்வன். அவன் குடித்த அவ்வளவு எண்ணெயும் தன் தேகத்திலிருந்து வெளிப்படும் வரையில், கசரத்து செய்வதை அவன் விடமாட்டான். அந்த எண்ணெய் முழுவதும் வியர்வையுடன் வெளிவந்த பின்னர், தன் தேகத்தை மெல்லிய வஸ்திரம் கொண்டு துடைத்து, வியர்வை புலர்ந்த பின்னர், அரண்மனையில் உள்ள மல்யுத்தக்காரருடன் மல் யுத்தம் (குஸ்தி) புரிவான். அதற்குப் பின் அவன் சூர்யன் உதயமாகும் வரையில் குதிரை சவாரி செய்வான். கிருஷ்ணராயன் குதிரை யேற்றத்தில் மிகவும் திறமமைந்தவன். ஆதலால், அவன் தினந்தோறும் வெட்ட வெளியில் தான் ஏறிய குதிரையை அங்கு மிங்கும் ஓட்டி, அதனைப் பலவாறு பழக்குவ

துடன், தன் தேகப் பயிற்சிக்கும் இடம் செய்து கொள்வான். அவன் அங்ஙனம் குதிரைச் சவாரி செய்யுங் காலத்தில், குதிரைக்குப் பெரிதும் இளைப்பும் களைப்புந் தோன்றிய காலத்திலும் கூட, அவனுக்குச் சிறிதும் மேல் மூச்சு வாராது. இங்ஙனம் அவன் சூர்யன் உதயமாகும் வரையில் செய்து பின் தனதரண்மனைக்குச் செல்வான்.

கிருஷ்ணராயனது உடை மிகவும் வேலைப்பாடும் விலையுயர்ந்ததுமாக இருந்தது. அவனை முதன் முதலாகப் போர்த்துகேசிய வீரனான கிரிஸ்டவோடி பிகரீடோ என்பவன் கண்டபோது, அவன் பொற்சரிகை நிறைந்த வெள்ளிய வஸ்திரத்தை இடையில் தரித்தும், வைரமிழைக்கப் பெற்று விலைமதிக்க வொண்ணாத பதக்க மொன்றைக் கழுத்தில் அணிந்தும், பட்டுக்குஞ்சம் தொங்கவிட்டு அகன்று வட்டவடிவான தலைப்பாகையைப் பூண்டு மிருந்ததோடு காலில் ஒன்றும் தரித்துக்கொள்வதின்றி இருந்தனனும்.

கிருஷ்ணராயன் தினந்தோறும் காலையில் எழுந்து தேகாப்யாசம் செய்தானவுடன் நீராடித் தனது பூஜையறைக்குச் செல்வான். அங்கு முறைப்படி பிராமணர்களைத் துணையெனக் கொண்டு, வேத மந்திரங்களால் இறைவனைப் பூஜைசெய்து முடித்தபின் உணவு கொள்வான். உணவு உட்கொண்ட பின்னர், அவன் தனது நிர்வாக சபை மண்டபத்திற் சென்று அமர்வன். அவன் வருவதற்கு முன்னரே, மந்திரி பிரதானிகள் முதலானோர் அவ்விடத்தில் வந்து, அவரவர்களுக்கென ஏற்பட்டுள்ள இடத்தில் உட்கார்ந்திருப்பர். ராயன் அவ்விடம் சேர்ந்தவுடன் அங்குள்ள உத்தியோகஸ்தருடன் ராஜ்ய விபவகாரங்களைக் கவனிப்பன். அவனைப் பார்க்க அன்னிய நாட்டு வர்த்தகர் பலர் அவ்விடம் வந்து சேர்வர். அவர்

களை அந்த மண்டபத்தில் அன்புடன் வரவழைத்து, முக மலர்ச்சியுடன் பேசி, அவர்களுக்காவனவற்றைச் செய் தனுப்புவன். அதனால் அவனை அயல்நாட்டவரும் பெரி தும் மதித்து, அவனிடத்தில் நட்புரிமை கொண்டாடிய தோடு, மன்னன் எனும் அச்சமும் பாராட்டி வந்தனர். கிருஷ்ணராயன் அரண்மனையை விட்டு வெளியே செல்வது அபூர்வ செயலாகும். எப்போதாவது அவன் வெளியே போக நேரிட்டால் தனியாகப் போகமாட்டான். எப் போதும் தன்னுடன் உடல் காப்பாளரையும், சில குதி ரைப் படைகளையும், கைதேர்ந்த காலாட்களையும் துணை கொண்டே வெளிச் செல்வான்.

அவன் தனதாயுள் வரையில், தேகாப்யாசப் பயிற்சி யைச் சிறிதும் விடாதிருந்ததால், அவனுடைய தேகம் நன்றாய்க் கட்டுப்பாடமைந்தே இருந்தது. தளர்ந்த நடை யுடன் அவன் ஒருபோதும் நடந்ததில்லை. எப்போதும் எக்கழுத்தமுடன் நடந்து செல்வதையே அவன் தன் வழக்கம் எனக் கொண்டிருந்தான். அவன் தன்னுடைய கடைசிகாலம்வரையில், தேகச்சோர்வென்பதைச் சிறிதும் அறியாதவனாய் இருந்ததால், அதற்கேற்ப அவனுடைய மனதிலும் சோர்வென்பது இல்லையாயிற்று. அவன்மிகவும் திறமமைந்த போர்வீரர் தலைவனாய், எத்துணைப் பகைவர் தன்னை வந்தெதிர்க்கினும் அவர்களைக் கண்டு சிறிதும் அஞ் சாமல் அளவு கடந்த தைர்யத்துடன் சமர்க்களத்தில் சேனைகளை நடத்துவதில் மிகவும் கீர்த்தி பெற்றவன். அவனுடைய தைர்யம் எல்லாம், எப்போதும் எவற்றை யும் கருதாது, முரட்டுத்தனமாக எதிர்ப்பதிலேயே துணை யாயிருந்தது. ஆபத்துக்காலங்களிலும் கூட அவன் சலிப் படையாது முரட்டுத்தனமாகவே தனது சேனைகளை ஏவிப் பகைவர்களை ஹதம் செய்வன். இந்த உண்மை, அவன்

சேனைகள் அடில்ஷாவுடன் போரிட்டுப் புறங்காட்டிய காலையில், அவற்றை அவன் மீட்டும் பகைவர்கள் மீது ஏவிய,தால் நன்கு விளங்கும்.

ராயனிடத்தில் அரசருக்கிருக்கவேண்டிய குணங்கள் எல்லாம் ஒருங்கே அமைந்திருந்தன. அந்தக் குணங்கள் அவனிடம் அமைந்திருந்ததால், அவன் மற்றைய மன்னர் களினும் மேன்மையும் கீர்த்தியும் உடையவனாக விளங்கி னன். அவன் தன்னுடைய இளமையில், சாலுவதிம்ம னிடம் ராஜ்யநீதி முறைகளையும் பிறவற்றையும் திறமை யுடன் கற்றுத் தேறியதால், அவன் தனது ராஜ்யத்தைக் கடைசி வரையில் நல்ல ஒழுங்கில் வைத்திருந்தான். அவன் தன்னையன்றி மற்றெவரையும் நம்புவதில்லை. அங் ஙனமிருந்தும் அவன் தனது திறமையால், விஜயநகர மாகும் தனது ராஜதானியிலிருந்தே தனது முழு ராஜ்யத் திலும் தன்னுடைய அதிகாரமே செல்லும் வண்ணம், ஆட்சி புரிந்து வந்தனன். அவன் மற்றைய மன்னர்கள் போல் பெயரளவில் சக்கரவர்த்தி யென்ற பெயரடை யாது, செய்கையிலும் தான் வன்மையுற்ற சக்கரவர்த்தி யென்னும் உண்மையை உலகறியக் காட்டி வந்தனன். அவன் சாலுவதிம்மனைக் கலந்து, ராஜ்ய கார்யங்களை நடத்திவந்த போதிலும், அவன் அந்தத் திறமை மிக்க மந்திரியின் கைப்பம்பரமாக ஒருபோதும் இருந்ததில்லை. அவன் தனது மந்திரியின் சொல்லைத் தன் புத்திக்கு ஏற் புடைத்தென்று தெரிந்தால்தான் மேற்கொள்வானே யல் லாது, தன் மனதிற்குப் பொருந்தாதனவற்றை உடனே விட்டு விடுவான்.

அவன் தனது ஆயுள் வரையில் போர் செய்வதிலும் வெற்றி காண்பதிலும், நாடுகளைச் சேர்ப்பதிலும் தன் கவனத்தைச் செலுத்தி வந்தாலும், இடையிடையே

தனது காலத்தை மத விசாரணை செய்வதிலும் கல்வியிலும் செலவிட்டு வந்தனன். அவன் தன திளமையிலிருந்து கல்வியில் அதிக ஊக்கம் உடையவனுய், தெலுங்கு பாஷையைக் கற்று, அதில் கவிபாடுந் திறமும் பெற்றிருந்தான். அவன் தெலுங்கில் பல நூல்களையும் இயற்றியுளன். அவற்றுள் அமுக்தமால்யதை என்பது, மிகவும் சிறந்தது. அந்த நூல், அரசனுடைய ஒழுங்கையும், அவன் ஆளவேண்டிய முறைமைகளையும், அவன் செலுத்தவேண்டிய நீதியையும், ராஜ்ய வியவகாரங்கள் நடைபெறவேண்டியதற்கான உபாயங்களையும் விளக்கமுறச் சொல்வது. கிருஷ்ணராயன் கவிகமனம் செய்யும் ஆற்றல் உடையவனுய் இருந்ததால், அவன் தனது தாய்ப்பாஷையினிடத்தும், தாய்ப்பாஷையைக்கற்று மேன்மைவாய்ந்த புலவர்களிடத்தும் பெரிதும் பற்றுடையவனுய் இருந்தனன் என்று சொல்வது மிகையாகும். அவனுடைய ஈகைக்குணமும், கல்வியினிடத்து அவன் வைத்த அன்பும், அவனுடைய அரண்மனைக்குப் பல புலவர் திலகங்களைக் அடிக்கடி கொண்டுவந்து சேர்த்தன. அவன் தன்னிடத்து வரும்புலவர்களை அன்போடு வரவேற்று அவர்களுக்காவனவற்றை முதலிற்செய்தே, பின் தனது மற்றைய வியவகாரங்களைக் கவனிப்பான். அவன் தனது ஒய்வுநேரங்களில் தனது அரண்மனை வித்வான்களுடன் சாஸ்திர ஆராய்ச்சிசெய்வன்; மதாசாரியர்களுடன் கலந்து மதங்களின் உண்மையை விசாரணை செய்வன்.

கிருஷ்ணராயனுக்குப் பல மனைவியர் இருந்தனர் என்று கதைகள் கூறுகின்றன. ஆனுல், நூனிஸ் என்பவர் மாத்திரம், ராயன் நான்கு மனைவியரையே மணந்தான் என்றும், அவர்களுள் சின்னம்மதேவி யென்பாளிடத்தில் அவன் அதிக பற்றுடையவனுய் இருந்தான் என்றும்

சொல்கிருர். அந்தச் சின்னம்மதேவி யென்பாள் ஆதியில் விஜயநகரத் தாண்மனையில் பணிப் பெண்ணுக இருந்த னள். கிருஷ்ணராயன் அவளைத் தனது இளமைப் பருவத்தே காதலித்து, மனைவியெனத் தன்மனத்துட்கொண் டான். அப்போதவன் அவளுக்கு, "நான் இந்த ராஜ்யத்து மன்னனுகும்போது, உன்னை மணம்செய்து கொள்கிறேன்" என்னும் வாக்குறுதி செய்து தந்தான். பிறகு அவன் ராஜ்யபாரத்தை வகிக்க ஏற்பட்டபோது, தனது வாக்கை நிறைவேற்ற அவளை மணந்து, அவளிடத்தில் நீங்கா அன்புகாட்டிவந்தனன். அவனுக்குத் திருமலாம்பாள், வெங்களாம்பால் என்னும் இரண்டு பெண்கள் பிறந்தனர். அவர்களுள் திருமலாம்பாள் என்பவள், கர்ணுடக வம்ஸத்து அரசனுகிய ராமராஜன் என்பவனையும், வெங்களாம்பாள் என்பவள், ராமராஜன் சகோதரன் திருமலைராயன் என்பவனையும் மணம் செய்து கொண்டனர். அவனுக்குத் திருமலைராயன் என்னும் மகன் ஒருவன் இருந்தான் என்றும் சரித்திரங்கள் கூறுகின்றன. ஆனல் அவனுக்கு வேறுமைந்தர் இருந்தனர் என்று எந்த நூலும் சொல்லாமையால் அந்தத் திருமலைராயன் என்பவனே, திம்மனுல் இளமையிலேயே கொல்லப்பட்டவனுக இருத்தல்வேண்டும்.

## 8—அதிகாரம்

### கிருஷ்ணதேவனுளுகையிலிருந்த விஜயநகர ராஜ்யம்

அந்த ராஜ்யத்தின் முழு நிர்வாகமும் கிருஷ்ணராயனிடத்திலேயே இருந்து வந்தது. அவனுடைய அதிகாரம் இவ்வளவிற்றென்று சொல்வதற்கில்லாதபடி பெரிதும் வியாபித்திருந்தும், அவன் தனது குடிகளின் வேண்டு

கோட்கிசைந்தவனுய் எப்போதும் அவர்களுக் காவனவற்றையே செய்வதில் தன் முழுக்கருத்தையும் செலுத்திவந்தான். அங்ஙனமிருந்தும், அவன் எவர்க்கும் தலைவணங்காத் தன்மை வகித்து எக்காலத்தும் தானிட்டதே சட்டமாம்படிச் செங்கோல் செலுத்தினன். அவனே அவ்வப்போது சட்டங்களை ஏற்படுத்தும் அதிகாரத்தையும் வைத்துக்கொண்டான். அவன் ஏற்படுத்திய சட்டங்கள் நியாயமானவையாதலால், அவற்றிற்கு எவரும் கீழ்ப்படிந்து நடக்கத் தலைப்பட்டனர். அக்காலத்து, அவன் ஏற்படுத்திய சட்டங்களுக்குச் சிறிதும் மாருக எவரும் நடந்ததில்லை. அவன் அச்சட்டங்களை ஏற்படுத்துங் காலத்து, மந்திராலோசனைச் சபையாருடன் கலந்து யோசிப்பது வழக்கமா யிருந்தாலும்கூட, அவன் அந்த மந்திராலோசனைத் தலைவர்கள் சொல்லியபடியே செய்யவேண்டும் என்ற நிபந்தனையில் சிக்கிக்கொள்ளவில்லை. அவன் அந்த மந்திராலோசனைச் சபையை வைத்துக்கொண்டிருந்தது, சில சமயங்களில் அவர்கள் கூறுவனவும் நன்மையா யிருக்குமாதலால், அவற்றையும் ஆராய்ந்து பார்க்கலாம் என்ற எண்ணத்தினுலே யாம். அவன் அவர்கள் கூறுவனவற்றை எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டவன் அல்லனுயினும், சில சமயங்களில் அவர்கள் சொல்வன தங்குடிகளுக்கு நன்மையை விளைவிப்பனவாயின், அவை தன் அபிப்பிராயத்திற்கு மாறுபட்டனவா யிருந்தாலும் ஏற்றுக்கொண்டு, அப்படியே சட்டதிட்டங்களை யேற்படுத்துவான்.

ஓர் சரித்திரக்காரர் சொல்வது :—

"இறைமை என்பது இதுவே எனச் சுட்டி யறியத் தக்கதாய், குடிகளனைவர்க்கும் பொதுத்தலைமை வகித்து, தனக்குத் தன் குடிகள் அடங்கி நடப்பது வழக்காய்

இருக்க, தான் வேறு மனிதர்க்குக் கீழ்ப்படியாத வழக்கத்தை மேற்கொண்டதோர் அரசியற் றலையங்கத்தின் அதிகாரம். இவ்வதிகாரம் நமது கிருஷ்ணதேவராயனுக்கு இருந்ததால் அவனை எல்லாவகையாலும் இறைவன் எனலாம். ராஜ்யத்தினது ஆளுகை முழுதும் அவன் கையிலேதான் இருந்தது. அவனுடைய ஆளுகைக்கோர் கட்டுப்பாடு இல்லை. அவன் சட்ட திட்டங்கள் செய்யும் முழு அதிகாரத்தையும் பெற்றிருந்தான். அவன் செய்த சட்டத்தை ஒருவரும் நிராகரிக்க முடியாது. அவன் ஒரு மந்திராலோசனைச் சபையை ஏற்படுத்தி அதன் புத்திமதியைக் கேட்டுவந்தது உண்மையே. ஆனால் அச்சபையானது அரசனை இன்னதே செய்ய வேண்டுமென வற்புறுத்த முடியாது ; வேண்டியபோது குற்றங் குணங்களை எடுத்துக்காட்டிச் செய்யத்தக்கது இதுவெனப் புத்திமதி தான் கூறலாம். கிருஷ்ணதேவராயன் இவ்வண்ணம் கட்டுப்பாட்டில் அடங்கப்பெறாத மன்னனாயினும் அவன் கொடுங்கோன் மன்னன் அல்லன். எக்காலத்தும் தனது குடிகளின் செல்வாக்கைப் பற்றியே எண்ணியிருந்து அவர்களுக்கு நலமானவற்றையே செய்துவந்தான். அக்குடிகளுக்குத் தீமை விளைப்பவற்றை அவன் கனவிலும் நினைத்ததில்லை என நாம் ஓர் முடிவாய்க் கூறலாம்."

மந்திராலோசனை சபை :—அரசர் சாதாரணமாக, சேனாதிபதிகளும், சீமான்களும் அடங்கிய ஓர் சபையின் புத்திமதியைக் கேட்பது வழக்கம். ஆனால் ராயனது சபையினர்க்குப் புதிதாக ஓர் சட்டம்செய்ய ஒன்றும் அதிகாரம் கிடையாது ; இவர்களால் அரசனைக் கட்டுப்படுத்தவும் முடியாது. அவர்கள் கூறியவற்றை அரசன் நிராகரித்தும் விடலாம்.

மந்திரிகள் :—கிருஷ்ணதேவராயனது துரைத்தனத்

தார் அவனது அமைச்சர்களே. அவர்களே அவனது அதிகாரத்தை எங்கும் செலுத்திவந்தனர். அவ்வமைச்சர்களது கூட்டம், தற்காலத்து "அமைச்சர் குழு" வினைப் போல் இருந்தது. அவ்வமைச்சர்களது தலைவரே பிரதம மந்திரி. அவன் அரசனுக்கு அடுத்தபடி இராஜ்யத்தில் அதிகாரம் மிக்குடையவன்; மற்றைய அமைச்சர்கள் எல்லாம் அவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களே. சேனைகளையும், மற்றைய அரசாங்கங்களையும் அவனே அடக்கி ஆண்டு வந்தான். அவையெல்லாம் அவனது முழு நிர்வாகத்திலேயே இருந்து வந்தன. ஆனுல் இப்போதிகாரத்தை எல்லாம் அவர் அரசனது 'பேரினுலேயே செலுத்தி வந்தான்; இறைமை அதிகாரம் சென்று பாயும் ஓர் பெரிய வாய்க்காலே இத்தலைமை அமைச்சு எனலாம்.

இவனுக்கு அடுத்தபடியில் மந்திரி எனும் அதிகாரி இருந்தான். அவனுக்கு இருந்த அதிகாரம் இன்னது என்று இப்போது அறிய இயலவில்லை. ஒருவேளை இவன் அரசனுக்கு அந்தரங்கமாய்ப் புத்திமதி யுரைப்போனுய் இருந்திருக்கலாம். மற்ளுேர் அமைச்சன் கஜானுவிற்குத் தலைவனுய், இராஜ்யத்திற்கு வரும்பணத்தை வசூலிப்பதிலும் அவற்றைச் செலவிற்குப் பிரித்துத் தருவதிலும் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தான். இவர்களைத்தவிர மற்று மநேக அமைச்சர்களும் இருந்தனர். ஆனுல் அவர்கள் என்ன என்ன அதிகாரம் செலுத்தினுர்களோ நமக்குத் தெரியாது. இவ்வமைச்சர்கள் எல்லாம் இவ்வாறு அரசாட்சியை நடத்திவந்தது மாத்திரமன்றி போருண்டான காலத்தில் தண்டத்தலைவர்களாகவும் போய்ச் சண்டை செய்வது உண்டு. ஒரிஸாவுடன் போர்நேர்ந்தபோது சாளுவதிம்மனென்னும் பிரதம மந்திரியன்ளுே பிரதம சேனுதிபதியாகவும் இருந்தான்? இது மஹமதியாது

காற்றுவாடை வீசியதால் வந்தநிலைமைபோலும். மஹமதியர்கள் அக்காலத்தில் வேற்று நாட்டில் இருந்து இந்தியாவில் நாடுகளை ஆளவந்தபோது, எப்போதும் யுத்தஸன்னத்தராக இருந்துவந்தனராதலின் அவர்கள், சேனாதிபதிகளுக்கும் மற்றை அரசாங்கத்தினர்க்கும் வேறுபாடு நோக்காது, எல்லா அரசாங்கத்தினரையும் சேனையைச் சேர்ந்தோராகவே நியமித்து வைத்திருந்தனர். இம்மஹமதிய வழக்கத்தையே மஹமதியர் தென்னிந்தியாவில் ஆதிக்கம் பெற்றபின், உயர்வு பெற்று விளங்கிய விஜயநகர ராஜ்யமும் பின்பற்றியதுபோலும். அதுவுமன்றி அம்மஹமதிய நாடுகளைப்போலவே, இவ்விராஜ்யமும் தன் அண்டை வீட்டிலேயே தனக்கு வைரிகளான மஹமதிய பாமனி ராஜ்யங்களைவைத்திருந்தமையே இவ்வாறு அமைச்சர்களே தண்டத் தலைவர்களா யிருந்தமையை விளக்கும்.

ராஜ்யப் பகுதிகள் :—இவ்விராஜ்யமானது பற்பல சிறு ராஜ்யங்கள் அல்லது நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை இருநூற்றுக்கு மேற்பட்டிருந்தனவென நூனிஸ் எழுதிவைத்துள்ளார். அவற்றில் சில ஒரு சிறிய குன்றக்கோட்டையும் அதைச் சுற்றியுள்ள பல காணி நிலங்களுஞ் சேர்ந்தவை ; இன்னுஞ் சில மிக விஸ்தீரணமுடையவையாய்த் தற்போதைய ஜில்லாக்களுள் இரண்டு மூன்று கொண்டு விளங்கின ; மற்றவை இவ்விரண்டு வகைக்கு நடுத்தரமானவை. சிற்சில இடங்களில் பல குன்றக்கோட்டைகளும் அதைச்சார்ந்த நிலங்களும் சேர்ந்து ஒருநாடாவதும் உண்டு. துளுவநாடு, கன்னடநாடு, சோழமண்டலம் என்பன பெரியநாடுகளில் ஒரு சிலவாகும்.

சேனாதிபதிகள்: ஒவ்வொரு நாடும், அரசன் ஏற்படுத்திய சேனாதிபதி அல்லது இராஜ்யாதிபதியின் கீழ் இருந்துவந்தது. ஆனால், இராஜ்யாதிபதி அந்நாட்டை அங்கிருந்து

ஆளுவதில் ஒன்றும் தலையிடாததால் சேனாதிபதியே அந் நாட்டுக்குத் தனித் தலைவராய் இருந்தான். அவனே குடித் தனக்காரருக்கு, நிலத்தைப் பிரித்துக் கொடுத்து, அவர்க ளிடமிருந்து நிலவரி வசூல் செய்தான். ஒவ்வொருசேனாதி பதியும் அரசனுக்கு, ஒவ்வொரு வருஷமும் இவ்வள வென்று ஏற்பட்ட பணத்தைக் கட்டவேண்டும். இவர்கள் கட்டவேண்டிய அளவு ஓர் முறைக்கோ, அல்லது ஓர் நெறிக்கோ உட்பட்டதல்ல. அந்த அளவு சேனாதிபதிக ளது மொத்த வருவாயில் கால்பாகத்திற்குக் குறையா மலும் பாதிக்கு மேற்படாமலு மிருந்ததெனப் பொது வாகக்கூறிவிடலாம். ஒவ்வொரு சேனாதிபதியும் அரச ருக்குவேண்டியபோது உதவி புரிவதற்காகத் தன்னாட் டில், தன் செலவிலேயே, தன் வருமானத்திற்குத் தகுந்த படி சேனையைத் திரட்டி வைத்திருத்தல் வேண்டும். போர் நடக்கும்போது இச்சேனாதிபதிகள் போர்க்களத் தில் தண்டத் தலைவர்களாய்ப் போர்புரிவது வழக்கம். இவ்வளவோடு நில்லாது இச்சேனாதிபதிகள் அரசாது மனைவாழ்க்கைக்கு வேண்டிய அரிசி, கோதுமை முதலிய உணவுப் பொருள்களையும் தந்தாகவேண்டும். இச்சேனாதி பதிகளில் சிலர் அரசரது அமைச்சராகவும் விளங்கினார் கள். அமைச்சர்களானால் அரசனது பக்கலிலேயே இருக்கவேண்டும் ஆதலின், அவர்கள் தமது சுற்றத்தாரில் யாரையேனும் ஒருவரைத் தம் நாட்டை ஆளும்படி விட்டு விட்டு, தாம் அரசர் இருக்கும் தலைமை நகரிலேயே இருந்து வருவர். சாலுவதிம்மன் என்னும் கிருஷ்ணதேவ ராயனது பிரதம மந்திரி கொண்ட வீடு எனும் நாட்டின் சேனாதிபதியாயிருந்தும், தான் அமைச்சனாய் இருந்தமை பற்றி, அரசரை விட்டுத் தூரத்திலிருப்பது முடியாதாகை யாலே தனது மருகனைத் தனக்குப் பதிலாகக் கொண்ட

வீட்டில் ஆளும்படிச் செய்தமை நாம் கூறிவருவதை நன்கு விளக்கும்.

சிற்றரசர்: அரசனே தனது அதிகாரத்தைத் தனது அமைச்சர் முதலியோரது வாயிலாகச் செலுத்தி ஆண்டு வந்த நாடுகள்போக வேறு சில நாடுகள் கப்பங்கட்டுவன வாக இருந்தன. இத்தகைய நாடுகளின் அதிபதிகள் கிருஷ்ணதேவராயனுக்குக் கீழ்ப்படிந்த சிற்றரசர்கள்; இவர்கள் எல்லோரும் அரசனைத் தமது, தலைவராகக் கொண்டு அடங்கி வாழ்ந்து வந்தனர். அவர்கள் தம் நாட்டை ஆளுவதில் அவர்களது உள் நடவடிக்கையைப் பற்றி அரசன் ஒன்றும் அவர்களைக் கேட்பதில்லை. அவர் கள் வேறு நாடுகளுடன் வைத்துக்கொள்ளும் போக்கு வரவு நட்பு பகை முதலியவெல்லாம் அரசருக்குத் தெரி யாமலும், அவர் கட்டளைப் பெறாமலும் உண்டாகா. இத் தகைய நாடுகள் ஐந்தென்று சொல்லப்பட்டாலும், அவை கள் இன்னும் அதிகமாகவே இருந்தன என்று கொள்ள இடமுண்டு. இவைகள் வருஷா வருஷம் கப்பங்கட்டுவதும் சண்டை நேர்ந்த காலத்தில் பணத்தையும், போர்வீரரை யும் கொடுத்துதவுதலும் இவைகளது கடமைபோலும். சோழபரம்பரையில் வந்தோரும் உறையூரில் இருந்து, கிருஷ்ணதேவராயனுக்கு அடங்கி யாண்டதாகவும் கூறப் படுவது இங்குக் குறித்திடத்தக்கதே.

அரசனது வருவாய்:—நாம் முற்கூறிய சேனாதிபதிகள் வருஷா வருஷம் கட்டிவந்த பணமே அரசனுக்குப் பெரிய தொருவருவாயாம். அத்தொகை அதிகமாகவே இருந் தது. வரிப்பணமும் மற்றோர் வருவாயாகஇருந்தது. மண மகனும் மணமகளும் செலுத்தவேண்டிய மணவரி ஒன்று எல்லாச் சாதியாரிடத்திருந்தும் வசூல் செய்யப்பட்டது. வரி அதிகமாகவே இருந்தாலும், திருமணக்காலத்தில் வரி

செலுத்த யாரே முணு முணுப்பர்? ஒரிஸாவிலிருந்து கிருஷ்ணதேவராயன் திரும்பிவந்தபோது இவ்வரியைத் திருப்பிக் கொடுத்துவிட்டான். ஒவ்வொரு கைத்தொழிலாளரும் தமது வருவாயில் ஒரு சிறு பகுதியை வரியாகச் செலுத்தவேண்டியிருந்தது. சதாசிவராயன் அம்பட்டர் கட்டவேண்டிய வரியை நீக்கியதாகத் தெரிய வருகிறது. மற்றும் பல பண்டங்கள் மீது வரிவசூல் செய்வதும் வழக்கமாகத்தான் இருந்தது. கிருஷ்ணதேவராயன் ஜனங்கள் இவ்வரியைக் கட்டமுடியாதிருந்தமை நோக்கிப் பொருள்கள்மேல் விதித்திருந்த வரியை நீக்கிவிட்டானும். மற்றோர் சமயத்தில் பார்ப்பனக் கிராமங்களில் வரியில்லா நிலங்களில் பயிராகும் பாக்குமரங்களின்மேல் அவன் வரி போட்டதை எல்லோரும் ஒரேமனதாய் வேண்டாம் எனக் கூறியதாகவும் தெரியவருகிறது. இப்பண்டவரி அல்லாமல், நகரத்திற்குள் புகும் சரக்குகள் சுங்கம் கொடுத்தே தீரவேண்டியிருந்தது. விஜயநகரத்திற்குப் பலவாயில்கள் இருந்தன; ஒவ்வொரு வாயிலிலும் உள்ளோர் சுங்கம் வாங்கிய பின்னே தான், மனிதரோ, சுமையோ, வர்த்தகப் பொருளோ அவ்வாயிலின் வழியாக நகரத்திற்குப் போக விட்டனர். அந்நகர முதல் வாயிலானது பன்னீராயிரம் பொற்காசு சுங்கவருவா யாகப்பெற்று வந்ததாம்.

நீர்ப்பாய்ச்சல் :—உழுதல் தொழிலே அக்காலத்தோர்க்கு உயிர்ப்பெருந் தொழிலாகச் சிறந்தமையால் நீர் வசதி பண்ணிவைக்கக் கிருஷ்ணதேவராயன் எடுத்துக் கொண்ட முயற்சி பெரிதும் வியக்கத்தக்கதே. நீர்ப்பாய்ச்சலைப்பற்றிக் கவனிக்க வேண்டியது அக்காலத்தில் இன்றியமையாததாக இருந்தது. இத்துறையில் அரசர் பெருமான் ஏற்படுத்திய வற்றில் மிகச் சிறந்தது, நிலங்களுக்குப் பாய்ச்சும் வண்ணம் நீரைச்சேகரித்து வைத்தற் கிடமாக

அவன் கட்டிய ஓர் ஏரியேயாகும். அவ்வேரி இரண்டு மலை யையும் சார்ந்திருப்பதால் அவற்றினின்று வரும் நீர் எல் லாம் அதில் வந்துபாய இடமுண்டு. இந்நீரும் போதா தென்று, ஒரு காதத்திற்கு அப்புறமிருந்து, தானே நிறைந்து வழிந்து பக்கத்து ஆற்றில் பாயும், அவ்வளவு நீர்கொண்ட ஓர் ஏரியிலிருந்தும், குழாய்கள் மூலமாகத் தண்ணீர் வந்து புதிதாகக் கட்டிய ஏரியில் பாய்ந்ததென் றும் இவ்வேரியைக்கட்ட, அது இருக்கும் இடத்திலிருந்த ஓர் குன்றையே அரசன் பிளந்தெரிந்தான் என்றும் பெயிஸ் என்பவர் கூறுகின்றார். இவ்வேரியைக் கட்டவே ஓர் போர்த்துக்கல் தேசத்துக் கல்சிற்பி ஒருவனை வேலைக் கமர்த்திக்கொண்டதாக நூனிஸ் மூலமாக அறிகிறோம்.

நீதி: பக்ஷபாத மில்லாமல் எல்லோர்க்கும் நியாய மாகவே அரசர் பெருமான் நடந்து கொண்டான். யானே னும் ஒருவர் அநீதியாக நடத்தப்பெறின் அவர் உடனே அரசர் பெருமான் எதிரில் நேராகச்சென்று தமது வருத் தத்தைத் தெரிவித்துக் கொள்ளலாம். அவரது வாக்கு மூலத்தைக் கேட்டபிறகு, அவரது ஊரையாளும் சேனாதி பதியை அழைத்து, குற்றவாளியைக் கண்டு பிடித்துத் தண்டிக்குமாறு அரசன் கட்டளை இடுவான். அவ்வாறு செய்யத் தவறினால் சேனாதிபதியையும், அவரது பொரு ளையும் பறிமுதல் செய்து விடுவது வழக்கம். தண்டனை களும் மிகக் கொடியனவாகவே இருந்தன. அரசாங்கத் தோர் சாதாரணமாகத் திருடர்களது, ஓர் காலையேனும், கையையேனும் வெட்டி விடுவர்; பெருங்கொள்ளையாக இருந்தால் மோவாய்க் கட்டையில் அள்ளிட்டுத் தூக்கிடு வதும் வழக்கம். ஒரு கன்னிகையோ அல்லது ஒரு ஸ்திரீயோ அவமானத்திற் குள்ளாக்கப்பட்டால் குற்ற வாளியின் தலைபோய்விடும். அரசருக்கு இரண்டகம் செய்

யும் சீமான்கள், கூரிய மாக்குச்சில் தங்கள் வயிறு குத்தப்பட்டுச் சாவர். கொலைகாரப் பாவிகளுக்கு மரண தண்டனையே. ஆனல் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் மரண தண்டனை என்பதில்லை. ஆனல் மற்றைய வகுப்பினர் சிறிய குற்றத்திற்கும் தலை வாங்கப்பட்டனர்.

சேனை: கிருஷ்ணதேவராயனது பெருமைக்கும், செல்வத்திற்கும் சீர்மைக்கும் சிறப்பிற்கும் காரணமாய் நின்றது அவனது சேனையே. ஆகையால் அவன் எப்போதும் போர் வீரர்களை அதிகமாகச் சேனையில் அமர்த்திக் கொண்டிருந்தது ஒன்றும் வியப்பாகாது. 35 ஆயிரம் குதிரைப்படை யுள்ளிட்ட 10 லக்ஷம் போர்வீரரை எக்காலத்தும் தன் சேனையில் வைத்திருந்தான் என்றும், வேண்டும் என்றால் அவன் 20 லக்ஷம் போர் வீரரையும் ஆயத்தம் பண்ணமுடியும் என்றும் பெயிஸ் கூறுகின்றார்.

கிருஷ்ண தேவராயனது சேனையானது சண்டைக் காலத்தில் மாத்திரம் கூட்டப் பெறும் படையல்ல. இருநூறு வருஷங்களுக்கு முன்னர் அநேகமாக ஐரோப்பாக் கண்ட முழுவதிலும் சண்டைக் காலத்தில் தான் படை திரட்டப்படுவது வழக்கமாய் இருந்தது. ஆனல், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இத் தென்னிந்தியாவில் பேரும் புகழும் பெற்றிருந்த நம் கிருஷ்ணதேவராயனது சேனை இக்காலத்திய சேனைகளைப்போல் என்றும் நிலையாய் நின்று மாதவாரிச் சம்பளம் பெற்று வந்தது. போர்க்காலத்தில் மாத்திரம் படையுடை தரித்துப் பணம் பறித்துத் தின்றதல்ல. இச் சேனைக்குப் போரே தொழிலாக இருந்தமையால் அது போரில் சிறந்து விளங்கியது ஒன்றும் வியப்பல்ல. சேனதிபதிகள் ஒவ்வொருவரும் பிறரினும் போர்த்திற மிக்க படையினைத் திரட்டிப் பயிற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர்; படையைப்

பயிற்றுவதில் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டனர். அச்சேனையில் சிறந்த காளையர் எல்லாம் இருந்தனர் என்றும், புறங்கொடுத்தோடும் புன்மையாளன் ஒருவனேனும் அப்படையில் அகப்படுவது அரிதென்றும் பெயிஸ் என்பவர் உரைத்துள்ளார் எனில் ராயனது சேனையைப் பற்றி என்ன என்று சொல்வது? ஜர்மனி தேசத்தில் முற்காலத்தில் போர்வீரரைப் பல நாடுகளினின்றும் தேர்ந்தெடுத்துப் பயிற்றிய ப்ராட்ரிக் என்பவரின் தலை சிறந்த சேனையோடு ராயாது சேனையை ஒப்பிட்டுப் பார்ப்பதொன்றும் குற்றமாகாது. அரசன் போர்வீரரைச் சேர்த்துக்கொள்ளும்போது மிக்க ஜாக்ரதையோடும் பரீக்ஷித்துச் சேர்த்துக்கொண்டான். அரசனது உத்தியோகஸ்தர்கள் ஒருவனைச் சேனையில் சேர்த்துக்கொள்வதற்கு முன், அப்போர்வீரனைக் கண்டு பிடிக்கக் கூடிய மச்சம் முதலிய அறிகுறிகளைக் கண்டறிந்து எழுதி வைத்துக் கொண்டனர்; அவனது உயரத்தையும் அளந்து குறித்துக் கொண்டனர்; அவனது பிறப்பு வளர்ப்பைப் பற்றியும் அவனது பரம்பரையைப் பற்றியும் கூட அவனுடைய சம்பளப் புத்தகத்தில் எழுதி வைத்தனர். இவ்வளவும் செய்தமையால் சேனையை விட்டு ஓடிப்போவது எவர்க்கும் இயலாததாயிற்று. அப்படியும் ஒருவன் ஓடிப்போவானானால் அவனுக்கு மிகக்கொடிய தண்டனையே பயனாகும். சேனாதிபதிகள் அனுப்பிவைக்கும் சேனை போதாதென்று ராயன் தனது வருவாயினின்றும் ஓர் படையைத் திரட்டி வைத்திருந்தான். அவனுக்கு வருமானமாக வந்த 60 லக்ஷத்தில் பாதிக்கு மேற்பட்ட பணத்தைத் தனது பெரும் கஜதுரகபதாதிகளுக்காகச் செலவிட்டனன். இவன் சேனையில் தேர்ப்படை இருந்ததாக ஒருவரும் எழுதிவையாமை

நாம் இங்கே குறிப்பிடத்தக்கதாம்; அவன் காலத்தில் தேர்ப்போர் வழக்கொழிந்து வீழ்ந்தது போலும்.

அவனது சேனைக் குதிரைகள் பணக்கார சேனுதிபதிகளுடமையாயினும் அவை மற்றையோரது குதிரைகளைவிட அழகாகச் சிங்காரிக்கப் பெற்றிருந்தன. அவை உடன் முழுவதும் உடுக்கப் பெற்றிருந்தன. அவைகளது நெற்றியில் வெள்ளியாலும், பொன்னுலும் செய்யப்பட்ட பட்டங்கள் கட்டப்பெற்றிருந்தன. „கடிவாளங்கள் நன்ருகத் திரித்த பட்டுக் கயிறுகள்தான். குதிரைவீரர்கள் மெத்தென்றிருக்கும் உட்சட்டையையும் அதன்மேல் இருப்புத்தகட்டை உட்கொண்ட மற்ருேர் சட்டையையும் அணிந்துகொண்டிருந்தனர். அவர்கள் தமது இடுப்பில் வாளும், மழுவும் வேலும் செருகிவைத்து இருந்தனர்.

யானைகளுங் கூட உடன் முழுதும் உடை கொண்டு விளங்கின. அவைகளினது தந்தத்தில் கத்திகள் கட்டி வைத்திருப்பது வழக்கம். ஒவ்வொரு யானையின் மேலும் உள்ள அம்பாரியில் ஈட்டியும், கேடகமும் தாங்கிய மூன்று அல்லது நான்கு வீரர்கள் உட்கார்ந்திருப்பர்.

காலாட்படையானது மூன்று வகையாகப் பிரிக்கப் பட்டிருந்தது. கேடகத்தோர் தம் முடற்காப்பாகப் பெரியதோர் கேடகந் தாங்கி, வாளேந்திப் போர் புரிந்தனர். வில்லாளர் வில்லும் அம்பும் ஏந்தி வந்ததோடு, இடுப்பில் குறுவாளும், மழுவும் செருகி வைத்துச்சண்டையிட்டனர். துப்பாக்கியினர் துப்பாக்கி கொண்டு பகைவரைச் சுட்டுக் கொன்று தமது போர்த்திறத்தைக் காட்டினர்.

எல்லைப் புறங்களைக் காப்பது இன்றியமையாததாகக் கருதி அவற்றை உயிர் நிலைபோல் அரசன் பாதுகாத்து வந்தனன். அவன் பிஜபூரினின்றும், ஒரிஸாவினின்றும்

தான் எப்போதும் சண்டையை எதிர்பார்ப்பது. அக்காலத்தில் அப்பக்கமாகத்தான் பகைஞர் வந்து விஜயநகரத்தை எதிர்க்க ஆரம்பிப்பது. ஒரிஸாவும் பிஜபூரும் கிருஷ்ண தேவராயனைக் கால் தட்டிவிடச் சமயம் பார்த்துக் கொண்டே இருந்தன என்பதை நாம் மறத்தலாகாது. ஆனால் கிருஷ்ணதேவராயன் இதை அறியாதவனல்ல. எப்போதும் தன் படைகளில் சிறந்தனவற்றைப் போரில் பேர்பெற்ற தலைவர்கள் வசம் அனுப்பி, பிஜபூர் ஒரிஸா என்ற நாடுகளுக்கும் விஜயநகரத்திற்கும் இடையில் உள்ள மலைக்கணவாய்களை நன்கு பாதுகாக்குமாறு அவற்றை அங்கேயே வைத்திருந்தனன்.

இவ்வளவும் கூறியதால் கிருஷ்ணதேவராயன் தனது படைகளை எவ்வளவு இன்றியமையாதனவாகக் கருதினான் என்பதும், அவன்பெற்ற வெற்றிகள் எல்லாம் இப்படைகளின் உதவியால் தான் என்பதும் நன்கு தெளிவாகின்றன. இப்படைகளைப்பற்றி அறியாத முன்னர்க் கிருஷ்ண தேவராயன் பெற்ற வெற்றிகள் தெய்வீகமாகவும் அற்புதங்களாவும் புராணக் கதைகளாவும் தோன்றும். ஆனால் அவனது படைத்திறத்தின் இரகசியத்தை அறிந்த பின்னர் எல்லாம் பட்டம்பகல் வெட்டவெளிச்சமாய் விளங்குகின்றன வன்றோ?

## 9--அதிகாரம்

### விஜயநகரமும் அதன்கணுள்ள மாளிகைகளும்

விஜயநகரம், ஆதியில் மிகவும் கைதேர்ந்த சிற்பிகளால் கட்டப்பட்ட அழகிய நகரமாகும். அந்த நகரம் பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நிலைமையிற்றான் இருந்ததென்று பல அயல் நாட்டு வர்த்தகர்

கள் எழுதி யிருக்கின்றனர். அவர்களுள் வார்த்திமர் என்னும் யாத்திரைக்காரர், 'அந்த அழகிய விஜயநகரமானது, நரசிங்கன் என்னும் மன்னனுக்குச் சொந்தமானது. அது மிகவும் பலமுள்ள பெரிய சுவர்கள் அரணுகச் சூழக் கட்டப்பெற்ற பெரிய நகரமாகும். அந்த நகரம் ஒரு மலையின் பக்கத்தில் அமைந்து, கண்டவர் கண்ணைக்கவரும் அழகும் நல்ல வளப்பமும் உடையதாயும், ஏழு மைல் விஸ்தீரண முள்ளதாயும் உள்ளது. அதற்கு வெளிப்புறத்தில் மூன்று மதில்கள் சூழ இருத்தலால், அந்நகர் மூன்று பிரகாரங்களின் மத்தியில் விளங்குகிறது. அது நீர் வளத்தானும் நிலவளத்தானும் மிகவும் சிறந்து விளங்குவது. அதனை நாம் பூலோக சுவர்க்கமென்றே சொல்லவேண்டும். அவ்விடத்தில் எல்லாப் பொருள்களும் கிடைக்கும் அங்குக் கிடைக்காத பொருள், உலகிலேயே இல்லையென்று தான் சொல்ல வேண்டும். அது மிகவும் பெரியதோர் வியாபார ஸ்தலமாகும். பல தேசங்களிலும் உள்ள வியாபாரிகள் அனைவரும் அவ்விடத்தில் வந்து தான் செல்வவான்களாய்த் திரும்ப வேண்டும். அந்த நகர் மிக்க சுகாதார அமைப்புடையதாய் விளங்குவது. அது அமைந்துள்ள இடம் அவ்வளவு பார்வைக்கினிமையாய் எங்கும் பசும்புற்றரைகள் விளங்க உள்ளது. அதன்கண் தென்னை, கமுகு, வாழை முதலிய மரங்கள் அணி அணியாகச் சூழ்ந்துள்ளன. அந்த நகர்க்கண் வேட்டையாடுவதற் கெனத் தனியாக ஓரிடமும், கோழி, ஆடு, காடை முதலியவற்றைச் சண்டை மூட்டிக் கண்டு களிக்க ஓர் தனியிடமும், கோழிகளை வளர்க்க வேறோர் இடமும் தனித்தனியாக அமைந்துள்ளன'' என்று சொல்கிறார். பார்போசா என்னும் மற்றொரு யாத்திரைக்காரரும், அவர் கூறுவது போலவே சொல்வதுடன், "விஜய

நகரம் குடிவளமுடையதாய், ஒரு பக்கத்தில் பெரிய ஓர் சுவரும், மற்றொரு பக்கத்தில் ஒரு ஆறும், மற்றைய பக்கங்களில் மலையும் சூழ விளங்குவது. அது மேடும் பள்ளமுமில்லாத ஓர் சமவெளிக்கண் அழகுபெற அமைந்துள்ளது. அவ்விடத்திற்றான் நரசிங்கராஜன் எப்போதும் வாசம் செய்து வந்தான். அவன் குடிகளிடத்தில் அதிக விஸ்வாச முடையவன். அன்றியும் அவன் எவரிடத்தும் சாந்தம், தயை முதலான உயர் குணங்களைக் காட்டி வந்தனன். அவனிடத்தில் பொறுமை என்னும் குணம் விசேஷித்திருந்தது. அவன் அந்த நகரில் வேலைப்பாடமைந்த பல அரிய பெரிய அரண்மனைகளை உடையவனாக இருந்தான். அந்த அரண்மனைகளுள் சிலவற்றில் நியாயஸ்தலங்களும், ஆலோசனைமண்டபமும் பிறவும் அமைந்திருந்தன. அந்த அரண்மனைகளுள் பலசெய்குன்றுகளும், அளவில்லாத மச்சங்கள் நிறைந்த சிறுதடாகங்களும், அரிய மூலிகைகள் நிறைந்ததோட்டங்களும், பழந்தரும் மாஞ்செடிகள் நிறைந்த தோப்புகளும், அழகும் வாசனையும் பொருந்திய பலநிறப் புஷ்பச்செடிகள் நிறைந்த பூந்தோட்டங்களும் உள்ளன. அந்த நகர்க்கண் பல கோடீஸ்வரரது மாளிகைகளும் அலங்கார முடையனவாய்க் கண்டவர் கண்களையும் மனதையும் கவரும் வனப்புடையனவாய் அமைந்துள்ளன." என்று மேலும் சிறப்பித்துச் சொல்லியுள்ளார். ஆதலால் இந்த இரண்டு யாத்திரைக்காரர்களது வார்த்தையைக் கொண்டு, நாம் இந்த விஜயநகரம் ஆதியில் எவ்வளவு சிறப்புடையதாய் இருந்ததென்னும் உண்மையை இனிது தெரிந்து கொள்ளலாம்.

அத்தகைய மேன்மையமைந்த நகர்க்கண் கோயில்கள், மடாலயங்கள், கடைவீதிகள், அரண்மனைக்கட்டிடங்கள், குடிகள் வாசம் செய்யும் வீடுகள், ஸ்தம்பங்கள்,

கோட்டைகள் ஆகிய பலவகை அமைந்த கட்டிடங்கள் பல நிறைந்திருந்தன. இனிநாம் அவ்வொவ்வொரு கட்டிடத்தின் பெருமையையும் எடுத்துச் சொல்வோம்.

**கோயில்கள்** :—இவை அந்த நகர்க்கே பெரிய ஆபரணங்களாய் நின்று அதனை அழகுபெறச் செய்தன. அந்நகர்க்கண்உள்ள கோயில்களுக்கு அளவேயில்லை. ஒவ்வொரு கோயிலும் மிகவும் பெரியதாகவும் வேலைப்பாடமைந்ததாகவும் இருந்தது. அவற்றுள் மிகவும் புராதனமானவை, சமணர் கோட்டங்களாகும். அந்தச் சமணர் கோட்டங்கள் அனைத்தும், சமணசாஸ்த்ரக்யகட்டிட ஒழுங்கில் அமைந்திருந்தன. மற்றைய எண்ணிறந்த கோயில்கள் அனைத்தும், திராவிடக் கட்டிட அமைப்பின்படி அமைந்து விளங்கின. அவை பொதுவில் திராவிட அமைப்பின்படி அமைந்திருப்பினும் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான வேலைப்பாடுடன் விளங்க இருந்தன. இந்தக்கோயில்களுள் மிகவும் பெரியவை அனைத்தும், அனேகமாகப் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் கட்டப்பட்டவையேயாகும்.

அத்தகைய பெரிய கோயில்களுள் மிகவும் பழமையானது பம்பாபதி சுவாமி கோயிலாகும். அந்தக் கோயிலுள் மிகவும் பழைமையான வேலைப்பாடுகள் அமைந்திருக்கின்றன என்றாலும், அதன் முக்யமான இடங்களில் உள்ள வேலைப்பாடுகள் எல்லாம் பின்னுள்ளாரது கைத்திறமையாலேயே அமைந்தனவாகும். தென்னிந்தியாவில் உள்ள பெரிய கோயில்களின் அமைப்பும் வேலைப்பாடுகளும், இந்தக் கோயிலின்கண் பெரிதும் அமைந்திருக்குமாற்றால், இது தமிழ தேசத்துச் சிற்பிகள் நிர்மாணம் செய்ததென்றே சொல்லவேண்டும். கிருஷ்ணராயன், தனது பட்டாபிஷேகத்தின்போது, இந்தக் கோயிலின்

கண் ஒருமண்டபத்தையும், கோபுரத்தையும் கட்டி முடித்த னன். மற்றும் அவன் ராஜ்யாதிபதியானவுடன், அந்தக் கோயிலின்வாயிற் கண்ணுள்ள பெரிய கோபுரத்தையும், அதற்கு அடுத்த பிரகாரத்தில் உள்ள கோபுரத்தையும் கட்டினன். அந்தக் கோயில் இரண்டாவரணத்துடன் கூடியது. அவ்விரு ஆவரணமும் இடையே ஒரு பெரிய மதிற்சுவரால் பிரிபட்டிருக்கின்றன. அவற்றுள் ஒரு ஆவரணம் கிழக்கிலும் மற்ருென்று மேற்கிலும் அமைந்துள்ளன.

கிருஷ்ணசாமி கோயில் என்பது மற்ருெரு கோயில். அது மிகவும் அழகாகவும் வேலைப்பாடு அமையவும் கட்டப் பட்டது. இது அந்நகர்க்கண்ணுள்ள கடைவீதியின் கோடியில், அஃதாவது ஹம்பிகோயிலுக்குத் தென்பாகத்தில் அமைந்துள்ளது. கமலாபுரத்திலிருந்து ஹம்பிநகரத்திற்குச் செல்லும் பெரியவழி இந்தக் கோயிலின் தெற்குப்பக்கத்துக் கோபுரவாயிலைத் தொட்டுள்ளது. இந்தக்கோயிலைக் கிருஷ்ணராயன் உதயகிரியைக் கைப்பற்றியபின் கட்டி முடித்தான். அவன் உதயகிரியைக் கைப்பற்றியகாலையில், அவ்விடத்து ஒரு கிருஷ்ணவிக்ரஹத்தையும் கண்டெடுத்தான் என்றும், அந்த விக்ரஹத்தை அவன் தன்னகர்க்குக் கொண்டுவந்து, அதற்கென இக்கோயிலைக் கட்டி, இதில் அந்த விக்ரஹத்தை எழுந்தருளச்செய்தான் என்றும் சில சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். அந்தக் கோயிலின் அமைப்பைக் காணும்போதும், அதன்கண் அமைந்துள்ள வேலைப்பாடுகள் அனைத்தும் ஒரேகாலத்திருந்தவரால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலனுகிறது. அதற்கு நான்கு பக்கங்களிலும் கோபுரவாயில்கள் உண்டு. அதனுள் இருக்கும் மஹாமண்டபம், கைதேர்ந்த சிற்பிகளின் வேலைத்திறங்கள் அமைய விளங்

குவதுடன், அது அந்தக் கோயிலுக்கே பெரிய அலங்கார மாயும் விளங்குகிறது.

அந்தக் கிருஷ்ணசாமி கோயிலுக்குத் தென்மேற் காகச் சிறிது தூரத்தில் மிகவும் பெரியதோர் நரசிம்ம சாமி விக்கிரஹம் இருக்கிறது. அது சிலேயினுல் ஆயது. அதன் உயரம் ஏறக்குறைய முப்பது அடி இருக்கும். அது ஆதியில் ஒரு பிராமணனுல் செய்யப்பட்ட தென்றும், அதற்கு நித்திய நைமித்திக பூஜைகள் நடக்கக் கிருஷ்ண ராயன் 1519-ம் வருஷத்தில் பொருளுதவி செய்தனன் என்றும், அந்த விக்ரஹத்தின் அருகேயுள்ள ஒரு கல் வெட்டுச் சொல்கிறது.

அந்த நகர்க்கண் விளங்கும் ஒருகுன்றின் அடிவாரத்தில் அச்சுதராயசாமி கோயில் என்னும் மற்ருேர் கோயில் இருக்கிறது. அதன் அமைப்பும் வேலேப்பாடுகளும், அனேகமாகக் கிருஷ்ணசாமி கோயிலேயே ஒத்துள்ளன. ஆதலால், அந்தக் கோயிலேயும் அனேகமாகக் கிருஷ்ண தேவராயன் கட்டி யிருக்கலாம் என்பது சிலருடைய துணிபு.

அரண்மனே வேலிக்குள்ளாக, அஃதாவது அரண் மனேக் கட்டிடத்தின் தெற்கில், மிகவும் பெயர்வந்த ஹஸாராமசாமி கோயில் விளங்குகிறது. இந்த ஹசாராமசாமி கோயில்தான் கிருஷ்ணராயன் தானும் தன் உறவினரு மாத்திரம் வணங்குவதற்கெனத் தனியாகக்கட்டிய கோயிலாகும். இது அவனுல் கி. பி. 1513-ம் வருஷம் கட்டப்பட்டது. அது அளவில் சிறியதாக இருந்தபோதிலும், அதன்கண்ணுள்ள வேலேப்பாடுகளின் பெருமை அளவு கடந்தது. அந்தக் கோயிலின்கண்ணுள்ள மண்டபங்களிலும், மண்டபக்கால்களிலும், சுவர்களிலும் ராமாயணக் கதைகளே விளக்கும் உருவங்கள் மிகவும் அழகாக வெட்

டப்பட்டுள்ளன. அந்தக் கோயிலின் அர்த்தமண்டபத்தில் அமைந்துள்ள நான்கு ஸ்தம்பங்களும் மழமழப்புடனும் மெருவுடனும் கூடியனவாய், திராவிட சிற்பிகளின் அளவு கடந்த திறமையைக் காட்டி நிற்கின்றன. அந்தத் தூண்கள் நான்கையும் இப்போது செய்யவேண்டுமானுல், ஏறக்குறைய லக்ஷரூபாய் செலவாகுமென்றும், அங்ஙனம் செலவிட ஒருவர் முன்வரினும், அத்தகைய வேலையைச் செய்வோர் அரிதென்றும் நிபுணர்கள் சொல்கின்றனர்.

துங்கபத்திரா நதிக்குக் கீழ்க்கரையில் விட்டலசுவாமி கோயில் என்னும், மகத்துவமிக்க கோயில் ஒன்றுளது. அதை 1530-ம் வருஷத்தில் அச்சுதார்யன் என்பவன் கட்டத் தொடங்கினன். ஆனுல் அது அவன் காலத்தில் முற்றுப்பெருமல், ராமராயன் என்னும் அரசனுல் 1561-ம் வருஷத்தில் முடியவாயது. கிருஷ்ணராயன் 1513-ம் வருஷத்தில் அந்தச் சுவாமிக்குப் பல ஊர்களைத் தத்தம் செய்தனன் என்று சரித்திரக்காரர் சொல்வதால், அப்போது அந்தக்கோயில், பிரகாரங்கள் இல்லாத மூலஸ்தானமொன்றுடன் அமைந்ததாக இருத்தல் வேண்டும். அந்தக் கோயிலின் வேலைப்பாடுகளும் மிகவும் புகழத்தக்கனவாகும். மகமதியர்கள் அந்த நகரைப் படையெடுத்து வந்த பிற்காலத்தில், இந்தக் கோயிலின் வேலைப்பாடுகளையும் அழகையும் கண்டு பொருமைகொண்டுதான், அந்த நகரையே தரைமட்டமாக்க முற்பட்டனர்.

கடைகள் :—அந்த நகர்க்கண் இருந்த கடைவீதிகளுள் மிகவும் முக்கியமானது ஹம்பிகோயிலுக்கு எதிராக உள்ள கடைவீதியேயாகும். அது எண்ணூறுகஜம் நீளமுள்ளது. அந்த வீதியுள் அமைந்துள்ள கட்டிடங்கள் அனைத்தும், இந்தியவீதியின் சிறப்பான அமைப்பைக் காட்டக்கூடியனவாய், வரிசையுற அமைந்திருந்தன. மற்

றொரு கடைவீதி கிருஷ்ணசாமிகோயிலிலிருந்து கீழ்ப் பக்கமாக அமைந்திருக்கிறது. அங்குள்ள வீடுகள் அனைத்தும் மேல்மாடியுடன்கூடியன. மற்றொருகடைவீதி அச்சுத ராயசாமி கோயிலுக்கு வடக்காகப் போகிறது. இவை மூன்று வீதிகளே இப்போதும் அழியாமல் உள்ளன. மற்றவை எல்லாம் அழிந்துபோயின வாயினும், அவையிருந்த அடையாளங்களும், அவ்வீதிகளுள் இருமாளிகைகளின் உடைபொருள்களும் இன்னும் காணக் கிடக்கின்றன.

அரண்மனைக் கட்டிடங்கள் :—அக்காலத்திய அரண்மனை முற்றும் அழிந்துபோய்விட்டன என்றாலும், இப்போதும் நாம் காணக்கிடக்கும் அழிவுபட்டுள்ள மண்டப முதலியவற்றால், அவற்றின் பெருமையை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். அந்த அரண்மனைக்கண் குறிப்பிடத்தக்க பெருமைவாய்ந்த, மஹாநவமி சிம்மாசனம் என்னும் பெயருடைய மேடையொன்று சலவைக்கல்லினால் கட்டப்பட்டுச் சிதறுண்டிருக்கிறது. விஜயநகரத்தரசர்கள், தாம் நவராத்திரி பூஜைமுடித்து மறுநாள் விஜயதசமியன்றுமாத்திரம், அந்தச் சிம்மாசனத்தில் வந்து அமர்வது வழக்கம். அது மிகவும் உயரமாய் அமைந்துள்ளது. அதில் அரசர்கள் வந்தமர்ந்தவுடன், எதிரில், மல்யுத்தக்காரர்கள், கத்தியாடுவோர் முதலானோர் தத்தம் திறமையைக் காட்டுவர். அப்போது அவ்வரசர்கள், அவரவர் திறத்திற்கேற்றபடி பரிசுகள் தருவர். அந்தமண்டபத்துள் எங்குக் காணினும் சித்திரவேலைப்பாடுகளும், செதுக்கப்பட்ட போர்வீரரது பிம்பங்களும் உள்ளன. சில இடங்களில், வேட்டையை விளக்கும் உருவங்களும், நாட்டியம் செய்யும் பெண்களின் உருவங்களும் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ளன.

அந்த அழிவுபட்ட அரண்மனைக்கண் அரசன் தங்கியிருப்பதற்கெனக் கட்டப்பட்ட பிரதான இடமும் ஒன்று. அந்த இடத்திற்கு விஜயபுவனம், வெற்றிவீடு என்பன பெயர். கிருஷ்ணராயன், பிரதாபருத்திரனை வென்றபின், அதனைக் கட்டி முடித்தனன். இப்போது, அது அழிந்து போய்விட்டதானாலும், அதன் அஸ்திவாரமும், அந்த அஸ்திவாரத்தின் மேற்பரப்பும், இப்போதும் உள.

அந்த அரண்மனையுள் மற்றொரு முக்யமான கட்டிடம் மந்திராலோசனைச் சபாமண்டபமாகும். அது இரண்டடுக்குடனும் ஒன்பது கோபுரங்களுடனும்கூடிய மாளிகையாகும். அந்த மாளிகைக்கண்ணுள்ள சுவர்களுள் பல செப்புக் குழாய்கள் வைக்கப்பட்டுள்ளன. அவை தற்காலத்திய தூரசிரவணக் குழைகளின் அளவை ஒத்திருப்பன ஆதலின், அக்குழைகளும் அக்காலத்தில் அக்கருத்துப்பற்றியே வைக்கப்பட்டுள்ளன என்று கருதவேண்டும்.

அக்காலத்தில் ஜலவசதியின் பொருட்டுத் தண்ணீர்க் குழாய்களும் இருந்தன என்பதற்கு, அந்த அரண்மனையே இப்போதும் சான்றாக இருக்கிறது. அந்த அரண்மனை இருந்த இடத்தின் பலபாகங்களில் தண்ணீர் சேமிக்கும் தொட்டிகளும், அந்தத் தொட்டிகளிடத்துக் குழாய்களும் உள்ளன. அரண்மனைக்குச் செலவாகும் ஜலமுழுவதும் கமலாபுரத்தில் உள்ள ஏரியிலிருந்து குழாய்மூலமாய் வந்துகொண்டிருந்தது. அந்தக் குழாய்களிற் சில, சதுரமாகக் கட்டப்பட்ட நீர்த்தொட்டிகளுக்கு நீரைக்கொண்டு போக அமைந்துள்ளன. அந்தத் தொட்டியின்மேலிருந்து கீழ்வரையிலும் படிகளும் கட்டப்பட்டுள்ளன.

குடியிருப்பு வீடுகள் :—மேற்கூறிய கடைவீதிகளில் பெரும்பாலும் குடியிருப்புவீடுகளின் அடையாளங்களைக் காணலாம். இந்த வீடுகள் பலவற்றிலும் அனேகமாகச்

செல்வவான்களே இருந்தனர் என்று தெரிய வருகிறது. சாதாரண ஜனங்கள் முக்யவீதிகளைச் சுற்றியுள்ள நிலங்களில் கட்டப்பட்டுள்ள மண்குடிசைகளில் வாசம்செய்திருந்தனர் என்று தெரிய வருகிறது. ராஜவீதிக்கணுள்ள அரசரின் அழகுபொருந்திய மாளிகைகளைத்தவிர, அங்குவாழும் பெரிய தனவந்தரின் மற்றைய மாளிகைகளும் மிகவும் பெரிதாகவும் அழகுடையனவாகவும் விளங்கி இருந்தன. மற்றைய வீடுகள் எல்லாம் கூரை வீடுகளாகவும், சிறிய மெத்தையுடன்கூடிய வீடுகளாகவும் இருந்தன.

சமாதிகள் :—பல போர்வீரர்கள், ஞானிகள், புலவர்கள் முதலானோரது பிரேதங்களை அடக்கம்செய்த இடங்களில் பல சமாதிக்கட்டிடங்களை இப்போதும் காணலாம். அவை அனேகமாகக் கீழ்வரையில் கமான் வளைந்த ஒரே கல்லினால் கட்டப்பட்டவை.

அரண்கள் :—இரண்டாந் தேவராயன் ஆட்சிசெய்து வந்தகாலத்தில், விஜயநகரத்திற்கு விஜயம்செய்த, அப்துர் ரஸக் என்பவர் 'நகரத்தைச்சுற்றிப் பல சுவர்வரிசைகள் இருந்தன.' என்று கூறுகிறார். ஆனால், வார்த்திமன் என்பவர், அந்த நகரத்தைச்சுற்றி மூன்றுசுற்றுச் சுவர்களே இருந்தன என்று அந்த அரணைவரையறுத்துள்ளனர். முக்கிய அரணின் விஸ்தீரணம் ஏறக்குறைய பதினறு மைல் இருக்கும். அந்தச்சுவர் மிகவும் பலமுடையதாகப் பெரிய கற்களால் கட்டப்பட்டவை. அவற்றில் அழகுடனும் பலத்துடனும் அமைந்த பலவாயில்கள் இருந்தன. அந்த மதிற்சுவர்களுள் பல கோபுரங்களும் இருந்தன. அந்தக் கோபுரங்களுள், ஆயுதபாணிகளான போர்வீரர்கள் இருந்து, அந்த நகரைக் காவல்செய்துவந்தனர்.

# 10—அதிகாரம்

## சமுதாய, செல்வ நிலைமைகள்.

---

முன் அதிகாரத்தில் யாம், கோயில்கள், அரண்மனைகள் முதலான இடங்களைப் பற்றிப் பொதுவில் வெளிப்போக்காகக் கூறினோம். இனி அவ்வவ்விடங்களில் இருந்த குடிகளின் தினசரி வாழ்க்கையையும், சமுதாய நிலைமையையும், செல்வ நிலைமையையும் பற்றிக் கவனிப்போம்.

ஜனவகுப்பு:—விஜய நகரத்தில் வாழ்ந்து வந்தவர் அனைவரும் பல வகுப்பினராய் இருந்தனர். அவர்களுள் முதலாவது வகுப்பைச் சேர்ந்தவர் பிராமணர்களாவர். அந்தப் பிராமணர்களும் இரண்டு பெரும் பிரிவினராக இருந்தனர். அவர்களுள் முற்றிலும் வைதீக விஷயங்களில் ஈடுபட்டவர்கள் முதற் பிரிவினைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பல சாஸ்திரங்களையும் கற்றறிந்தவாரய்ப் புரோகித முதலான தொழில்களைச் செய்து வந்தனர். அவர்கள் மாம்சங்களையும் மச்சங்களையும் உண்பதில்லை. ஏக பத்னி விரதர்களாகவே தங்கள் காலத்தைக் கழித்தனர். அவர்கள் ஒருமனைவி இருந்தால், மற்றொருத்தியை மணக்கும் வழக்கற்றவராய் இருந்தனர். அவர்களுடைய சொத்துக்கள், அவருடைய சந்ததியாருக்கே உரிமையானவை. அவர்கள் அந்தணர் என்ற சின்னத்திற்காக மார்பில் முப்புரிநூல் அணிந்திருந்தனர். அவர்கள் எத்தகைய குற்றத்தைச் செய்யினும், அவர்களுக்கு மரண தண்டனை கிடையாது. அவர்கள் மிகவும் சுவாதீனர்களாயும் சுக புருஷர்களாயும், ஜனங்களால் பெரிதும் போற்றப்பட்டவர்களாயும் இருந்து வந்தனர். அவர்களுக்கு அடிக்கடி பிரபுக்களும் மன்னர்களும் குடிகளும் தரும் தானதருமப்

பொருள்கள், அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்தன. அவர்களுட் பலர் பெரிய தனவந்தர்களாக இருந்தனர். மற்றவர்கள் அந்த நகரில் பலவாயிருந்த மடங்களுக்கு அதிபதிகளாக விளங்கியிருந்தனர்.

அந்த பிராமணர்களுள் இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் நியோகிகள் என்றழைக்கப் பட்டனர். அவர்கள் பெரும்பாலும் லெளகீக விஷயங்களில் தலையிட்டிருந்தனர். நிர்வாக விஷயங்களில் அவர்கள் மிகவும் சமர்த்தர்கள். எனவே, அவர்களுட் சிறந்தவரை அரசர்கள் தங்கள் ஊழியத்தில் அமர்த்திக் கொண்டனர். அவர்களுட் சிலர், அந்த ராஜ்யத்தைச் சார்ந்த மாகாணங்களை ஆண்டு வந்தனர். மற்றவர்கள், பெரிய வியாபாரிகளாகவும், வர்த்தகர்களாகவும் இருந்தனர். உதாரணமாகக் கிருஷ்ணராயனது சிறந்த மந்திரியும், தளகர்த்தனுமாயிருந்த சாலுவதிம்மன் என்பவன், ஒரு நியோகி பிராமணனே யாவன். ராயனது சபைக்கண்ணிருந்த பண்டிதர் பலரும் இந்த வகுப்பைச் சேர்ந்தவரேயாவர். நகரத்திருந்த முக்ய பிரமுகர்களிலும், பெரும் பிரபுக்களிலும் சிலர் இந்த வகுப்பினைச் சேர்ந்தவராகவே யிருந்தனர்.

பர்போசா என்பவர், தங்கள் கழுத்தைச் சுற்றிப் பட்டுக் கயிற்றில் முட்டை யளவினதாகிய கல்லைக்கட்டி யணிந்துள்ள ஒரு சாதியாரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர் கூறுவது லிங்கம் கட்டிகளாகும் வீரசைவர்களையேயாம். இவர்களுக்கு நாட்டில் மிகுந்த மதிப்பு அந்தக் காலத்தில் இருந்து வந்தது. அவர்கள் கழுத்தில் அணிந்துள்ள லிங்கத்திற்கு மரியாதையாக, அவர்கள் என்ன குற்றம் செய்தபோதிலும், அக்காலத்திய அரசர்கள் அவர்களைத் தண்டிப்பதில்லை. அவர்களும் முற்கூறிய பிராமணர்களைப் போல் மச்சமாம்சங்களை யுட்கொள்வதில்லை.

அவர்கள் நிர்ப்பயமாக ஒரு ராஜ்யத்தினின்றும் மற்றொரு ராஜ்யத்திற்குச் சென்று வியாபாரச் சரக்கையும், பொருளையும் கொண்டு வருவர். கள்ளர்களும், அவர்கள் கழுத்தில் அணிந்துள்ள லிங்கத்திற்குப் பயந்தவராய், அவர்கள் பொருள்களை அபகரிப்பது கிடையாது.

பிராமணர்களுக்கு அடுத்த படியில் விளங்கியவர் க்ஷத்திரியர். அவர்கள் போர்வீரர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அரசனும் மற்றைய அதிகார வர்க்கத்தினரும் இந்தப் பகுப்பினையே சார்ந்தவராவர். சேனையைச் சேர்ந்த போர்வீரருட் பெரும்பாலாரும் இந்தச் சாதியினரே. அந்தக் காலத்தில் பிராமணர்களும் போர்த் தொழிலை மேற்கொண்டிருந்தது உண்மையேனும், அநேகமாக இந்த க்ஷத்திரியர்களே போரில் மேம்பட்டு விளங்கினர். அந்த க்ஷத்ரியருக்கு அடுத்தபடியாய் நின்றவர் வைஸ்யரும் சூத்ரர்களுமாவர். அவர்களுள் வைஸ்யர், வியாபாரத்தையே தமது தொழிலாகக் கொண்டு விளங்கினர். சூத்ரர்கள், பெரும்பாலும் உழவுத் தொழிலையே செய்து, அதனால்வரும் ஊதியத்தைக் கொண்டு பிழைத்து வந்தனர்.

அந்த நகர்க்கண் முற்கூறிய சாதியினரே யன்றி வேற்று மதஸ்தர்களும் வசித்து வந்தனர். அந்த நகர் ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக விளங்கியதால், அதன் கண் பல வேற்றூர் ஜனங்களும், அயல் நாட்டினரும் வந்து குடியேறினர். அயல் நாட்டினருள் பெரும்பாலோர் மகமதியர்களும், போர்த்துக்கேசியரும், யூதருமாவர். அவர்கள் அந்நிய சாதியாயிருந்தும் அந்த நகர்க்கண் ஒருவித வேற்றுமையு மில்லாதபடி வாழ்ந்து வந்தனர். தற்காலத்தில் ஆளுஞ்சாதியார், ஆளப்படுஞ்சாதியார் என்று இருக்கும் பேதம் அந்தக் காலத்தில் சிறிதும் இல்லை

யாயது. அதனால், அந்த அன்னிய சாதியாரும், உள்ளூ ராரைப்போல் எல்லாச் சுதந்தரங்களும் உடையவராய், வியாபார முதலிய தொழில்களைச் செவ்வனே நடத்தி வந்தனர்.

வீடுகள் :—முன்னர் யாம் கூறியது போல், பணக்காரர்கள் பெரிய மாளிகைகளில் வாசம் செய்து வந்தனர். அந்த மாளிகைகள் அனேகமாக அரண்மனைகளை ஒத்திருந்தன. அவையனைத்தும் முக்கிய வீதிகளிற்றான் நிலை பெற்றிருந்தன. ஏழைக்குடிகள் ஓடு வேய்ந்த வீடுகளிலும், களிமண் சுவரிட்டு மேலே ஓலைக் கூரையுடைய வீடுகளிலும் வாசம் செய்து வந்தனர். அந்த நகர்க்கண், ஓடுக்குடன் கூடிய வீடுகள் லக்ஷத்திற்குக் குறையாமல் இருந்தனவாம்.

உணவு :—பிராமணர்கள் கொல்லப்பட்ட பொருள்களை உணவென உட்கொள்வதில்லை. அவர்களுக்கு முக்ய மான உணவுப் பொருள்கள், அரிசி, காய், கறி, வெண்ணெய், பால், தயிர், சர்க்கரை முதலியனவேயாம். வாழை, மா, பலா, கிச்சிலி, திராக்ஷ முதலிய கனிவர்க்கங்கள் இவ்விடத்தில் விசேஷமாக அகப்படுமாதலால், அவையும் அவர்களுக்குப் பிரியமான உணவா யிருந்தன. வீர சைவர்களும் அந்தணர்களைப்போல் மச்ச மாம்சங்களை உட்கொள்வதில்லை. அவர்களும் சுத்தமான ஆகாரத்தையே உண்டு வந்தனர். அரசனும் பிராமணரல்லாத மற்றைய பெரிய பணக்காரர்களும், ஆடு, மான், முயல், காடை, வாத்து, கோழி முதலியவற்றின் மாம்ஸங்களை உண்ணும் பழக்கமுடையவரா யிருந்தனர். வேட்டையிற் கிடைக்கும் மிருகங்களையும் பக்ஷிகளையும் உயிருடன் கொண்டு வந்து வேடர்கள் விற்றுச் செல்வர். இறந்து பட்ட பக்ஷிகளையும் மிருகங்களையும், உண்ணுவோர் வாங்க

மாட்டார்கள். கடை வீதிகளில் ஆட்டு மாம்ஸம் ஏராள மாகவும் விலை சரசமாகவும் கிடைக்கும். அந்தக் காலத் தில் ஒரு பொன் கொடுத்தால் பன்னிரண்டு செம்மறியாடு கள் கிடைக்கும். மலைக்குன்றுகளிலும், நகர்ப்புறங்களி லும் பதினுன்கு அல்லது பதினைந்து ஆடுகள் ஒரு பொன் கொடுத்துப் பெறலாம். அந்த ஊரில் உணவின் பொருட் டுத் தினந்தோறும் கொல்லப்படும் ஆடுகளுக்கு அளவே யில்லை. ஒவ்வொரு கசாப்புக் கடைகளிலும், ஆட்டுக்கறி மலைபோல் குவிக்கப்பட்டிருக்கும். தினந்தோறும் சூர் யன் உதயமாந் தருணத்தில் மலைக்குன்றுபோல் குவிக்கப் பட்டிருக்கும் ஆட்டு மாம்ஸம், அதி காலையிலேயே விற் றுப் போகுமென்ருல், அவ்வூரிலிருந்த குடிகளின் அளவை யாம் என்னென்று கூறுவது? அவ்வூரில் உள்ளார் பசுக் களைத் தெய்வமெனத் தொழுது வந்ததால், அவற்றை எவரும் வதை செய்தலாகாது. எந்தச் சாதியாரேனும் கோ வதை செய்வாராயின், அவர்கள் உடனே அரசனது தண்டனைக்குட்பட வேண்டியவரே.

உடை:—செல்வவான்கள் உடை அனேகமாக ஆடம் பரமில்லாததாயினும், விலை யுயர்ந்ததாகவே இருந்தது. அவர்களுட் சிலர் பட்டு வஸ்திரங்களையும், சிலர் பருத்தி நூலால் நெய்யப்பட்ட வஸ்திரங்களையும் தரித்திருந்தனர். அவர்கள் அரையில் பஞ்சகச்சம் வைத்தே வேஷ்டி கட் டிக் கொள்வது வழக்கம். அந்த வேஷ்டிக்கு மேல், மார் பை மூட ஒரு குறுகிய சட்டையையும் அணிந்து வந்த னர். அந்தச் சட்டை அவர்கள் தொடை வரையில் தொங்கும் நீளமுடையவை. தலைக்குப் பட்டினுற் செய்த தொப்பியை அவர்கள் உபயோகப்படுத்தினர். தோளில் பட்டினுலேனும் பருத்தி நூலாலேனும் செய்யப்பெற்ற ஆடையை அங்கவஸ்திரமாக அணிந்திருந்தனர். அவர்

கள் பாதரக்ஷையின்றி நடப்பது மிகவும் அருமை. எங்குப் போகவேண்டுமென்றாலும், அவர்கள் பாதக்குறட்டையே காலில் அணிந்து செல்வர். ஏழைகள் முற்கூறியவர்கள் போல் அல்லாது சாதாரண உடையையே தரித்திருந்தனர். அவர்கள் ஒரு துண்டு வஸ்திரத்தை அறையில் மாத்திரம் கட்டிக்கொண் டிருந்தனர். அவர்களது மற்றைய அவயவங்கள் அனைத்தும் மூடுபடாமலே இருந்தன. பணக்காரர்கள் தங்கள் அவயவங்களுட் சில பாகங்களை விலையுயர்ந்த நகை கொண்டு அலங்காரம் செய்துகொள்ளும் வழக்க முடையவராயு மிருந்தனர். அவர்கள் கழுத்திலும் கரத்திலும் பொற்சங்கிலியையும், காதில் விலையுயர்ந்த ரத்னங்கள் இழைக்கப் பெற்ற கடுக்கன்களையும், கையில் காப்பையும், விரல்களில் பல நிறக்கற்கள் வைக்கப் பெற்றுப் பிரகாசிக்கும் மோதிரங்களையும் அணிந்திருந்தனர். அவர்கள் வெளியே போகும்பொழுது, அவர்களுக்குப் பின்னால் ஒரு வேலையாள் குடை பிடித்துச் செல்வான்.

பெண்கள் :—இந்தியாவின் மற்றைய பாகங்களைப் போலவே, விஜய நகரத்திலும் பெண்கள் அறைக்குள் கட்டுப்பட்டவராக இருந்துவந்தனர். அவர்களுள் பலபேர் அனேகமாக அந்த வீட்டையன்றி வெளியே ஓரிடம் இருக்கிறது என்னும் உணர்ச்சியும் இல்லாதவராய் இருந்து வந்தனள். அனேகமாகப் பெண்கள் அவ்வூரில் வெளி வருவதே கிடையாது. அவர்கள் வாசம் செய்யும் வீடே அவர்களுக்கு உலகம். செல்வச்சீமாட்டிகள் அபூர்வமாக எப்போதாவது வெளியே போகநேரிட்டால், அவர்கள் மூடுபல்லக்கில் ஏறியே செல்வர். அந்த மூடுபல்லக்கைச் சுமப்போர் ஏழை ஆண் மக்களே. ஆனால், அரச குடும்பத்துப் பெண்கள் வெளியே செல்லும்போது மாத்

திரம், அவர்கள் ஊர்ந்து செல்லும் பல்லக்கைப் பணிப் பெண்கள் சுமந்துசெல்வர். அவர்கள் அழகிய வர்ணங்களுடன் கூடியதும் பட்டினுலேனும் நூலினுலேனும் நெய்யப்பட்டதுமான ஆறுமுழநீளமுள்ள புடவைகளைத் தற்காலத்திற் பெண்கள் உடுத்திக் கொள்வதுபோலவே உடுத்திக்கொண் டிருந்தனர். அவர்கள் காலில், சரிகைவேலையமைந்த பாதரக்ஷைகளைப் பூண்டிருந்தனர். தலைமயிரை நன்ருகச் சீவி முடிச்சாகத் தொங்கவிட்டு, அந்தமுடிச்சில் வாசனை நிறைந்த புஷ்பங்களை அணிந்து வந்தனர். அவர்கள் மூக்கில் மூக்குத்தி யொன்றும் நல்ல முத்துக் கட்டப்பெற்ற புலாக்கு என்னும் ஆபரணமும் அலங்காரம் செய்து நின்றன. அவர்கள் காதில் மிகப் பெரிய ரத்னங்கள் இழைக்கப்பெற்று உருவில் பெரிதான கம்மல்களையும், விரல்களில் நவரத்னங்கள் இழைக்கப்பெற்றமோதிரங்களையும், கழுத்தில் பொற்சரட்டில் கோக்கப்பேற்ற பொற்ருலியையும், விலையுயர்ந்த பதக்கமிணைக்கப்பெற்ற அட்டிகைகளையும் அணிந்திருந்தனர். அன்றியும் அவர்கள் கழுத்தில் உருவில் மிகப் பெரிதான பவளமாலையும் விளங்கியது. இடையில் பொன்னுற் செய்து ரத்னங்கள் பதிக்கப்பெற்ற ஒட்டியாணமும் விளங்கியது. அவர்கள் கால்களில் கொலுசு, பாதசரம் என்னும் ஆபரணங்களையும் கால்விரல்களில் பொன்மோதிரங்களையும் அணிந்திருந்தனர். ஏழைப் பெண்கள், வெள்ளிநகைகளையும், மணிகள் கோவைகளையும் தரித்திருந்தனர்.

விவாகம் :—அரசனும் அவன் உறவினரும், பிரபுக்களும், மற்றும் அந்த நகர்க்கண் முக்யஸ்தர்களும், தங்கள் மனம்போனபடி பல பெண்களை விவாகம் செய்துகொள்ளும் வழக்கம் உடையவராய் இருந்தனர். அந்தப் பல பெண்களின் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகள் எல்லோ

ரும் தத்தம் தகப்பன் சொத்துகளுக்குரியவரே யாவர். முதன் மனைவியின் வயிற்றிற்பிறந்த பிள்ளைக்கே சொத்துரிமை உண்டென்னும் வழக்கில்லை. பிராமணர்கள், ஒரே மனைவியைத்தான் மணம் செய்துகொள்ளவேண்டும். முதல் மணந்த மனைவி யிறந்தபோதுங்கூட அவர்கள் மறு விவாகம் செய்துகொள்ளும் வழக்கம் அற்றவராய் இருந்தனர். அந்தக் காலத்தில் ஒரு மனைவிக்கு மேலாக மற்றொரு மனைவியை மணம்செய்து கொள்ளுதல் சாஸ்திரவிருத்தமென்று அவர்கள் கருதினர். லிங்கங்கட்டிகளான வீரசைவர்களும் அந்தணர்களைப்போல ஏகபத்னி வாழ்க்கையராய் இருந்துவந்தனர். ஆனால் அந்தக்காலத்தில், பெற்றோர்கள் தமது பெண்களின் இஷ்டத்திற் கிணங்கவே வரன்களைத் தேடும்வழக்கமுடையவராய் இருந்தனர். பெற்றோர் ஓர்வரனை நல்லவனென அறிந்து, அவனுக்குத் தமது பெண்ணைக் கொடுக்க இசையும்போது, அந்த வரனை மணந்து கொள்ள அந்தப்பெண் சம்மதிக்காவிட்டால், உடனே பெற்றோர்கள் அந்தச் சம்பந்தத்தைச் செய்ய முயற்சி செய்யக்கூடாது. அப்படி அவர்கள் செய்வாராயின், அந்தக்காலத்துச்சட்டம் அவர்களுக்குத் தண்டனையையும் தந்துவந்தது.

புருஷன் இறந்துபோவானாயின், அவனுடன் மனைவியும் உடன்கட்டை யேறிவிடுவாள். அந்தக்காலத்தில் இறந்த கணவனுடன் மனைவியும் உயிர்துறத்தல் மிக்க கௌரவத் தொழிலெனக் கருதப்பட்டது. அதனால் அந்தக்காலத்தில் பெண்கள் அனைவரும், தமது கணவன்மார் இறந்தகாலத்தில் உடன் உயிர்விடுதலைக் கட்டாயமாய்த் தாம்செய்யவேண்டியதோர் கடமையென எண்ணி யிருந்தனர். கணவன் இறந்தபின், தாம் உலகில் இருந்து ஒரு பயனையும் அவர்கள் அடையப்போவ தில்லையென்றும்,

கணவனுடன் உடன்கட்டையேறினுல் சொர்க்கலோகப் பிராப்தி உண்டென்றும் அவர்கள் பூரணமாய் நம்பியிருந்தனர். ஆதலால் அவர்கள் தங்கள் கணவன்மாருடலத்தை எரிப்பதெற்கென வெட்டவெளியில் தோண்டப்பெற்ற பெரிய தீக்குழியிற் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்வர். கணவன்மாரது பிரேதம் வீட்டைவிட்டுப் போம்போது, அவர்கள் மஞ்சள் ஆடையணிந்தும், குழலில் புஷ்பங்கள் சூடியும் உடன்செல்வர். பிரேதம் சவக்குழியில் வைக்கப் பட்டவுடன், உறவினர் முதலானோர் அந்தப் பெண்கள் கையில் நெய்யூற்றுவர். அந்த நெய்யைப்பெற்ற அவர்கள், கடவுளை நினைத்துக்கொண்டே சவக்குழியை மும்முறை வலம் வந்து, காத்திலுள்ள நெய்யைச் சுடர்விட்டெரியும் குழியில் ஊற்றி யுடனே தாமும் அக்குழியில் பாய்ந்துவிடுவர். செல்வவந்தர்களது மனைவிமார், சிலவேளைகளி[illegible] முடைய பொருளை நல்வழியில் உபயோகப்படு[illegible] பாடு செய்வதற்காக, உறவின்முறையாரிடம் சி[illegible] களுக்குப்பின் தாம் தீப்பாய்வதாகக்கூறி, அவர்க[illegible] தத்தையும் பெறுவது வழக்கமாயிருந்தது. செல்[illegible] இறந்துவிடுவானுயின், உறவின்முறையார் அனைவரும் [illegible] காட்டிற்குச்சென்று, அங்குப் பெரிதாகத் தோண்[illegible] பெற்றுச் சந்தனமரக் கட்டைகள் இடப்பெற்ற [illegible] யண்டை வந்து சேர்வர். அப்போது இறந்தவனது ம[illegible] யும் வந்து நிற்பள். அவள் கையிலும் உறவின்மு[illegible] நெய்யை ஊற்றுவர். நெய்யைப்பெற்ற அவள்முன் கூ[illegible] யதுபோல் தீயை வலம்வந்து, அதிற் பாய்வள். உட[illegible] அருகிலிருந்து உறவின்முறையார் மேலும் நெய்க[illegible] குடம்குடமாகச் சாய்த்துச் சந்தனக்கட்டைகளைக் குழியில் நிரப்புவர். அங்ஙனம் செய்வதால் அரைக்கணத்துள் பிரேதங்கள் இரண்டின் உடலும் சாம்பராகிவிடுமாம். சிலர்,

பிரேதங்களைப் புதைக்கும்வழக்கமுடையவராயும் இருந்தனர். அப்போதும் பெண்கள் தமது கணவனுடலுடன் உயிருடன் புதைக்கப்படுவர். அவர்களுக்குத் தாங்கள் உயிருடன் புதைபடப்போகிறோமே என்ற வருத்தம் சிறிதும் இருந்ததில்லையாம்.

அரசன், மனைவிமார்களையேயன்றி மேலும் பல மாதரை அரண்மனைக்கண் மெய்க்காப்பாளராக வைத்திருந்தனன். அவர்கள் ராணியாருக்கு அந்தரங்கத் தோழிகளாக இருந்து நன்கு மதிக்கப்பட்டு வந்தனர். அந்தப்புரச்சீர்திருத்தங்களும் பிறவும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. அவர்களே ராணிகளுக் கடுத்தபடியில் எவ்வித அதிகாரங்களையும் செலுத்தி வந்தனர். அவர் ...ழதன்முதலாக அவ்வேலைக்குத் தேர்ந்தெடுக்கும் பெண்ணை அரசனே நேராக அவர்கள் குணகுணங்களை மண... உயர்குலப் பிறப்பையும் ஆராய்வன். அந்தப் உட...கள் அனைவரும் அந்த நகர்க்கண்ணிருந்த செல்வ முயற்...து பெண்களாகவும், உயர்குடியிற்பிறந்தவராகவுமே ...இருந்தனர். அவர்களுட்சிலர், தாங்கள் நன்றி யறித ...டன் மன்னனிடத்தில் நடந்துகொண்டதற்கு கைம் ...ருகப் பலவூர்களை இனமாகப்பெற்று வாழ்ந்துவந்தனர். ...வர்கள் அனைவரும் சங்கீதவித்தையில் தேர்ந்தவர்கள். ...இல முக்யமானதினங்களில் அவர்கள் தங்கள் தங்கள் சங்...தப்பயிற்சியால் அரசனைச் சந்தோஷத்திற்குள்ளாக்கி ...வனிடம் பல பரிசுகளைப்பெறும் வழக்கமுடையவராக ...ம் இருந்தனர். முக்யமாக, மஹாநவமிபோன்ற தினங்களில், அவர்களுக்கு மன்னன் அளவுகடந்த வெகுமானப் பொருள்களைத் தருவன். இந்தப்பெண்களுள் சிலருக்குச் சிலம்பவித்தையிலும் பயிற்சி இருந்தது. சிலர் போர்

செய்வதிலும் மல்யுத்தம்செய்வதிலும், வெற்றி முரசங்களை முழக்குவதிலும் கைதேர்ந்தவரா யிருந்தனர்.

பணிப்பெண்கள் சமஸ்தானத்திற்குப் பலவழியாலும் உதவியாயிருந்தது இவ்விடத்தில் நாம் முக்யமாக அறிய வேண்டிய விஷயம். அரசன் சம்பளங்கொடுத்துப் பல பெண்களைத் தனது அரண்மனையில் வேலைக்கமர்த்தி யிருந்தனன். அவர்கள் அனைவரும் முற்கூறியவரைப் போல் உயர்குடியிற்பிறந்த செல்வச்சீமாட்டிகளே யாவர். அவர்கள் அடிக்கடி அரசனுக்கு ரகசியமான உளவுகளைக் கண்டறிந்து சொல்லியும் வந்தனர். இவர்கள் வார்த்தையில் அரசன் அதிக நம்பிக்கை வைத்திருந்தான். புறநாட்டில் நடக்கும் வியவகாரங்கள் அனைத்தையும் எப்படியும் இந்தப்பெண்கள் விசாரித்துவிடுவர். போர் சமயத்தில் இந்தப் பெண்களும் சேனைகளுடன் செல்வர். போரில் திறமைமிக்க வாலிபவீரர்கள் பலர் இருந்தனர். அவர்கள் அந்தப் பெண்களுள் தாம் காதலித்தவரைப்பெற உயிரைத் துரும்பெனமதித்துப் போர்செய்வர். அத்தகைய மேம்பாடமைந்த வீரருக்கு, அவர்கள் காதலித்தபெண்ணை அரசன் மணத்திற்கொடுத்து, அவர்களை மகிழச்செய்து வந்தான்.

மதமும் உற்சவாதிகளும்:—விஜய நகரத்தின்கண் மத சம்பந்தமான வாழ்க்கைநிலை இப்படித்தான் இருந்த தென்று குறிப்பிட்டுச் சொல்வதற் கியலவில்லை. என்றாலும் கிருஷ்ணராயன் தனது ஆட்சிக்காலத்தில் எல்லா மதஸ்தரையும் பேதமின்றிப் பாராட்டிவந்தனன் என்பது மாத்திரம் முக்யமாக நாம் அறியவேண்டிய விஷயமாகும். மகமதியர்களும், கிறிஸ்தவர்களும், யூதர்களும் சுயேச்சையாகவே இருந்துவந்தனர். அவர்களுக்கு மதவிரோதமான கார்யங்களைச் செய்ய எவரும் முற்படவில்லை. இங்

தியக் கொள்கையைத் தழுவிய சைவ வைணவ மதங்க ளாம் இரண்டும் தலைசிறந்து நின்றன. அவற்றுள்ளும் அக்காலத்தில் மிகவும் மேன்மைபெற்று விளங்கியது வைணவ மதமாகும். அந்தமதம் சிறப்புற்றோங்க இராமா னுஜரின் வழிவந்தவர்கள் பெரிதும் முயற்சி எடுத்துக் கொண்டனர். அவர்கள் செய்த முயற்சியின் பலனாக அக்காலத்திருந்த சைவர்கள் பலரும் வைணவமதஸ்தராக மாறிவிட்டனர். மாறி அவர்கள் வைணவ பக்தர்களாய், விஷ்ணுமூர்த்தியையே பரம்பொருளென மதித்து, அவ ரையே வழிபட்டுவந்தனர். கிருஷ்ணராயனது சமஸ்தான வித்வான்களுள் ஒருவனாகிய அலசானி பெத்தண்ணா என் பவனும் சைவமதத்தைவிட்டு வைணவ மதக்கொள்கையை மேற்கொண்டவனாவன். அவன் விஷ்ணுபக்தனாக மாறிய வுடன், விஷ்ணுவைப் புகழ்ந்து கூறும் பாக்களைத் தெலுங் கில் பாடத்தலைப்பட்டனன். கிருஷ்ணராயனும் ஆதியி லிருந்து வைணவக் கோட்பா டுடையவனாய், விஷ்ணு வையே புகழ்ந்து பாடியுள்ளான். சிலர் சிவவிஷ்ணுமூர்த் திகளை வணங்குதலேயன்றிக் காளிதேவியையும் வணங்கி வந்தனர். அவர்கள் அனைவரும் சக்தியே பெரியதெய்வம் என்னும் கொள்கையையுடைய சாக்தேயர்க ளாவர்கள். காளியை வணங்கும் காளிதாசர்கள், தமது வழிபடு கடவு ளுக்கு ஆடு, எருமை, எருது முதலியவற்றைப் பலியிட்டு வந்தனர். அந்தப் பலியிடும் கிரியை அனேகமாக நவராத் திரி யுற்சவ சம்பந்தமாகவே நடைபெற்று வந்தது.

அந்த நகர்க்கண் பலவகையாய உற்சவாதிகள் நடை பெற்று வந்தபோதிலும், அவற்றுள்ளும் மிகவும் புகழ்ச் சிக்குரியதாக விளங்கியது நவராத்ரி யுற்சவமேயாம். இந்த உற்சவம் வருஷந்தோறும் மஹாலய அமாவாசைக் கடுத்த தினத்திலிருந்து ஆரம்பமாவது. அந்த உற்சவம் அன்று முதல் ஒன்பதுநாள் நடைபெறும். பத்தாவதுநாள் விஜய தசமி நாளாகும். அன்றுதான் அரசரும் பிறரும் தத்தமது தொழிலைப் புதிதாகத் தொடங்குவர். அரசன் அந்த ஒன்பது நாட்களிலும், பிரதி காலையுமெழுந்து ஸ்நான

ஜெப சந்தியாவந்தனுதி கிரியைகளை முடித்துக்கொண்டு, "வெற்றிவீட்டை" யடைந்து, அங்குள்ள பிராமண புரோஹித ருதவியால் அங்கு அலங்காரம் செய்துவைத்திருக்கும் காளிக்குப் பூஜைசெய்வன். பத்தாவது நாளாகிய விஜயதசமியன்று, மன்னவன் தனது உறவின்முறையார் முதலானோர்சூழ மஹா நவமி சிம்மாசனத்தில் அமர்வன். அதன்பிறகு அதிகார வர்க்கத்தினரும் அவ்வூர் பிரமுகர்களும்வந்து, அவ்விடத்தில் அவரவருக்கென ஏற்பட்டுள்ள ஆசனத்தில் வந்தமர்வர். அவர்களுக்குப் பின்னுல் சேனுதிபதிகள் வரிசையாகவந்து, யானைகள் நிறுத்தப்பட்டுள்ள இடத்தைச் சூழ்ந்திருப்பார். அப்போது நாட்டியப்பெண்கள் தமது நாட்டியத் திறமையைக்காட்டி நடனம் செய்வர். நடன முடிவுற்றதும், மல்யுத்தம் நடக்கும். அந்த மல்யுத்தம் தற்காலத்திய மல்யுத்தத்தைப் போன்றதல்ல. அது மிகவும் கோரமானது. மல்யுத்தம் புரிவோர், பல்லுடைந்தும், சில சமயங்களில் மூர்ச்சையாய்ப் பேச்சுமூச்சுமற்றும் போவர். அவர்களுள் ஜயித்தோரிவர் என்றும் தோற்றவர் இவர் என்றும் கூறுதற்கு மத்தியஸ்தர்களாகச் சிலர் அவர்கள் அருகே இருப்பர். அக்கால்வெற்றியடைந்தோருக்கு அரசன் பல வெகுமானப் பொருள்களைக் கொடுப்பன். பிறகு வித்வான்கள் முதலானோரும் பரிசுபெறுவர். இந்த உற்சவம் முடிவடைந்த இரவு, பாணவேடிக்கைகளும் நடைபெறும். இப்படி சிறப்புடன் நடக்கும் நவராத்ரி உற்சவம் முடிவான பத்தாவதுநாள், மன்னவன் வெட்டவெளியில் நிற்கும் தனது சேனைகளைக் காணச் செல்வன். மன்னவன் போர்வீரரைக் கண்டவுடன் அவர்கள் மன்னனுக்கு மரியாதைசெய்வதற் கறிகுறியாக வெடிமுழக்கம்செய்து சந்தோஷமடைவர்.

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS